
கல்கி

KALKI 8-5-1977 75 காசு



புதிய ரெக்ஸோனா

உங்கள் சருமத்தைப் பராமரிக்கிறது...



மெருகு மிளிர வைத்திருக்கிறது.



இப்போது, எழில் கொஞ்சும் புது வடிவிலே, கையடக்கமாக வருகிறது புதிய ரெக்ஸோனா.

சருமப் பராமரிப்புக்கான நாலு இயற்கைத் தைலங்களின் கலவை அதிலுள்ளது: ஷ.டிா (தேவதாரம்), கருவா, கிராம்பு, சாமை. மேனி மின்னக் குளித்தெழுவீர்... நீராடிய உங்கள் மீது நாளெல்லாம் ரெக்ஸோனா மெல்லொளி சொரியும். காலெல்லாம் ரெக்ஸோனா நறுமண உறவு. குளித்துப் பாருங்கள் இன்றே.

புதிய ரெக்ஸோனா உங்கள் சருமத்திற்கு நல்லது.

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

லின்டாஸ்–RX 24 [illegible]


மூச்சுக்கு நேசம் க்ளோஸப் புதுமை,
பற்களின் உறவு க்ளோஸப் வெண்மை...
Close-up
ஜெல்லிபோல் சிகப்பொளிவீசும்
க்ளோஸப்
டூத்பேஸ்ட், மவுத்வாஷ் இரண்டும் ஒன்றாய் இணைந்தது
Close-up
Close-up
முகத்தோடு முகம்... மூச்சோடு மூச்சு... கிட்ட நெருங்க... ஒட்டி உறவாட... உமக்குத் தேவை புதிய க்ளோஸப். பற்பசைகளிலே ஒரு புத்தம்புதுமை. க்ளோஸப் புதுநயத்தை மூச்சிலே இழையவைக்கும் ஒரு மவுத்வாஷ், க்ளோஸப் வெண்மையினைப் பற்களில் குலவச்செய்யும் சிறப்புச் சாதனங்கள் இரண்டு— இவை யாவும் கூடியமைந்தது க்ளோஸப்.
மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம், குஜராத், கோவா, தமிழ்நாடு, கர்நாடகம், ஆந்திரப் பிரதேசம், கேரளம் ஆகிய மாநிலங்களில் தேர்ந்தெடுத்த சில நகரங்களில் மட்டுமே கிட்டும்.
நேசப் பிணைப்புக்கு க்ளோஸப்
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.
லிண்டாஸ்-CX-14-203 TM



தில்லி ரயில்வே போர்டு டைரக்டர் ஸ்ரீ V.K. ஸ்தாணுநாதன் அவர்களின் புதல்வன் சிரஞ்சீவி S. கிருஷ்ணனுக்கும், ஸ்ரீ B. ரங்கஸ்வாமி அவர்களின் *(Retd. Cashier, Indian Oxygen Ltd., Madras)* புதல்வி சௌபாக்யவதி **மங்களத்துக்கும்** 6-4-77 அன்று சென்னையில் திருமணம் விமரிசையாக நடந்தது.

வாழ்க மணமக்கள் !



கல்கி

1977 மே 8

பிங்கள ஞா

சித்திரை 26


ராஜாஜி சிந்தனை

தவம்

ஐம்புலன்களைக் கொண்டும் ஐம்புலன்களைக் கொண்டு அறிந்த உண்மைகளைப் பிரமாணமாக வைத்து அதன் மேல் யூகித்தும் அறியக்கூடிய வஸ்துக்கள் பௌதிக சாஸ்திர விஷயங்கள். இவற்றை மீறிய விஷயத்தை எப்படிக் காண முடியும், எப்படிக் காட்ட முடியும் என்பதே உலகத்தில் பல தேசங்களில் உண்டான மதங்களின் நோக்கமும் முயற்சியுமாம். ஆகையால்தான் மத நூல்களில் சொல்லப்படுகிற விஷயங்கள், பௌதிக சாஸ்திரங்களில் சொல்லப்படும் தெளிவான ஹேதுக்களையும் ஆராய்ச்சிகளையும் போல்இல்லை. வெறும் பிரத்யட்சப் பிரமாணத்தையோ யுக்தியையோ கொண்டு அறிய முடியாத இந்த விஷயத்தை ஆராய்ச்சி செய்யப் பக்தி வேண்டும். தியானம் வேண்டும், சாந்தி வேண்டும், நியமம் வேண்டும், தவம் வேண்டும் — என்று இவ்வாறு வேதமும் மற்ற தரும நூல்களும் சொல்கின்றன. பக்கத்தில் உள்ள ஊருக்குக் கால் நடையாகப் போய்ச் சேரலாம்; தூரமாயிருக்கும் ஊருக்கு நம் காலை உபயோகிக்காமல் வண்டியும் மாடும் கொண்டு போய்ச் சேர்க்கும். மரத்தின் மேல் ஏறுவது வேறு; கிணற்றில் இறங்குவது வேறு. புஷ்பத்தைக் காதுக்குள் வைத்தால் வாசனை வித்தியாசம் தெரியாது. அழகிய படத்தை மூக்கினால் முகர்ந்தால் அழகு தெரியாது. இந்திரியங்களுக்கு அடங்காத ஒரு பொருளை மனத்தில் விளங்கச் செய்வது, இந்திரிய அனுபவங்களின் மேல் நாட்டிய பரிசோதனை முறைகளாலும் பிரமாணங்களாலும் ஆகாத காரியம். ஆகையால் பரமார்த்திக விஷயங்களை ஆராய்ச்சி செய்யப் பக்தியும், நியமமும், சுத்தமும், தியானமும், கடவுளை வந்தித்தலும், தவமும் வேண்டும்.. தவம் என்றால் புறக் கரணங்களையும் அகக் கரணங்களையும் அடக்கி மனத்தை ஒருவழிப்படுத்தி நிறுத்துவது; உடலைத் துன்புறுத்துவது அன்று. —**கண்ணன் காட்டிய வழி**

கல்கி சந்தா

	ஒரு வருடம்	ஆறு மாதம்
	ரூ.பை	ரூ.பை
இந்தியா	38.00	19.00
இலங்கை (இலங்கை நாணயப்படி)	38.00	19.00
வெளிநாடுகள்	90.00	45.00


ஜனதா
ஜனநாயக
காங்கிரஸ்
சில அமைச்சர்கள் இராஜிநாமா
ஜனதா அரசு நடவடிக்கை
அர்ஸ்
அது ஒன்னுமில்லீங்க!..
மூட்டைப்பூச்சி தான்!
மருந்து அடிச்சா போயிடும்!
சி. எஸ்

வேலை செய்யும் உரிமை

க. சந்தானம்

ஜனதா கட்சி தனது தேர்தல் அறிக்கையில் பாரத நாட்டுப் பிரஜை ஒவ்வொருவருக்கும் வேலை செய்ய உரிமை உண்டு என்பதை அங்கீகரித்துள்ளது. கூடிய விரைவில் இந்த லட்சியத்தை அடைய இயன்ற வரை சிறப்பாகச் செயலாற்றுவதாக வாக்குறுதி அளித்துள்ளது. இது கடினமான காரியம்தான் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அத்தியாவசியமானது. தீர்க்கமாக யோசித்துத் திட்டமிட வேண்டிய பணி. இதை நிறைவேற்ற சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதன் மூலமும் ஓரளவு அதிக வரி விதிப்பின் மூலமும் பணம் திரட்ட வேண்டும். மக்களின் வேலை பெறும் உரிமை அரசியல் சாசனத்தின் முப்பத்தொன்பதாம் ஷரத்தில் காணப்படுகிறது.

வேலையில்லாமல் திண்டாடும் ஏராளமான மக்கள் நியாயமான வருவாயுடன் கூடிய வேலை கிடைக்க வேண்டும் என்றுதான் எதிர்பார்ப்பார்கள். ஆனால் புதிய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் வேலை இல்லாத் திண்டாட்டத்தைச் சமாளிக்க வேண்டும். விவசாயப் பணிகள் சுருசுருப்படைந்துள்ள காலத்தில் ஒன்றியம், அடுத்து வரப் போகும் வேலையில்லாக் காலத்துக்குத் திட்டம் வகுக்க வேண்டும். இத் திட்டத்தில் பலவித நீர்ப்பாசனப் பணிகளுக்கு முதலிடம் தர வேண்டும். அடுத்து சாலைகள் அமைப்பதும் மரங்கள் நடுவதும். மூன்றாவதாகப் பள்ளிகள், மருத்துவ விடுதிகள், விளையாட்டுத் திடல்கள் அமைப்பது முக்கியத்துவம் பெறலாம். இவை போன்ற திட்டங்கள் கிராமப்புற வாழ்க்கை மேம்பட உதவும். அதே சமயம் அடுத்த பலப்பல ஆண்டுகளுக்குப் பகுதிக் கால வேலை வாய்ப்புக்களும் ஏற்படும். கணக்கு வழக்குகள் சரிவர வைத்துக் கொள்ளப்படுகின்றனவா, பணம் விரயமாகாமல் இருக்கிறதா என்று கண்காணித்துக் கொண்டால் போதும். பஞ்சாயத்து ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் கிராமங்களில் வசூலாகும் நில வரி, இதர வரிகளி

கல்கி மலர் 36 இதழ் 41

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற — எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

அரசு உதவியுடன் அசாதாரண முறையில் வேலை பெறுபவர்களுக்குக் கொஞ்சம் சம்பளம் குறைத்தே கொடுக்கலாம். இது அவர்கள் இயல்பான முறையில் தாங்களாகவே நல்ல வேலை தேடிக் கொள்ளத் தூண்டுகோலாக அமையும்.

வேலையில்லாத் திண்டாட்டம் இந்தியாவில் இரண்டு விதம். இவற்றைத் தனித்தனியே அணுக வேண்டும். கிராமப் புறங்களில் சில பருவங்களில் மட்டுமே வேலையில்லாத் திண்டாட்டம் நிலவும். விவசாய வேலைகள் சுருசுருப்படையும் பருவங்களில் வேலைக்கு ஆட்கள் கிடைப்பது கூடச் சிரமமாக இருக்கும். ஆகவே வேலையில்லாத் திண்டாட்டத்தைக் கிராமப்புறங்களில் வருடத்தில் நூறு முதல் நூற்றைம்பது நாட்கள் வரை சமாளித்தால் போதுமானது. இக் கால அளவு வட்டாரத்துக்கு வட்டாரம் அந்தந்தச் சூழலுக்கு ஏற்ப மாறுபடும். சுமார் பத்து கிராமங்கள் அங்கம் வகிக்கும் ஒரு பஞ்சாயத்து ஒன்றியம் இந்தப் பகுதிக் கால வேலை வாய்ப்புத் திட்டத்துக்குப் பயன்படுத்தலாம். அதிகப்படியாகத் தேவைப்படும் தொகையை மாநில, மத்திய அரசுகள் வழங்க வேண்டும். ஒவ்வொரு பஞ்சாயத்து ஒன்றியத்திலும் முதலாண்டு ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு என்று தொடங்கி, படிப்படியாக அடுத்து வரும் ஆண்டுகளில் அதிகரித்துக் கொண்டே போகலாம்.

லிருந்து ஒரு பகுதியை இந்த

நகர்ப்புறங்களில் வேலை இல்லாத் திண்டாட்டம் என்பது வேறு விஷயம். இங்கே வேலையற்றவர்களை மூன்று விதமாகப் பிரிக்கலாம். விசேஷமான படிப்பறிவோ அல்லது வேலைத் திறனோ இல்லாதவர்கள் ஒரு வகை. இவர்களுக்கு நகரசபை அல்லது மாநகராட்சி வேலை தேடித்தரும் பொறுப்பை ஏற்க வேண்டும். சாலைகள் பழுது பார்த்தல், நகரைச் சுற்றிலும் பூங்கா வனங்கள் அமைத்தல், பால் பண்ணைகள் உருவாக்குதல் போன்ற காரியங்களை இவர்களை முன்னிட்டுத் தொடங்கி நடத்த

வேண்டும். தொழிற்சாலைகளில் பணியாற்ற வல்ல விசேஷத் திறன் படைத்தவர்கள், கைவினைஞர்கள் ஆகியோர் மற்றொரு வகை. இவர்களுக்கு வேலை தருவதுதான் மிகவும் சிரமம். இதற்குப் பொறுப்பேற்பவர்கள் தங்கள் ஆற்றல் முழுவதையும் காண்பித்தாலன்றி வெற்றி பெற முடியாது. ஒரு பொறி இயல் நிபுணர், ஒரு கணக்காயர், பொது வாழ்வில் ஈடுபட்ட ஒருவர் ஆகிய மூவர் ஒரு குழுவாக அமைந்து இந்தப் பொறுப்பைச் செவ்வனே நிறைவேற்றலாம்.

கடைசியாகப் படித்து விட்டு வேலையில்லா திருப்பவர்கள். இவர்களில் ஒரு சாரார் விசேஷத் தேர்ச்சியின்றிப் பொதுவான கல்விபெற்றிருப்பவர்கள். இவர்கள் குமாஸ்தாக்களாகவோ அல்லது பள்ளி ஆசிரியர்களாகவோ தான் விளங்க முடியும். பொறி இயல் துறை, மருத்துவத் துறை போன்றவற்றில் விசேஷத் தேர்ச்சி பெற்று வேலை, இன்றித் தவிப்போர்— இன்னொரு சாரார். இவர்களை யெல்லாம் வேலையில் அமர்த்துவதெனில் பெரிய அளவில் திட்டமிட்டு ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

வேலையில்லாத் திண்டாட்டத்தை எப்படிச் சமாளிக்கலாம் என்பதற்கு ஒரு மேலெழுந்த வாரியான யோசனையையே நான் தந்திருக்கிறேன். கடக்க வேண்டிய எத்தனையோ சிக்கல்கள் உள்ளன என்பதை உணர்ந்திருக்கிறேன். ஆனால் மத்திய, மாநில சர்க்கார்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கும் கடமை தங்களுக்கு இருப்பதை உணர்வார்களேயானால் தேவையான பணத்தை இதற்கு ஒதுக்கிச் சீரான நிர்வாக அமைப்பை ஏற்படுத்தியே தீர வேண்டும். ஜனதா அரசின் வெற்றி அல்லது தோல்வியை இந்த அதிமுக்கியமான அம்சத்தின் அடிப்படையிலேயே மக்கள் நிர்ணயிப்பார்கள்.

விகாரமான விவகாரம்

ஒரு கிரிமினல் வழக்கில் சில கர்நாடக மாநில மந்திரிகள் தலையிட முயன்றது உண்மையெனில் அது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகிறது. கர்நாடக மாநில பிரதம நீதிபதி கவனிக்க வேண்டிய விஷயமாகிறது. ஆனால் அதனை அவர் இன்னும் திறமையான விதத்தில் கையாண்டிருக்கலாம். எல்லா விவரங்களையும் தெளிவாக இந்தியாவின் பிரதம நீதிபதிக்குக் கடிதம் எழுதித் தெரிவித்திருக்கலாம். அதன் நகலை அவர் மத்திய சட்ட அமைச்சருக்கும் கர்நாடக முதல் மந்திரிக்கும் அனுப்பி யிருக்கலாம். அதை விடுத்து ஒரு சொற்பொழிவினிடையே இதைக் கூறியும் பிறகு பத்திரிகையாளர்களைக் கூட்டியும் பேசியிருக்க வேண்டாம்.

அதே போல் மாநில முதல்வரும் பிரதம நீதிபதியை அமைச்சர்களின் பெயர்களை வெளியிட மறுத்ததற்காக அனைவரும் அறிய அம்பலத்தில் குற்றம் சுமத்தி யிருக்க வேண்டாம். இந்தியப் பிரதம நீதிபதிக்கும் மத்திய சட்ட அமைச்சருக்கும் எழுதி, முழு விவரங்களையும் அவர்கள் கேட்டுப் பெற வேண்டும் என்றும் தேவையானால் விசாரணை நடத்த வேண்டும் என்றும் கோரியிருக்கலாம். தொட்டாலே விரிசல் காண்பதுபோன்ற இத்தகைய பிரச்னைகளில் சரியான நடவடிக்கை எடுப்பது மட்டும் முக்கியமல்ல; எந்த விதமாக நடவடிக்கை எடுப்பது என்பதும் முக்கியம். முறையான விசாரணை நடக்கும் என்றும் மந்திரிகள் கிரிமினல் வழக்கில் தலையிட்டது உண்மை என்று நிரூபிக்கப்பட்டால் அவர்கள் பதவியிலிருந்து விலகுமாறு கோரப்படுவார்கள் என்றும் எதிர்பார்ப்போம்.

— க. சந்தானம்


உண்மைச் சம்பளம் என்ன?

ஸ்ரீமதி இந்திரா காந்தி பிரதமராக இருந்த போது அவர் பயன்படுத்தி வந்த இரு வீடுகளையும் தொடர்ந்து அவர் உபயோகிப்பது எனில் மாதம் இருபத்தையாயிரம் ரூபாய் வாடகை தரவேண்டி யிருக்கும் என்றும், ஆகவே, அவர் வேறு மலிவான வாடகை உடைய வீட்டுக்குக் குடிபெயரப் போகிறார் என்றும் செய்திகள் கூறுகின்றன.

இதிலிருந்து நமக்கு ஒரு விஷயம் தெரிய வருகிறது. வீட்டின் வாடகை, சோபா, கட்டில் முதலியவற்றின் கிரயங்கள், ஏர்-கண்டிஷன் செய்வது போன்ற இதர செலவினங்கள் எல்லாம் இப்போது சரிவரக் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை என்பதே அது.

மந்திரிகள் வசதிகள் பெறுவதை யாரும் ஆட்சேபிக்கப் போவதில்லை. ஆனால்அவர்களுக்காக என்ன செலவு ஆகிறது என்று தெரிந்து கொள்ள இந்திய மக்களுக்கு உரிமை உண்டு. இந்த வசதிகளை யெல்லாம் சரியாக மதிப்பிட்டு மந்திரிகளின் சம்பளத்துடன் சேர்க்க வேண்டும். அப்படிச் சேர்த்தால் இப்போதுள்ளதை விட மூன்று அல்லது நான்கு மடங்கு அதிகச் சம்பளம் பெறுகிறவராவார்கள். அது பற்றிப் பாதகம் இல்லை. ஆனால் மற்ற தனியார் நிறுவனங்களில் உள்ள உயர் அதிகாரிகள்தாம் ஏதோ ரொம்ப அதிகமாக வசதிகளைப் பெறுகிறார்கள் என்றும் மந்திரிகள் பெறும் வசதிகளுக்கு ஆகும் செலவு மிகக் குறைவு என்றும் ஒரு மாயத் தோற்றம் ஏற்படுத்தக் கூடாது. இந்திய அரசில் மந்திரி பதவி என்பது பெரிய உத்தியோகம். அதற்கு ஏற்ப நிறைய ஊதியம் பெறுவது நியாயமே. ஆனால் உண்மையில் பெறுவதில் மூன்றில் ஒரு பங்குதான் பெறுவது போல் பாவனை பண்ணுவது மந்திரிகளுக்கு அழகல்ல; தேசத்துக்கும் பெருமையல்ல.

— க. சந்தானம்



லோக வாழ்க்கை ஒரு பாலைவனம். இந்திரியங்களுக்குச் சுகம் மாதிரி இதிலே தோன்றுகிறதெல்லாம் கானல் நீர்தான்.

பாலைவனத்தையும், கானல் நீரையும் உவமையாகச் சொல்வதிலே இன்னொரு பொருத்தம் கூட இருக்கிறது. ஒரு பிரதேசம் பாலைவனமான பின் அதிலே ஜலம் என்பதே இல்லை. பொய் ஜலம்தான் கானல் நீராகத் தெரிகிறது. ஆனால் அந்தப் பிரதேசம் பாலைவனமாவதற்கு முன் எப்படி இருந்தது என்பதற்கு ஜியாலஜியில் சொல்வதைக் கேட்டால் ஆச்சரியமாக இருக்கும். ஆதியிலே பெரிய ஜலாசயங்களாக, நீர் நிலைகளாக, சமுத்திரமாக இருந்த இடங்கள்தான் பிற்பாடு பல மாறுதல்களால் பாலைவனங்களாகி விட்டன என்று பூதத்துவ சாஸ்திரத்தில் ஆராய்ச்சி செய்து விளக்குகிறார்கள். முக்கியமாக இப்போது பாலைவனமாக இருக்கிற பிரதேசங்களைத் தோண்டிப் பார்க்கிற போது, அவற்றில் சமுத்திரங்களிலேயே வாழக் கூடிய திமிங்கிலங்கள், மீன்கள் முதலியவற்றின் எலும்புகள், கிளிஞ்சல் சிப்பிகள் முதலியன கிடைக்கின்றன. இதனால் ஆதி காலத்தில் பெரிய நீர் நிலைகளாக இருந்தவைதான் இன்றைய பாலைவனங்களாகி யிருக்கின்றன என்று தெரிகிறது. ஒவ்வொரு சமயங்களில் ஏற்பட்ட பூகம்பம் முதலான பெரிய சலனங்களால் சமுத்திரத்தில் சில இடங்களில் அடிப் பூமி முற்றிலும் மேலுக்கு வந்து வளைத்துக்கொண்டு அதற்கு நடுவேLand locked-ஆக சமுத்திர ஜலம் தேங்கி யிருக்கிறது. அப்புறம் சூரிய உஷ்ணத்தினாலும், இன்னும் வேறு தினுசான பருவ மாறுபாடுகளாலும் இந்த ஜலம் வற்றிப்போன பிற்பாடுதான், ஒரு காலத்தில் நீர் நிலையாக இருந்த இடங்களே சொட்டு ஜலம்கூட இல்லாத பாலைவனங்களாகி விட்டன என்கிறார்கள்.

பூலோகம் என்ற ஒன்று சிருஷ்டியாகிற போதே அதில் பூமிப் பகுதியில்தான் மநுஷ்ய இனம் ஜீவிக்க வேண்டும் என்றும் சங்கல்பமாகி, அதிலே மநுஷ்யனுக்குத் தேவையான தானியம் விளையவும், நதிகள் ஓடவும் ஏற்பாடுகள் ஆகியிருக்கின்றன. இந்தப் பிரபஞ்ச நிர்மாணத்தைப் பற்றிக் கொஞ்சம் நினைத்துப் பார்த்தாலே ரொம்பவும் விசித்திரமாகவும், பிரமிப்பாகவும் இருக்கிறது. கடைசியில் இதெல்லாம் பொய், கானல் நீர், ம்ருக த்ருஷ்ணை என்றுதான் இத்தனை நாழி லெக்சர் அடித்தேன். ஆனால் ஒரு கானல் நீர் கூடக் கண்ணுக்குத் தெரிகிறவரையில் மகா விசித்திரமாக இருப்பது போல், இந்த லோக மாயையையும் பகவான் பரம விசித்திரமாகத்தான் நிர்மாணம் பண்ணியிருக்கிறான். இதில் இங்கே ஒரு மலை இருக்கிறது. அங்கே ஒரு பள்ளத்தாக்கு இருக்கிறது. இன்னோரிடத்தில் ஒரு நதி ஓடுகிறது என்றால், இவை ஒவ்வொன்றுக்கும் ஒரு பிரயோஜனம் இருக்கிறது, அர்த்தம் இருக்கிறது. பௌதிகமான லோகத்தில் ஆறு, மலை, சமவெளி என்று பல தினுசாக வைத்து, ஜீவசைதன்யமுள்ள பிராணி வர்க்கத்திலும், மநுஷ்யன், மிருகம், பட்சி, நீர் வாழ்வன, நிலம் வாழ்வன என்றெல்லாம் பல தினுசாக வைத்து, இவற்றை யெல்லாம் அதி விசித்திரமாக ஒன்றோடொன்று பொருத்தி, இயற்கை என்ற பெயரில் பரமாத்மா லீலை செய்கிறார். அந்த லீலையில் சில சமயங்களில் பொருத்தமில்லாமல், விபரீதமாகவும் துளித் துளி செய்து விடுகிறார். முழுக்கப் பொருத்தி யிருந்து விட்டால் இந்த லோகம்தான் நிஜம் என்று ஏற்பட்டு விடுமே! அப்படி தோன்றக் கூடாது என்று தான் போலிருக்கிறது, இதிலே பொருத்தமில்லாமல், விபரீதமாகவும் ஏதாவது அவ்வப்போது நடத்திக் காட்டுகிறார். அதனால் தான் ஒரு பூகம்பம் வருகிறது; ஒரு எரிமலை வெடிக்கிறது. இம்மாதிரி ஒன்றாக, சமுத்திரத்திலே சில பாகம் நிலப்பகுதியோடு சேர்ந்து பாலைவனமாகிறது.

ஆதியிலேயே மநுஷ்யனுக்கு இருப்பிடமாக சங்கற்பமான பூமியில், அவனுடைய வாழ்வுக்கு அவசியமான மழை, நதி, பயிர் பச்சை எல்லாம் இருக்கின்றன. ஆனால் இப்போது விபரீதமாகப் பூமியோடு சமுத்திரப் பகுதியும் வற்றிச் சேர்கிறபோது, இப்படிப்பட்ட பாலைவன பூமியில் மழையும் இல்லை, ஆறும் இல்லை, பயிர் பச்சையும் இல்லை. ஆதியில் பரமாத்மா, ‘இது கடல் பிரதேசம், அதனால் இந்த இடத்தில் ஜலத்தின் உள்ளோட்டம் (Under current) வேண்டாம்’ என்று வைத்து விட்ட இடம்தானே இப்போது நிலப் பகுதியோடு சேர்ந்து விட்டது? அப்படிச் சேர்ந்து விட்டது என்பதற்காக அவர் பழைய இயற்கை விதிகளை மாற்றி விடுவதில்லை. இதனால்தான் ஒரு காலத்

[1932ம் வருஷத்திலிருந்து பெரியவர்கள் வழங்கிய உரைகள், ஸ்ரீமுகங்கள், கட்டுரைகளிலிருந்து தொகுத்தது]

தில் ஜலப் பிரவாகமாக இருந்த இடமே பிற்பாடு சொட்டு ஜலம் இல்லாத பொட்டலாகி விடுகிறது!

பாலைவன விஷயமாக என் 'ரிஸர்ச்' ஒன்றைச் சொல்கிறேன். இப்போது ஸஹாரா பாலைவனமாக இருப்பது ஒரு காலத்தில், சமுத்திரமாக இருந்த இடம் என்று ஜியாலஜிக்காரர்கள் சொல்கிறார்கள். உங்களுக்கு ராமாயணக் கதை தெரிந்திருக்கலாம். ஸகரன் என்ற ராஜாவின் பிள்ளைகள்தான் பூமியை வெட்டிக் கொண்டே போய் சமுத்திரத்தை உண்டாக்கினார்கள் என்று அதில் சொல்லியிருக்கிறது. ஸகர புத்திரர்கள் வெட்டியதால்தான் சமுத்திரத்துக்கு 'ஸாகரம்' என்ற பெயர் ஏற்பட்டிருக்கிறது. 'ஸாகரம்' என்பதுதான் மருவி 'ஸகாரா' என்றாயிருக்கும்!

இந்தியாவில் ராஜஸ்தானம் இப்படிப்பட்ட ஒரு பாலைவனமாகத்தான் இருக்கிறது. பாலைவனத்துக்கு ஸம்ஸ்கிருதத்தில் 'மருவாடிகா' என்று பெயர். இதனால்தான் ராஜஸ்தான்காரர்களை நாம் 'மார்வாடி' என்று சொல்கிறோம்.


ஒரு காலத்தில் ஜல மயமாக இருந்த இடமே இப்போது பாலைவனமாக இருக்கிறது என்கிற மாதிரி, இந்த லோக வாழ்வான பாலைவனமும் பரமாத்மாவிடமிருந்து வந்ததுதான்! ஆனாலும் அதிலே இப்போது ஆத்மாவை வளர்க்கிற சாரம் இல்லை. காமம், குரோதம், முதலான கானல் நீரோட்டம்தான் நம்மை இழுக்கடித்து, அலையாக அலைய வைத்து, நாசம் பண்ணுகிறது. இதைத்தான் ஆசாரியாள் ''விஷய ம்ருகத்ருஷ்ணா'' என்றார்.

முதலில் விநயத்தை, எளிமையை வேண்டினார். பிறகு மன அடக்கத்தைப் பிரார்த்தித்தார். அப்புறம் இந்திரியங்கள் பலவிதமான ஆசைக் கானல் நீரை நோக்கி ஓடாமல் இருக்கும்படி அவற்றின் தாகத்தை அடக்கச் சொல்கிறார்.

முதலில் வெளிப் புலனடக்கமும், பிற்பாடே உள் விஷயமான மன அடக்கமும் ஸித்திக்கும் என்றாலும் இங்கே ஏன் மாறுதலாக முதலில் மன அடக்கமான தாந்தியையும், பிறகு புலனடக்கமான சாந்தியையும் சொன்னார் என்றால், இந்தப் புலனடக்கமும் மன அடக்கம் என்ற லட்சியத்துக்கு ஸாதனம் என்று உணர்த்துவதற்குத்தான். மன அடக்கத்துக்காக அல்லாமல், வேறு காரணங்களுக்காகவும் புலனை அடக்கலாம். கண்ணிலே ஏதோ கெடுதல் என்றால் ஸினிமாப் பார்க்காமல் அந்தப் புலனை அடக்கச் சொல்கிறார்கள்; குடலில் புண் என்றால் மது மாம்ஸாதிகளைச் சாப்பிடக் கூடாது என்கிறார்கள். இங்கெல்லாம் புலனடக்கம் என்பதை மன அடக்கத்துக்கு வழியாகச் சொல்லவில்லை. இப்படியில்லாமல் மனஸ் அடங்குவதற்கு வழியாகவே இந்திரிய ஜயம் செய்வதுதான் ஆத்மாபிவிருத்திக்கு வேண்டியது என்பதால், அந்த லக்ஷியத்தை மறக்கக் கூடாது என்றே, முதலில் லக்ஷியமான மன அடக்கத்தைப் பிரார்த்தித்துவிட்டு, அதற்கப்புறம் அதற்கு ஸாதனமான புலனடக்கத்தைச் சொன்ன மாதிரி தோன்றுகிறது.

(தொடரும்)

இதோ! நீங்கள் துடிதுடிப்புடனும், ஊக்கத்துடனும் விளங்க சக்தியளிக்கும் எரிபொருள்.



பூஸ்ட்

மால்ட் சாக்லெட் மில்க் ட்ரிங்க்

ரயிலைப் போன்றே ஒவ்வொரு நாளும் உங்களுக்கும் நல்ல துவக்கத்திற்கு எரிபொருள் தேவை. ஆகையினால் தான் ஒவ்வொரு காலையும் உங்களுக்கு பூஸ்ட் தேவை.

உயர் சுறுசுறுப்புடன் உங்களை இயங்கச் செய்யும் சக்திப் பொருள். வேலையிலும் விளையாட்டிலும் அதிகச் சக்தியைச் செலவிடும் உங்கள் குழந்தைகளுக்கு இது முக்கியமாகத் தேவை.

அவர்களுக்கு பூஸ்ட்-மால்ட் சாக்லேட் பால் பானமளியுங்கள். ஊட்டத்தைப் பற்றி குறைவற அறிந்த ஹார்லிக்ஸ் செய்வோர் தருவது

சக்தி வளமான ஏடு நிறைந்த பூஸ்ட் உங்களுக்கு அதிகப் படியான ஊட்டமளிக்கிறது.

ஆடை நிறைந்த பால், கோதுமை, பார்லி மால்ட், கோக்கோ ஆகியவற்றினால் செய்யப் பட்டிருப்பதே இதற்குக் காரணம்.

பூஸ்டின் ஆடை நிறைந்த மால்ட் சாக்லேட் சுவையை உங்கள் குடும்பத்தினர் மிகவும் விரும்புவார்கள்.

பூஸ்ட், ஒரு நாளைத் துவக்குவதற்கு மிகச் சிறப்பான முறை—ஒவ்வொரு நாளும
இரண்டு அளவுகளில் கிடைக்கும்.

'ஹார்லிக்ஸ்' தயாரிப்பாளர்கள் அளிப்பது.

B-4576 TAM. 7

[அரசி எலிஸபெத் அரியணையில் அமர்ந்து இருபத்தைந்து ஆண்டுகள் ஆகின்றன. பிரிட்டனில் வெள்ளிவிழா மிகக் கோலாகலமாகக் கொண்டாடப் படுகிறது. காமன்வெல்த்தில் அங்கம் வகிக்கும் இந்தியாவும் மகிழ்ச்சியுடன் அரசியை வாழ்த்திப் பல்லாண்டு கூறுகிறது. நாமும் இவ்விதழ் மேலட்டையில் ராணி எலிஸபெத்தின் வண்ணப்படத்தைப் பிரசுரித்துப் பெருமையுறுகிறோம்.]

ஒரு ஜனநாயக முடியாட்சி!

பிரிட்டனில் மன்னரோ அல்லது அரசியோ இருப்பது ஓர் அலங்காரத்துக்குத்தான் என்று பலர் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அரியணையை அலங்கரிப்பது தவிர அவருக்கு அதிகார பூர்வமான பல முக்கிய அலுவல்கள் உண்டு.

அரசி எலிஸபெத் சென்ற வருஷம் ஜூலை மாதத்தில் அமெரிக்க சுதந்திரத்தின் இருநூறாவது ஆண்டு விழாவில் பங்கேற்க அந்த நாட்டுக்கு விஜயம் செய்தபோது அவருடன் இரண்டு சிவப்பு நிறப் பெட்டிகள் (பிரீஃப் கேஸ்) சென்றன. இவற்றுக்குச் சாவிகள் நம்பிக்கைக்குரிய ஒரு சிலரிடமே இருக்கும். இவற்றில்தான் அரசாங்கத்தின் அதி முக்கியமான ரகசியத் தஸ்தாவேஜுகள் பலவும் வைக்கப் படுகின்றன. அரசி எங்கு சென்றாலும் ஒவ்வொரு நாளும் சில மணி நேரங்களை அரசாங்க அலுவல்களுக்காக ஒதுக்கி இந்தப் பெட்டிகளுக்கு வந்து சேரும் தாள்களைப் பார்வையிட வேண்டும்.

அரசி எங்கு பயணப்பட்டாலும் செய்தித் தொடர்புக்கு ஒரு பிரத்தியேக ஏற்பாடு செய்யப்படுகிறது. அவர் எங்கிருப்பினும் சரி, எந்த விநாடியிலும் லண்டனுடன் தொடர்பு கொள்ள முடியும். அவ்வப்போது முக்கியமானதும் அவசரமானதுமான அரசாங்கத் தாள்களை ஒரு விசேஷ அதிகாரி சுமந்து பறக்கிறார். அல்லது அரசுத் தபாலில் அதி விரைவாகப் பயணப்பட்டு அவை வந்து சேரும். அவற்றுள் உடனடியாகக் கவனிக்கப் படவேண்டியவற்றை அரசியின்காரியதரிசிகள் சிவப்புப் பெட்டியில் வைக்கிறார்கள்.

இது ஒருபுறமிருக்க பிரிட்டனின் எழுதப் படாத அரசியல் சாசன ரீதியாக அரசிக்கு உள்ள அதிகாரங்கள் என்ன? அவருடன் அடிக்கடி தொடர்பு கொள்ள வேண்டியதன் அவசியம் என்ன?

பத்தொன்பதாம் நூற்றாண்டின் அரசியல் நிபுணர் பிரிட்டிஷ் அரசனுக்கு அல்லது அரசிக்கு உள்ள உரிமைகளைப் பின்வருமாறு விவரிக்கிறார்: நாட்டு நடப்புகளை அறிந்து கொள்ளும் உரிமை; தமது அறிவுரைகளை வழங்கும் உரிமை; எச்சரிக்கும் உரிமை ஆகியன. இந்த உரிமைகளை அவசியம் ஏற்படும் போது பயன்படுத்தாது போய்விட்டால் அரசி கடமை தவறியவராவார் அல்லவா?

அரசி தேசத்தின் தலைவி. அவர் கட்சிப் பற்று அற்றவர். ஆனால் அரசியல் பற்று



✖ வெள்ளி விழாவுக்கென எடுக்கப்பட்ட விசேஷப் படம். கழுத்தில் அவர் அணிந்துள்ள நெக்லஸ் வெள்ளி விழாவுக்கென்றே வைரங்களும் முத்துக் களும் இழைத்துத் தயாரானது.

உள்ளவர். பிரிட்டனில் நடப்பது ''ராஜ கம்பீர மிக்க அரசியின் ஆட்சி'' தான். நாடாளுமன்றத்தில் நிறைவேறும் எந்த மசோதாவும் அரசியின் கையெழுத்தின்றிச் சட்டமாக முடியாது. முப்படைகளுக்கும் தலைவி. இங்கிலாந்து சர்ச்சின் ஈடு இணையற்ற தலைவியும் அவரே. லண்டனுக்கு வருகிற பல் வேறு தேசங்களின் தூதர்களும் ராஜ தர்பாரிலேயே தங்களைப் பதிவு செய்து கொள்கிறார்கள். அரசி செய்ய வேண்டிய கடமைகள் மிகுதி. ஆனால் அவற்றைப் பட்டியல் போட்டால் மட்டும் போதாது. அவர் ராஜரீக காரியங்களில் எவ்வளவு தூரம் பின்னிப் பிணைந்திருக்கிறார் என்பதை உணர்த்த. மக்களுடைய சுதந்திரங்களையும் உரிமைகளையும் பாதுகாக்கும் பொறுப்பு அரசியுடையது தான். நாடாளுமன்றத்தை அவசியமான போது கலைத்து விடும் உரிமை அவருக்கு உண்டு. ஒரு நெருக்கடியான கட்டத்தில் பிரதமரை அல்லது ஒரு கட்சியின் ஆட்சியைப் பதவி நீக்கம் செய்யும் உரிமை பெற்றவர்.

நாடாளுமன்றம் கூடும் காலத்தில் வாரம் தவறாமல் ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையும் அவர் பிரதமருடன் பேசுகிறார். அந்தச் சந்திப்பின்போது வேறு யாரும் அருகில் இருப்பதில்லை. இதோடு நில்லாமல் மற்ற காலங்களில் தேவைப்படும் போதெல்லாம் அவர் பிரதமரை அழைத்துப் பேசுவார். ஆண்டுக்கொரு முறை அரசி விடுமுறை எடுத்துக்கொள்வது வழக்கம். அந்த விடுமுறை நாட்களில் கூட ஒரு சந்தர்ப்பத்திலாவது அவரைப் பிரதமர் போய்ப் பார்த்துப் பேசிவிட்டு வருவார். நாடாளுமன்ற நடப்புகள் பற்றி அன்றாடம் ஓர் அறிக்கை தயாரித்து மந்திரி ஒருவர் அரசியிடம் சமர்ப்பிக்கிறார். அயல் நாட்டு விவகார அமைச்சரவை அனுப்பும் தந்திகள், அயல்நாடுகளில் உள்ள பிரிட்டிஷ் தூதர்கள் அனுப்பும் அறிக்கைகள் அனைத்தையும் அரசி பார்வையிடுகிறார். ஒரு நாளைக்கு இருநூறு கடிதங்களுக்குக் குறையாமல் அவருக்கு வருகின்றன. அவற்றுள் பல அரசாங்க நடவடிக்கைகள் பற்றியவை. நாட்டின் தலைவர் என்ற முறையில் அரசி எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவர் என்பது 1974ல் நன்றாகப் புரிந்தது. அப்போது பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் ஓர் இக்கட்டான நிலை ஏற்பட்டது. அச்சமயம் எலிஸபெத் நியூஸிலாந்துக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் அந்நாடுகளின் அரசி என்ற முறையில் சென்றிருந்தார் — காமன்வெல்த் தலைவியாக அல்ல. பிரிட்டிஷ் பிரதமர் நாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தலை அறிவிக்க விரும்பினார். ஆனால் இதற்கு அரசியின் அனுமதி தேவை. தந்திகள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. நியூஸிலாந்திலிருந்தபடியே அரசி நாடாளுமன்றத்தைக் கலைக்க அங்கீகாரம் அளித்தார்.

பிப்ரவரி 28ந் தேதி பிரிட்டிஷ் மக்கள் வோட்டுச் சாவடிகளுக்குச் சென்றனர். தேர்தலின் முடிவில் முக்கிய இரு கட்சிகளான தொழிற் கட்சிக்கோ அல்லது கன்ஸர்வேடிவ் கட்சிக்கோ பெரும்பான்மை பலம் கிடைக்கவில்லை. அன்றைய பிரதமர் எட்வர்ட் ஹீத் மூன்றாவது சிறிய கட்சியான லிபரல் கட்சியின் ஒத்துழைப்புடன் சிறுபான்மை அரசு ஸ்தாபிக்க எண்ணி அவசரம் அவசரமாகப் பேச்சு வார்த்தைகள் நடத்தினார்.


லண்டனில் நடப்பன குறித்து அரசிக்கு உடனுக்குடன் தகவல் கிடைத்து வந்தன. பிப்ரவரி 28ந் தேதி தாம் ஒப்புக்கொண்டபடி ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் தொடக்கவுரை நிகழ்த்திவிட்டு லண்டனுக்குப் பறந்தார். மார்ச் 1ந் தேதி வந்து சேர்ந்த அவர், புதிய ஆட்சி அமைவதில் தம் பங்கைத் தேவையான தருணத்தில் செய்யத் தயாராயிருந்தார்.

அடுத்த இரண்டு நாட்களில் நடந்தனவற்றில் அரசி எந்த அளவுக்குச் சம்பந்தப்பட்டிருந்தார் என்பதைச் சரித்திர நூல்கள் தாம் எதிர்காலத்தில் கூறும். ஆனால் அதன் விளைவு என்னவெனில் திரு ஹீத் தமது ராஜினாமாவைச் சமர்ப்பித்தார்; தொழிற் கட்சித் தலைவர் திரு ஹாரால்ட் வில்ஸனைப் பிரதமராக அரசி நியமித்தார்.

இதற்கிடையில் அரசியின் ஆஸ்திரேலிய நிகழ்ச்சி நிரல் தடையின்றித் தொடர அரசி

✖ கணவர் பிலிப் கோமகன், கடைசி மகன் இளவல் எட்வர்ட் ஆகியோருடன் அரசி வின்ட்ஸர் கோட்டைப் பூங்காவில் ஓய்வாக இருக்கிறார்.

✖ ஒவ்வொரு நாளும் சில மணி நேரங்களாவது அரசாங்க அலுவல்களைக் கவனிக்க அரசி ஒதுக்க வேண்டும்.





யின் கணவர் ஃபிலிப் — எடின்பரோ கோமகன் உதவினார். அரசிக்குப் பதில் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் அவர் பங்கேற்றார். அரசி லண்டனிலேயே தங்கி மார்ச் 12ந் தேதி புதிய நாடாளுமன்றத்தைத் தொடங்கி வைத்தார். அதற்கு மறு நாள், வெகு காலத்துக்கு முன்பே திட்டமிட்டிருந்தபடி அவர் தமது இந்தோனேஷியப் பயணத்தை மேற்கொண்டார்.


அரசி நாட்டில் இல்லாதபோது அரசுக் காரியங்கள் தாமதப்படாமல் நடக்க ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்படும். அரசி பெயரால் சில காரியங்களை நிறைவேற்ற இக்குழு அத்தருணங்களில் அதிகாரம் பெற்றிருக்கும். எனினும் சில காரியங்களை அரசியின் ஆணையின்றி அவர்களாலும் செய்ய முடியாது. அவற்றுள் ஒன்று நாடாளுமன்றத்தைக் கலைப்பது.

ஒரு ஜனநாயக முடியாட்சியின் அரியாசனத்தில் அமர்ந்திருப்பவர் அரசி எலிஸபெத்.

—குட்டி கிருஷ்ணன்

ஆதாரம்: பாட்ரீஷியா டைய்லர் எழுதிய கட்டுரை

உங்கள் மீதும் விசாரணைக் கமிஷன்!



வாசகர் மேடை

● ஸத்குரு ஸ்ரீ ஞானானந்தகிரி ஸ்வாமிகளின் திவ்ய சரித்திரத்தை எழுதும் நற்பணியை நான் மேற் கொண்டிருக்கிறேன். ஸ்வாமிஜியை நன்கு அறியும் பாக்கியம் பெற்ற அன்பர்கள் தங்களுக்குத் தெரிந்த செய்திகளையும், சம்பவங்களையும், புகைப்படங்களையும், ஒலிப்பதிவுகளையும், கடிதங்களையும் அனுப்பி உதவினால் நூலில் இணைக்கும் நல்வாய்ப்பு ஏற்படும். அவை ஜாக்கிரதையாகத் திருப்பி அளிக்கப்பெறும்.

17, வி.எஸ்.வி. கோயில் தெரு,
சென்னை 4
20-4-77 எல்லார்வி

● சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் நடைபெற்ற உலக சுகாதார நாள் அன்று வருஷத்தில் 50000 பேர்கள் இந்தியா முழுவதும் வெறி நாய்க் கடியினால் இறந்து போகிறார்கள் என்று டாக்டர்கள் தெரிவித்தனர்.

நான் இருக்கும் பகுதியான அண்ணா நகரில் ஏகப்பட்ட நாய்கள் எல்லாத் தெருக்களிலும் சர்வ சுதந்திரமாக உலாவி வருகின்றன. இந்த வெய்யில் காலத்தில் இந் நாய்களில் எத்தனைக்கு வெறி பிடிக்குமோ? சமீபத்தில் மக்களுக்குக் கட்டாய அறுவைச் சிகிச்சை நடத்தித் தேர்தலில் கோட்டை விட்டது காங்கிரஸ் ஆட்சி. இப்போதைய தேவை தெரு நாய்களுக்குக் கட்டாய கருத்தடை அறுவைச் சிகிச்சை. சென்னை மாநகராட்சியும், மாநில அரசும் தெரு நாய்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தத் தீவிரமாக ஏதாவது செய்ய வேண்டும்.

சென்னை—40
19—4—77 எஸ். செல்லம்மாள்

● தமிழ் நாவல்கள் இலக்கிய நூல்கள், மற்றப் புத்தகங்கள் அதிகமாக விற்பனையாகாதது பற்றி அடிக்கடி வருத்தம் தெரிவிக்கப்படுகிறது. நானும் ஒரு புத்தகப் பிரியன்தான். புத்தகங்களின் விலை அதிகமாக இருக்கிறது. அதோடு ரிஜிஸ்தர் தபாலில் பெற ரொம்பவும் செலவாகிறது.

புத்தக வெளியீட்டாளர்கள் தங்கள் புத்தக விற்பனை ஏஜெண்டுகளுக்குக் கணிசமான தள்ளுபடி கொடுக்கிறார்கள். ஆனால் தபாலில் வாங்கும் தனியாருக்குப் புத்தக விலையுடன் தபால் கட்டணங்களையும் சேர்த்து வசூலிக்கிறார்கள். தபால் செலவு மட்டுமாவது பதிப்பகத்தார் ஏற்றுக் கொள்ளக் கூடாதா?

ராமநாதபுரம்
25—4—77 ''பர்வதம் புத்திரன்''

● எழுத்தாளர் பஞ்சாமிர்தம் யாருடைய செலவில் டில்லி போய் வந்தார் என்பதைக் குறிப்பிடவில்லை. (ஓர் எழுத்தாளர் தம் சொந்தச் செலவில் டில்லிக்குப் போய் வரக் கூடிய அளவுக்கு வருமானமுள்ளவர் என்பதை இன்னொரு எழுத்தாளனாகிய நான் ஒத்துக் கொள்வதற்கில்லை.) எனவே அவர் ஏதோ குறுக்கு வழியில் போய் வந்திருக்க வேண்டும். இதில் பல ஒழுங்கீனங்கள் நடந்திருப்பதும் இதிலிருந்து தெரிய வருகிறது. எனவே, இந்த அளவுக்கு ஊழல் நடக்கக் காரணமாயிருந்த கோமதி சுவாமிநாதன், லோபாவுக்குக் கையும் காலும் முளைத்தாற்போல் படம் வரைந்து இதற்கு உதவியாக இருந்த ஓவியர் நம்பி, இதைப் பிரசுரிக்க மூன்று பக்கம் பேப்பர் ஆர்ஜிதம் செய்து கொடுத்து அதனால் பல நன்மைகளைப் பெற்றுக்கொண்ட கல்கி ஆசிரியர் ஆகியோர் நடத்தைக்கு விசாரணைக் கமிஷன் ஒன்று போட வேண்டும்! சிரித்துச் சிரித்து வயிறு புண்ணான நாங்கள் சாட்சி கூற வருகிறோம்!


23—4—77
திருவாரூர் ராஜந்தரத்தான்

● தமிழகப் பெண்மணிகள் டேபிள் டென்னிஸ் வரிசையில் முதல் இடம் பெற்ற குமாரி பி. வத்சலாவின் படத்தை அட்டையில் போடாமல் மூன்றாவது இடத்தை வகிக்கும் ராஜலட்சுமியின் படத்தை ஏன்போட்டீர்கள்?

சென்னை—17
24—4—77 கே. எஸ். கணபதி

உயர் ரகம்...





மிக நவீன வடிவமைப்பு, தகுந்த
வடிவிலான தடுப்புக் கம்பிகள்,
பாங்காக அமைந்த விசிறிகள்,
நாகரிகமான பியானோ ரக ஸ்விட்ச்கள்
விளிம்புகளில் நன்கு சரிசெய்யப்
பட்ட, சமமான வர்ணப் பூச்சு—
இவற்றைக் கொண்டவை
உஷா டேபிள் ஃபேன்
உஷா டேபிள் ஃபேன் அழகானவை;
எவ்வித அலங்காரத்துக்கும் உகந்தவை;
பல கண்கவர் வண்ணங்களிலானவை.
உங்களை வந்தடையுமுன், கடுத்தமான
தரக்கட்டுப்பாட்டுச் சோதனைக்கு,
உட்படுகின்றன.
ஆம், மிக நேர்த்தியானவை—
உஷா டேபிள் ஃபேன்களே—
மாதிரியிலும், செயல்பாட்டிலும்,
வண்ணத்திலும்.

உஷா

மேசை விசிறிகள்

JEW-346 D



‘வளரப்
பிறந்த
நாக்கு’

‘வாழ்ந்து
ருசி கண்ட
நாக்கு’

Gold Spot

THE TASTE GOES TO YOUR SMILE

குதூகல நகை கொஞ்சும் சுவை:
கோல்ட் ஸ்பாட்

Creative Unit-A 2721

பார்த்திபன் கனவு

அத்தியாயம் 18

பராந்தகபுரத்தில்

சூனியமான அந்த மகேந்திர மண்டபத்தைப் பொன்னன் உள்ளும் புறமும் பலமுறை சுற்றிச் சுற்றித் தேடினான். மகாராஜா எப்படி மாயமாய்ப் போயிருப்பார் என்று சிந்தனை செய்தான். நேற்றுச் சாயங்காலம் காட்டு வெள்ளத்தில் அவரைக் கரை சேர்த்தது முதல் நடந்தனவெல்லாம் ஒரு வேளை கனவோ என்றுகூட அவனுக்குத் தோன்றியது. இதற்கிடையில் வைத்தியனும் வண்டிக்காரனும் அவனைத் தொந்தரவு செய்யத் தொடங்கினார்கள். தன்னிடம் ஆபத்துக் காலத்தில் செலவுக்காக வைத்திருந்த பொற் காசுகளில் ஒன்றை அவர்களுக்குக் கொடுத்து அனுப்பினான்.

இளவரசருக்கு ஜுரம் முற்றி ஜன்னியின் வேகத்தினால் எழுந்து ஓடிப் போயிருப்பாரோ என்று பொன்னன் மனத்தில் தோன்றியபோது 'பகீர்' என்றது. அவனும் பித்தம் கொண்டவனைப் போல் அங்கும் இங்கும் ஓடி அலையத் தொடங்கினான். குடுகுடுவென்று நதிக் கரைக்கு ஓடுவான். அங்கிருந்து கரையோரமாக மேலும் கீழும் அலைவான். மறுபடியும் மகேந்திர மண்டபத்துக்கு வந்து, ஆசையுடன், நெஞ்சு 'திக் திக்' கென்று அடித்துக் கொள்ள உள்ளே எட்டிப் பார்ப்பான். மனம் கலங்கியிருந்தபடியால் இன்னது செய்கிறோம் என்று தெரியாமல் விக்கிரமன் படுத்திருந்த வைக்கோலை எடுத்து உதறுவான். பிறகு வெளியிலே வந்து உறையூர்ச் சாலையோடு கொஞ்ச தூரம் போவான். மறுபடியும் திரும்பி வருவான்.

இப்படி ஒரு தடவை அவன் திரும்பி மண்டபத்தை நோக்கி வந்தபோது, மண்டபத்திலிருந்து சற்றுத் தூரத்திலிருந்த ஒரு பெரிய இலுப்ப மரத்துக்குப் பின்னால் ஓர் உருவம் மறைவதைக் கண்டான். அது ஒரு சித்திரக் குள்ளனின் வடிவமாகத் தெரிந்தது. கொல்லி மலையில் அருவிப் பாதையில் தான் அன்று பார்த்த பயங்கர உருவங்கள் பொன்னனுக்கு ஞாபகம் வந்தன. நேற்றிரவு இருளில் நடந்த சம்பாஷணையும் நினைவு வந்தது. "ஓஹோ! மகாராஜா நரபலிக்காரர்களின் கையில்தான் அகப்பட்டுக் கொண்டார்" என்று எண்ணிய போது, பொன்னனுக்கு வந்த ஆத்திரத்துக்கும் துயரத்துக்கும் அளவேயில்லை. வந்த ஆத்திரத்தையெல்லாம் அந்தக் குள்ளன் மேல் காட்டிவிடுவது என்ற நோக்கத்துடன் பொன்னன் இலுப்ப மரத்தை நோக்கி வேகமாகப் பாய்ந்து சென்றான். தன்னைப் பிடிக்க வருகிறான் என்று தெரியாமல் மறைந்து நின்ற குள்ளன் மேல் திடீரெனப் பாய்ந்து கெட்டியாகப் பிடித்துக் கொண்டு இரண்டு குலுக்குக் குலுக்கினான்.

முதலில் சற்றுத் திகைத்த குள்ளன் விரைவில் சமாளித்துக் கொண்டு, "என்ன அப்பா! என்ன சமாசாரம்? எதற்காக இவ்வளவு ஆத்திரம்?" என்று கேட்டான்.

"அடே குள்ளா! மகாராஜா எங்கே?" என்று பொன்னன் அலறினான்.

"மகாராஜாவா? அது யாரப்பா மகாராஜா?"

உடனே பொன்னனுக்குத் தன்னுடைய தவறு ஞாபகத்துக்கு வந்தது. உதட்டைக் கடித்துக் கொண்டு, "அந்த மண்டபத்தில் படுத்திருந்தவர் எங்கே?" என்று கேட்டான்.

குள்ளன் தன்னுடைய இடுப்புத் துணியின் மடியை அவிழ்த்து உதறினான். பொன்னனைக் கேலியாகப் பார்த்து,

அமரர் கல்கி

"ஐயையோ! என் மடியிலே வைத்திருந்தேன்; காணோமே!" என்றான்.

பொன்னனுக்கு இந்தக் கேலி ரசிக்காமல் குள்ளனை அடிப்பதற்காகக் கையை ஓங்கினான். துடுப்புப் பிடித்த வைரமேறிய அந்தக் கையின் அடி குள்ளன் மேல் விழுந்திருந்தால் என்ன ஆகியிருக்குமோ, தெரியாது. ஆனால், அதற்குள்ளே குள்ளன் உடம்பை ஒரு நெளி நெளித்துப் பொன்னனுடைய

பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டு ஓரே பாய்ச்சலாகப் பாய்ந்து மறு கணம் மாயமாய் மறைந்தான்.

பொன்னன் அளவிட முடியாத கோபத்துடன் அங்குமிங்கும் ஓடினான். இதற்குள் இருட்டி விட்டபடியால் பத்தடி தூரத்துக்கு மேல் கண் தெரியவில்லை. மேலும் அந்த இடத்தில் நாலா புறமும் புதர்களாயிருந்தன. எனவே, குள்ளனைக் கண்டுபிடிக்க முடியவில்லை. மிக்க மனச் சோர்வுடன் பொன்னன் திரும்ப யத்தனித்தபோது, திடீரென்று அந்த இலுப்ப மரத்தின் மேலேயிருந்து ''ஊ'' என்று ஆந்தை கத்துவதுபோல் ஒரு குரல் கேட்டது. பொன்னன் திகிலுடன் மேலே அண்ணாந்து பார்த்தான். அடர்ந்த மரக் கிளையில் இருண்ட குள்ள வடிவம் காணப்பட்டது. இன்னொரு தடவை ''ஊ'' என்று அழகு காட்டுவது போல் அவ்வுருவம் கூவிற்று.

பொன்னனுக்கு அப்போது வந்த கோபம் இவ்வளவு அவ்வளவு அல்ல. அந்த மரத்தை வேரோடு பிடுங்கிச் சாய்த்து விடலாம் என்று எண்ணினான். அப்போது குள்ளன் ''அடே புத்தியற்றவனே! மகாபத்திரகாளியின் பக்தனை உன்னால் என்ன செய்ய முடியும்?'' என்று கேட்டான்.

பொன்னனுடைய மனத்தில் இப்போது ஒரு யுக்தி தோன்றிற்று. அதைப் பற்றி அவன் யோசித்துக் கொண்டிருக்கும்போதே குள்ளன், ''அடே முரடா! நீயும் மகா காளியின் பக்தன் ஆகின்றாயா? உன் கஷ்டங்கள் எல்லாம் நீங்கும்'' என்றான்.

''என்னையா காளி பக்தனாகச் சொல்கிறாய்?'' என்று பொன்னன் சிரித்தான்.


''ஏண்டா சிரிக்கிறாய்? ஜாக்கிரதை! காளியின் கோபத்துக்கு ஆளவாய்!''

அப்போது பொன்னன், ''நான் சேர்ந்து விட்டேன், அப்பா, சேர்ந்து விட்டேன். ஆனால் என்ன பிரயோசனம்? கபால பைரவர் எனக்கு இட்ட கட்டளையை நிறைவேற்றத் தவறி விட்டேனே! ஐயோ! அவருக்கு என்ன சொல்வேன்?'' என்றான்.

அப்போது குள்ளன், வியப்புடன், ''அப்படியா? என்ன கட்டளையிட்டிருந்தார்?'' என்று கேட்டான்.

''இந்த மண்டபத்தில் படுத்திருந்தவனைப் பத்திரமாய்க் கொல்லி மலைக்குக் கொண்டு வரச் சொன்னார். நேற்றுராத்திரி இதே இடத்தில்தான் கட்டளையிட்டார். ஐயோ! தவறி விட்டேனே!'' என்று பொன்னன் அழுகிற குரலில் கூறினான்.

''அடடா! முன்னமே சொல்லியிருக்கக் கூடாதா? நீ வருவதற்குச் சற்றுமுன்னால் காஞ்சி சக்கரவர்த்தியின் மகனும் மகளும் இந்த வழியே போனார்கள். அவர்கள் அந்த மண்டபத்தின் அருகில் நின்றார்கள். மண்டபத்திலிருந்து ஒருவனை எடுத்துக் கொண்டு வந்து பல்லக்



கில் ஏற்றிக் கொண்டார்கள். அவன் யார் என்று எனக்குத் தெரியவில்லை. உனக்குத் தெரியுமா?'' என்று கேட்டான் குள்ளன்.

இந்தக் கேள்வி பொன்னனின் காதில் விழவில்லை. ஏனெனில் அவன் வைத்தியனையும், கட்டை வண்டியையும் அழைத்து வந்தபோது, எதிரில், குதிரை, பல்லக்கு முதலிய ராஜ பரிவாரங்கள் வருவதைக் கண்டு ஒதுங்கி நின்றான். குதிரை மேல் குந்தவி தேவியைக் கண்டதும், அவளுடைய கண்ணில் பட்டு விடாமல் வண்டியின் பின்னால் நன்றாய் மறைந்து கொண்டான். பல்லக்கை அவன் கவனிக்கவில்லை. இப்போது அதெல்லாம் பளிச்சென்று ஞாபகம் வந்தது. குள்ளன் சொல்வது உண்மையா யிருக்கலாமென்று தோன்றிற்று.

''ஏனப்பா மௌனமா யிருக்கிறாய்! என்ன யோசிக்கிறாய்?'' என்று குள்ளன் மரத்தின் மேலிருந்து கேட்டான்.

பொன்னன் அவனைப் பார்த்து, ''என்ன யோசிக்கிறேனா? உன்னை எப்படிக் காளிக்குப் பலி கொடுப்பது என்று தான் யோசிக்கிறேன்'' என்று கூறி, கீழே கிடந்த ஒரு கல்லை எடுத்து அவன் மேல் வீசி எறிந்தான்.

குள்ளன் அப்போது, முன்னம் விக்கிரமன் கத்தியை ஓங்கியவுடன் செய்ததைப்போல்வாயைக் குவித்துக்கொண்டு தீர்க்கமான ஒரு கூச்சலைக்கிளப்பினான். அந்தப் பயங்கரமான



ஒலியைக் கேட்டதும் பொன்னனுக்கு உடம்பெல்லாம் மயிர்க்கூச்சலெடுத்தது. அங்கிருந்து அவன் ஒரே ஓட்டமாக, உறையூர்ச் சாலையை நோக்கி ஓடத் தொடங்கினான்.

அந்தக் காட்டாற்றங் கரையிலிருந்து சுமார் காத தூரத்திலிருந்த பராந்தக புரம் என்னும் ஊரைப் பொன்னன் அடைந்தபோது இருட்டி ஒரு ஜாமத்துக்கு மேலிருக்கும். ஆனால் அங்கே தீவர்த்தி வெளிச்சமும், வாத்திய முழக்கமுமாய் ஏக தடபுடலா யிருந்தது. பொன்னன் என்னவென்று விசாரித்த போது, சக்கரவர்த்தியின் திருக் குமாரரும், திருக்குமாரியும் விஜயம் செய் திருப்பதாகவும், அவர்களுக்கு வரவேற்பு உபசாரங்கள் அவ்வூர்க் கோயிலில் நடந்து கொண்டிருப்பதாகவும், அதற்காக ஊருக்கு வெளியே கூடாரங்கள் அடிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிந்து கொண்டான்.

அவர்கள் ஆலயத்தில் இருக்கும் சமயத்தில் தன்னுடைய சோதனையை முடித்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன் கூடாரங்கள் அடிக்கப் பட்டிருந்த இடத்துக்குப் பொன்னன் விரைந்து சென்றான்.

ஊரைச் சேர்ந்தாற் போல் ஒரு மைதானத்தில் கூடாரங்கள் அடிக்கப் பட்டிருந்தன. யுவராஜா மகேந்திரனும் குந்தவி தேவியும் கோயிலுக்குப் போயிருந்தபடியால் இங்கே அவ்வளவு ஜனக் கூட்டம் இல்லை. சில காவற்காரர்கள் மட்டும் அங்குமிங்கும் நின்றார்கள். பணிப் பெண்களும் ஏவலாளர்களும் கூடாரத்துக்குள் படுக்கை விரித்தல் முதலிய காரியங்களைச் செய்து கொண்டிருந்தார்கள். மைதானத்தின் ஒரு புறத்தில் கிளுவைச் செடிகளால் ஆன உயரமான வேலி அமைந்திருந்தது. அந்த வேலி ஓரமாகப் பொன்னன் சென்றான். ஓரிடத்தில் இரண்டு பெண்கள் வம்பு பேசிக் கொண்டிருப்பது அவன் காதில் விழுந்தது.

''ஏண்டி, மரகதம்! திருவெண்ணெய் நல்லூரில் போய் இரவு தங்குவதாக அல்லவா ஏற்பாடு ஆகி இருந்தது? இங்கே எதற்காகத் தங்கி யிருக்கிறோம்?'' என்று ஒருத்தி கேட்டாள்.

''உனக்குத்தெரியாதா என்ன? வைத்தியர் சொன்னாராம், நோயாளிக்கு அமைதி வேண்டும் என்று. பல்லக்கில் நெடுந் தூரம் தூக்கிக் கொண்டு போனால் அவரது உடம்பு நெகிழ்ந்து கொள்ளலாம் என்றாராம். அதற்காகத் தான்....''

''ஆமாண்டி, அது யாரடி அப்பேர்ப் பட்ட நோயாளி? அவனுக்காக இவ்வளவு தடபுடல் படுகிறதே!''

''அவன் செண்பகத் தீவிலிருந்து வந்த இரத்தின வியாபாரியாம். தேவசேனன் என்று பெயராம். மாமல்லபுரத்து வீதியில் நமது தேவியைப் பார்த்தானாம். உறையூரில் இருக்கும் தன் தாயாரைப் பார்க்கப் போவதாகச் சொன்னானாம். அவன் அந்த ஆற்றங் கரை மண்டபத்தில் அநாதையாய்க் கிடக்கவே, தேவி அவனை நம்மோடு உறையூருக்கு அழைத்துக் கொண்டு போகலா மென்று பல்லக்கில் ஏற்றிக் கொண்டாள்.''

''அடி மரகதம்! இதில் ஏதோ மர்மம் இருக்கிறதடி!''

''என்னடி மர்மம்?''

''கட்டாயம் இருக்கிறது. இல்லாவிட்டால் வழியில் அநாதையாய்க் கிடந்தவனுக்கு இப்படி இராஜ வைத்தியமும் இராஜோபசாரமும் நடக்காதடி, மரகதம்!''

''சீச்சீ...''

''அவனை இந்த ஊரிலேயே விட்டு விட்டு வைத்தியம் பார்த்து அனுப்பி வைக்கச் சொல்லலா மல்லவா? நம்மோடு எதற்காகப் பல்லக்கில் ஏற்றி அழைத்துப் போக வேண்டும்?''

''ஆமாண்டி, தங்கம்! அதற்குக் காரணம் இருக்கிறது. ஆனால் உனக்குச் சொல்ல மாட்டேன்.''

''சொல்லாமற் போனால் நான் உன்னோடு பேசப் போவதில்லை.''

''இல்லையடி, கோபித்துக் கொள்ளாதே. இங்கே கிட்ட வா, சொல்கிறேன். யார் காதிலாவது விழப் போகிறது.''

''சொல்லு பின்னே.''

''உறையூர் இராஜகுமாரன் செண்பகத் தீவில்தான் இருக்கிறானாம். அவனை நம் தேவி காஞ்சி நகர் வீதியிலே பார்த்ததும், அவனை மன்னிக்கும்படி சக்கரவர்த்தியிடம் வேண்டிக் கொண்டதும் தெரியுமோ இல்லையோ? அந்த இராஜ குமாரனைப் பற்றி விசாரித்துத் தெரிந்து கொள்ளலா மென்றுதான் பின்னோடு இந்த இரத்தின வியாபாரியை அழைத்து வருகிறார்.''

''ஓகோ! அப்படியானால் உறையூருக்குப் போன பிறகும் இவன் நம்

பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம்

மென்மையான மேனிக்கும்
மேன்மையான நிறத்திற்கும் சிறந்தது



முகப் பவுடருடனே...
(பவுடருக்குச் சிறந்த
ஆதாரம்)

அல்லது
தனியாகவோ
(உள்ளடங்கிய
மேக் அப் கூட!)



பவுடருக்கு ஆதாரமாக உபயோகியுங்கள். மேனியெங்கும் பவுடர் மென்மையாகவும் சமமாகவும் படிந்து, உங்கள் மேக் அப் மணிக்கணக்கில் மாற்றமின்றி இருக்கும்.

பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீமைத் தனியாகவும் பயன்படுத்தலாம். இது சருமத்தின் ஈரப்பதத்தைப் பாதுகாத்து, உங்கள் மேனியை நாள் முழுவதும் மென்மையாகவும் பொலிவுடனும் வைத்திருக்கும்.

அது மட்டுமா! மேனியின் மாசு அகற்றி, மேலான நிறம் தந்து, முகம் புத்தொளி பெற்றுப் பிரகாசிக்கவும் செய்கிறது.

**பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம்
நீங்கள் நாள் முழுவதும் அழகாக விளங்க**

Pond's

CP-1500


சிந்தால்
இந்தியாவில் துர்நாற்றம் நீக்கும் ஒரே சோப்பு!
CINTHOL
Godrej
CINTHOL
DEODORANT AND COMPLEXION SOAP
CINTHOL
வியர்வையால் உண்டாகும்
உடல் துர்நாற்றத்தைத்
திறனுடன் தடுக்கிறது.
எவ்வொரு சோப்பும் செய்யாத
அளவில் உங்களை முழுமையான
புத்துணர்வுடன் திகழச்
செய்கிறது.
சிறப் பராமரிப்பிற்காக· சரும
வல்லுநர்களால் சிபாரிசு செய்யப்பட்டது.

முடன் வஸந்த மாளிகையிலேதான் இருப்பானுக்கும்?''

''ஆமாம்.''

''ஏண்டி மரகதம், அந்த இரத்தின வியாபாரியை நீ பார்த்தாயாடி?''

''பார்க்காமல் என்ன? நான்தானே அவனுக்கு மருந்து கொடுக்கிறேன்!''

''அவன் இளம் வயதாமேடி?''

''ஆமாம்; அதனாலென்ன?''

''ரொம்ப அழகா யிருக்கிறானுமே? முகத்திலே களை சொட்டுகிறதாமே?''

''அதற்காக...?''

''எனக்கென்னமோ மரகதம், கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை. அப்படிப் பட்டவனை நமது தேவி தம் பக்கத்தில்....''

''அடி பாவி, தேவியைப் பற்றி ஏதாவது சொன்னாயோ, உன் நாக்கைச் சுட்டு விடுவேன்.''

''சண்டாளி! தேவியைப் பற்றி நான் என்னடி சொன்னேன்?''

''ஏதோ சொல்ல ஆரம்பித்தாயே!''

''ஓ! தேவியைப் பற்றிச் சொல்வேனடி? அப்படிப்பட்ட இளம் ரூபவானுக்குப் பக்கத்தில் உன்னைக் கொண்டு போய் விட்டு மருந்து கொடுக்கச் சொன்னால் நீ இலேசுப்பட்டவளாடி? பெரிய மாயக்காரியாச்சே! வேறு ஏதாவது மருந்து கொடுத்து விட்டாயானால்? ....ஐயையோ! கிள்ளாதேடி!...''

இப்படிப் பேசிக் கொண்டே பணிப் பெண்கள் இருவரும் வேலி ஓரத்திலிருந்து அப்பால் போய் விட்டார்கள்.

பொன்னன் மேற்கண்ட சம்பாஷணையில் ஒரு வார்த்தை விடாமல் மிகவும் கவனமாய்க் கேட்டான். அவன் மனத்தில் வெகு காலமாக அறிந்திராத மகிழ்ச்சி உண்டாயிற்று. இன்னும் கொஞ்ச தூரம் வேலி ஓரமாகப் போனான். ஒரு கூடாரத்தில் கொஞ்சம் கலகலப்பா யிருந்தது. அங்கே வேலியைச் சற்று விலக்கிக் கொண்டு உற்று நோக்கினான். தீவர்த்தி வெளிச்சத்தில் கட்டிலில் விக்கிரமன் படுத்திருப்பதும், பக்கத்தில் வைத்தியர் உட்கார்ந்து கையைப் பிடித்துப் பார்த்துக் கொண்டிருப்பதும் தெரிந்தது.

சற்றுநேரம் உற்றுப் பார்த்துக் கொண்டே யிருந்து விட்டுப் பொன்னன் அங்கிருந்து திரும்பினான்.

(தொடரும்)



அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி

பொன்னியின் புதல்வர் பெயரால் ஆண்டு தோறும் நடைபெறும் இச் சிறுகதைப் போட்டிக்குப் பொன்னான சிறுகதைகளை வரவேற்கிறோம். இளம் எழுத்தாளர்களின் புதுமைப் படைப்புக்களுடன் பிரபல எழுத்தாளர்களின் சிரிய படைப்புக்களையும் எதிர்பார்க்கிறோம். மர்மக் கதை, சமூகக் கதை, புராணக் கதை, சரித்திரக் கதை, நகைச்சுவைக் கதை, கிராமச் சூழல் கதை, பிரச்னைக் கதை போன்ற எதுவாக வேணுமானாலும் இருக்கலாம். கதைக்காகவே எழுதப்பட்ட கதையாகவும் இருக்கலாம்.

இலக்கிய நயத்துடன் அமையும் சிறந்த கதைகளுக்குப் பின்வருமாறு பரிசுகள் வழங்க உத்தேசித்திருக்கிறோம்.

முதல் பரிசு	ரூ.	1000/-
இரண்டாம் பரிசு	ரூ.	500/-
மூன்றும் பரிசு	ரூ.	500/-

(தலா ரூ. 250 வீதம் இரு கதைகளுக்கு)

தவிர, பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு கதையும் ரூ. 100 பரிசு பெறும்.

முடிவு தேதி: ஜூன் 15உ

நிபந்தனைகள்: சிறுகதைகளைத் திரும்பப் பெறப் போதிய அளவு தபால் தலை பதித்த சுய விலாசமிட்ட உறைகளை அனுப்புதல் வேண்டும். ○ சிறுகதைகள் கல்கியில் நான்கு பக்கங்களுக்கு மேல் போகாமல் அமைவது நலம். ○ கடிதப் போக்குவரத்து கிடையாது. ○ கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. ○ உறையின் மேல் அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி என்று குறிப்பிடுதல் அவசியம்.

ஆசிரியர், கல்கி, சென்னை – 600031

மேக் அப் உங்கள் முகத்தின்
குறைகளை மறைக்கலாம்.





உங்கள் மேனியை தூய்மையாக்கி இயற்கை எழிலுடன் துலங்கச் செய்வது லாக்டோ-காலமைன் ஒன்றுதான்.

உங்கள் மேனியைப் பராமரிக்க லாக்டோ-காலமைன். உங்கள் மேனியைத் தூய்மையாகவும் புதுமையாகவும் வைத்திருக்கக் கூடிய சேர்க்கைப் பொருட்கள் விசேஷ முறையில் இதில் கலக்கப் பட்டுள்ளன. எல்லாம் ஒன்றில் இணைந்த அழகுப் பராமரிப்பு-லாக்டோ காலமைன் அஸ்ட்ரின் ஜெண்ட், மாயிஸ்சரைஸர், ஃபவுண்டேஷன் க்ரீம். மூன்றும் இணைந்த தன்னிகரற்ற அழகு சாதனம்.

அதனை முறையாக உபயோகித்து வரவும். உங்கள் மேனி இயற்கையாக மெருகேறுவதைக் கண் கூடாகக் காண்பீர்கள்.



3 வசதியான சைஸ்களில் கிடைக்கிறது:
110 மி.லி.
60 மி.லி. 28 மி.லி.

க்ருக்ஸ் லாக்டோ-காலமைன், ஒரு ரெஜிஸ்டர்டு டிரேடு மார்க். இதனைத் தவறுகப் பயன்படுத்துபவர்கள் சட்டப்படி தண்டிக்கப் படுவார்கள்.

உண்மையான லாக்டோ-காலமைன் தானு என்று உறுதி செய்து கொள்வதற்கு, எப்போதும் இந்த க்ருக்ஸ் சின்னத்தைப் பார்த்து வாங்குவீர், அதோடு, க்ருக்ஸ் முத்திரையும் உடையாமல் இருக்கிறதா என்று உறுதி செய்து கொள்ளுங்கள்.

டுஃபார்-இன்டர்ஃப்ரான் லிமிடெட்
த.பெ. எண் 6582, பம்பாய்-400 018

க்ருக்ஸ்

லாக்டோ-காலமைன் அதுவே எழில் பராமரிப்பு ரகசியம்.

Sista's-DIL-219-Pi/76/Tam

1914 ஆகஸ்டில் முதல் உலக யுத்தம் மூண்டது. ஜெர்மனிக்கு எதிராக இங்கிலாந்து அணிவகுத்து நின்றது. அரசுடன் ஒத்துழைத்த மிதவாதிகள் காங்கிரஸ், ஆட்சி பீடத்தினிடம் தனக்குள்ள ஆழ்ந்த பக்தியைத் தெரிவித்துக் கொண்டது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்கு நேரக்கூடிய எல்லா ஆபத்துக்களின் போதும் அதற்குப் பக்க பலமாக லாப நஷ்டம் கருதாது நிற்பதென உறுதி பூண்டது.[1]

சென்னையில் காங்கிரஸ் கூடியிருந்தது. ஸி. ஆர். போன்ற தீவிரவாதிகள் அதில் இன்னும் கலந்து கொள்ள அனுமதிக்கப்படவில்லை. கவர்னர் பெண்ட்லாண்ட் பிரபு விஜயம் செய்த போது காங்கிரஸ் பிரதிநிதிகள் மரியாதை காட்டி வாழ்த்துக் கோஷமிட்டனர்.

எனினும் இந்திய அரசியல் ஓவியத்தில் புதிய வண்ணங்கள் தீட்டப்பட்டு வந்தன. யுத்தம் தொடங்குவதற்குச் சில வாரங்களுக்கு முன்னர் ஒரு பெரிய போலீஸ் கார் திலகரை அவரது பூனா வீட்டு வாசலில் இறக்கிவிட்டுச் சென்றது. மாண்டலேயில் ஆறு ஆண்டுகள் சிறைப்பட்டிருந்த பின் ஒரு வழியாக அவருக்கு விடுதலை கிடைத்திருந்தது.

என்றதும் நரசிம்ம அய்யர் ஒரு ஸ்தானத்துக்குப் போட்டியிட்டு வென்றார்.

மிதவாதிகளுக்கும் அரசுக்கும் இடையே, எந்த அளவுக்கு எதிர்ப்புக் குரல் எழுப்பலாம் என்பது பற்றி வெளிப்படையாக ஏற்பட்டிருந்த ஒப்பந்தம் தீவிரவாதியான ஸி. ஆருக்கு உற்சாகம் அளிப்பதாக இல்லை. அதோடு அவரது உடல்நிலையும் மங்காளின் உடல் நிலையும் அவர் அகலக் கால் வைப்பதற்குத் தடையாக இருந்தன.

நடுக்கு ஜுரம்

1915 பிப்ரவரியில் ஸி. ஆர். ரொம்பவும் தேக அசௌக்கியமுற்றிருந்தார். கோயமுத்தூரில் நடுக்கு ஜுரம் தொற்றிக் கொள்ள உடல் சில்லிட்டுப் போயிற்று. மாநில மருத்துவ அதிகாரி டாக்டர் மத்தையாஸுக்குத் தம்மைச் சேலம் ஸ்டேஷனுக்கு வந்து அழைத்துப் போகுமாறு தந்தி அடித்திருந்தார் ஸி. ஆர். அந்த நடுக்கு ஜுரம் தீவிர ஆஸ்த்துமாவாகவும் பிறகு நிமோனியாவாகவும் மாறியது.

பதினாலாம் தேதி அவர் உடல் நிலை மிகவும் ஆபத்தான கட்டத்தில் இருப்பதாகக் கருதப்

ராஜாஜி வாழ்க்கை வரலாறு

1915 ஜனவரியில் தென் ஆப்பிரிக்காவிலிருந்து இந்தியா திரும்பிய எம். கே. காந்தி, நிலவரங்களை ஆராய நாடு தழுவிய சுற்றுப் பயணம் மேற்கொண்டார். ஏப்ரல், மே மாதங்களில் சென்னை ராஜதானியிலும் பெங்களூரிலுமாக நாலு வாரங்களை அவர் கழித்தார். எனினும் அவர் சேலம் செல்லவில்லை. ஸி. ஆரும் அவரைத் தென்னிந்தியாவின் வேறு எந்தப் பகுதிக்கும் போய்ச் சந்திக்கவில்லை என்று தெரிகிறது.

நிர்ணயிக்கப்பட்ட அளவிலான வாக்காளர் குழுக்கள் ராஜதானியின் சட்ட மன்றங்களுக்குச் சில இந்தியர்களை இப்போது தேர்ந்தெடுத்துக் கொண்டிருந்தன. ஆனால் இவர்களின் எண்ணிக்கை அரசு நியமித்த இந்திய, பிரிட்டிஷ் சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை விடக் குறைவு.

சட்டசபைப் பிரவேசம்

வக்கீல் தொழிலில் நிகரற்று விளங்கியதுடன் ஸி. ஆர். நகரசபையிலும் திறம்படப் பணியாற்றி வந்தார் என்பது தெளிவு. அவரை நரசிம்ம அய்யர், ''சென்னை சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுச் செல்லும் நோக்கம் உண்டா?'' என்று கேட்டார். ஸி. ஆர்., அந்த எண்ணம் தமக்கு இல்லை

பட்டது. டாக்டர் மத்தையாஸ், ஸி. ஆரின் நண்பர்களிடம் தமது இந்த எண்ணத்தை வெளியிட்டார். வேங்கட சுப்பையர் ஸி. ஆரைப் பார்த்து விட்டு வரச் சென்ற போது, தம் நண்பர், அவர் தகப்பனாரிடம் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டார். தமது சொத்துக்கள் தமது மறைவுக்குப் பிறகு எப்படிப் பாகம் பிரிக்கப்பட வேண்டும் என்று விவரித்துக் கொண்டிருந்தார் ஸி. ஆர். தமது மனைவி, குழந்தைகளிடம் அவர் விடைபெற்றுக் கொள்வதையும் வேங்கட சுப்பையர் பார்த்தார். தமது டைரியில், ''இந்த வியாதி எதில் போய் முடியும் என்று டாக்டர் கூறியது அநேகமாகச் சரியாகத்தான் இருக்கும் போல் இருக்கிறது'' என்று எழுதினார்.[2]

அக் குடும்பத்தின் டாக்டராக மட்டுமின்றி நண்பராகவும் விளங்கிய டாக்டர் மத்தையாஸ் சுய கட்டுப்பாடு இழந்து அழ ஆரம்பித்து விட்டார். இதைக் கவனித்த ஸி. ஆர்.

---

1. Quoted in Tarachand, History of the Freedom Movement Volume 3, Publications Division, 1972, Page 437.
2. வேங்கட சுப்பையரின் டைரியிலிருந்து சில பகுதிகள். Rajaji, Hindustan Publications; Madras-1949.



வி. ஆர்.



மங்கா

மிருந்த பிரயாஸைப்பட்டுப் பேசினர்: ''டாக்டர் மத்தையாஸ் நிதானம் இழந்து விட்டார். டாக்டர் நாராயண அய்யரை அழைத்து வாருங்கள்!''

மங்காவுக்கும் அன்றிரவு ஜுரம் ரொம்ப அதிகமாகி விட்டது. எல்லாரும் பயப்படும் அளவுக்கு இருப்பினும் தன் கணவரின் உயிருக்காகச் சரியான முறையில் பிரார்த்திக்க உறுதி பூண்டவளாகத் தன் அறையைச் சுத்தப் படுத்தினள். மதிப்புமிக்க பொருள்களை வைக்கும் பெட்டியைத் திறந்து தன் நகைகளில் சிறந்தனவற்றை எடுத்தாள். தனக்கு உடம்பு சரியில்லை என்பதையே எண்ணிப் பாராமல் தலைக்கு ஸ்நானம் பண்ணிவிட்டு அந்த ஆபரணங்களைப் பூண்டு தனது மிக நேர்த்தியான புடவையையும் உடுத்திக் கொண்டு வேங்கடாசலபதி முன் நமஸ்கரித்தாள். ''கணவர் பிழைத்தெழுந்தால் நான் அணிந்திருக்கும் இந்த நகைகளை யெல்லாம் உனக்கே காணிக்கையாக்குகிறேன்'' என்று வேண்டிக் கொண்டாள்.

டாக்டர் நாராயண அய்யரை அழைத்து வருவது சாத்தியமாயிற்று இல்லையா என்பது தெரியவில்லை. எவ்வாருயினும் அன்றிரவு வி. ஆர். நன்ருகத் தூங்கியது ஆச்சர்யமளிப்பதாகத்தான் இருந்தது. அதிகாலையில் இன்னும் கூட உடல் நிலையில் முன்னேற்றம் காணப்பட்டது. மங்காவின் பிரார்த்தனை ஏற்கப்பட்டதாகத் தோன்றியது. வி. ஆர். சீக்கிரமே உடல் நலமுற்றார்.

பலவீனமடைந்த மங்கா

எனினும் மங்கா பலவீனமடைந்து வந்தாள். மஞ்சள் நிற அக்கிரகாரம் வீட்டில் கிடைத்ததை விட அதிகமான காற்றோட்டம் தேவைப்பட்டது. அதனை நாலாயிரம் ரூபாயுக்கு விற்று விட்ட வி. ஆர். 1915 ஏப்ரல் வாக்கில் சேலம் நகருக்கு வெளியே சூரமங்கலத்தில் ஃபிரீமேஸன் சங்கத்துக்குச் சொந்தமான வீட்டில் கீழ்ப்பகுதியை வாடகைக்கு எடுத்துக் கொண்டார்.

பொட்டல் வெளியான ஓர் ஏக்கர் நிலப் பரப்பில் மேட்டுப் பாங்கான பகுதியில், அந்தச் சேவாசங்கத்துக்குச் சொந்தமான மாடிக் கட்டிடம் அமைந்திருந்தது. வீட்டைச் சுற்றிலுமிருந்த நிலத்தில் காணப்பட்ட ஒரே ஒரு புளியமரம் பொட்டல் வெளிக்கு ஒரு மாற்ருகத் தோன்ருமல் அதனை அழுத்தக் கட்டுவதாகவே விளங்கியது. வீட்டைப்பக்க வாட்டில் அணுக வசதியாக உயர்ந்து சென்றது ஒரு பாதை. வீட்டின் முன்பகுதி வட்ட வடிவில் இருந்தது. கீழ்ப் பகுதியின் வாசல் புறத்தில் தூண்களை உடைய வராந்தா அகன்று வளைந்து சென்று இரு மூலைகளையும் இணைத்தது. இந்த வராந்தாவின் கூரை, மாடிப் பகுதியை யொட்டிய திறந்த வெளி அரங்கமாக விளங்கி ஃபிரீமேஸன் சங்க அங்கத்தினர்கள் கூடிப் பேசப் பயன்பட்டது.

1910-ல் சங்கத்துக்காகத் தர்மகர்த்தாப் பொறுப்பில் வாங்கப்பட்ட அந்தக் கட்டிடம் வி. ஆர். பெயரிலும் அவர் நண்பர்கள் நரசிம்ம அய்யர், வேங்கட சுப்பையர் ஆகியோர் பெயரிலும் பதிவாகி யிருந்தது. வி. ஆரின் கட்சிக்காரர்களுள் ஒருவர் நிலத்தை நன்கொடையாக வழங்கினர் போலும். வி. ஆரும் அவரது நண்பர்கள் சிலரும் சங்கம், வீட்டை வாங்குவதற்குப் பணம் கொடுத்து உதவியிருந்தார்கள். வி. ஆருக்கு அந்த வீடு பரிச்சயமானதுதான். 1911-ல் சேலத்தில் கொள்ளை நோய் பரவிய போது அவரும் அவரது நண்பர்கள் சிலரும் தங்கள் குடும்பங்களுடன் சில காலம் அங்கே தங்கியிருந்திருக்கிருர்கள்.

வராந்தாவை நோக்கியிருந்த இரு பெரிய அறைகளுள் ஒன்று நோயுற்றிருந்த மங்காவின் படுக்கை அறை ஆயிற்று. மற்றது வி. ஆரின் காரியாலய அறையாக விளங்கியது. சிறிய மேல் விதானத்துடன் கூடிய மண்ணெண்ணெய் விளக்கு அவர் மேஜை மீது இரவில் ஒளி சிந்திக் கொண்டிருந்தது. சக்கரவர்த்தி ஐயங்காரும் குழந்தைகளும், மகளைக் கவனித்துக் கொள்வதில் உதவ வந்திருந்த மங்காவின் தாயாரும், அவ்வப்போது வந்து போன உறவினர்களும் வேறு மூன்று அறைகளில் வாழ்ந்தார்கள்.

இரண்டு சமையல்காரர்கள், டிரைவர் கௌஸ் ஆகியோர் தவிர சூரமங்கலம் வீட்டில் இரண்டு வேலைக்காரர்கள் இருந்தார்கள். இவர்கள் மாட்டு வண்டி ஓட்டினர்கள். வண்டி மாட்டையும் வி. ஆர். வைத்திருந்த மூன்று நாலு பசுக்களையும் கவனித்துக்

ராஜ்மோகன் காந்தி

கொண்டார்கள். ஆண் மக்களுடைய துணிகளைத் துவைத்துப் போட்டார்கள். மேலும், வீடு பெருக்கித் துடைக்க ஒரு பெண்ணும் ஒரு தோட்டியும் உண்டு.

மூன்று வீடுகள் தள்ளி ஒரு செட்டியாருக்குச் சொந்தமான கிணற்றிலிருந்து தண்ணீரைத் தினந்தோறும் மாட்டு வண்டியில் ஏற்றப்பட்ட ஒரு பீப்பாயில் நிரப்பிக் கொண்டு வர வேண்டும். சமையலுக்குத் தேவையான தண்ணீரை மட்டும் பிராமண சமையற்காரர்கள் இருவரில் ஒருவர்தான் கொண்டு வரலாம், வண்டிக்காரன் அல்ல. ஸி. ஆர். காவலுக்கு ஒரு நாயும் வைத்திருந்தார். அதனுடன் தோழமை பாராட்டி மகிழ்ந்தார். இரு நாய்க் குட்டிகளையும் அவர் தம் குடும்பத்தில் சேர்த்துக் கொண்டார். இவற்றுள் ஒன்றுக்கு ஜாக்கி என்று பெயர். நாய்களுக்கு இறைச்சி வாங்கித் தருவது வண்டிக்காரன் ஒருவனது கடமையாயிற்று.

மங்காவுக்கும் சக்கரவர்த்தி ஐயங்காருக்கும் மரக் கட்டில்கள் இருந்தன. மற்றவர்கள் தரையில் பாய் விரித்துப் படுத்தனர். ஒரு வேலைக்காரனால் தினம் துடைக்கப்பட்ட மண்ணெண்ணெய் விளக்குகள் இருட்டிய பிறகு இயன்ற அளவு வெளிச்சத்தைப் பல்வேறு அறைகளிலும் பரவச் செய்தன.

எதிர்கால நினைவுகள்

அவளுடைய வட்டாரத்தில் இருந்த பெண்களின் அன்புக்கும் பொறாமைக்கும் பாத்திரமானவள் மங்கா. இருபத்தாறு வயதில் அவள் தன் கணவனின் எதிர்கால நம்பிக்கைகளை விசுவாசத்துடனும் பிரியத்துடனும் பகிர்ந்து கொண்டாள் என்று நாம் கருதலாம். இன்று நன்கு முன்னேறிக் கொண்டிருக்கும் தன் கணவரின் எதிர்காலம் காணப்போகிற எதிர்ப்புக்கள் நிறைவுகள் ஆகியவற்றின் அளவுகளை அவளால் கற்பனை செய்து பார்த்திருக்க முடியாது என்பது உண்மையே. எனினும் அவரைப் பொருத்த மட்டில் எதிர்காலம் ரொம்ப நிச்சயமற்றதாகத்தான் இருக்கும் என்பதைப் புரிந்து கொள்ளும் அளவுக்கு அவள் விஷயஞானம் உடையவளாக இருந்தாள். ஒன்று உறுதி — காந்தியிடமும் அவர் கடைப்பிடித்த வழிகளிடமும் தமக்கு ஆர்வம் அதிகரித்துக் கொண்டே போனதை அவளிடமிருந்து ஸி. ஆர். மறைத்திருக்க முடியாது.

அவர் தாமே அச்சிட்ட சிறு புத்தகத்தை மங்காவுக்குக் காட்டி மொழிபெயர்த்தும் கூறுவதை நாம் படம் பிடித்தாற் போல் பார்க்க முடியும். கஸ்தூரிபா சிறை சென்றதை ஒருவேளை அவர் விவரித்தும் இருக்கலாம். ஸி. ஆரை விதி இழுத்துக் கொண்டிருக்கிறது என்பதை மங்கா அறிந்திருந்தாளா? அவளுக்குத் தெரிந்திருந்தது எனில், விதியின் அந்த சர்ப்பிலிருந்து அவரை விடுவிக்க அவள் முயன்றதாக எண்ணச் சிறிதும் இடமில்லை.

அவள் க்ஷீணித்துக் கொண்டிருந்தாள். சமையலறைக்கோ அல்லது சாப்பாட்டு அறைக்கோ நடந்து போக முடியாமல் நாற்காலியில் தூக்கிச் செல்ல வேண்டிய தருணங்கள் கூட ஏற்பட்டன. வீட்டை விட்டு வெளியே போவது என்பது இப்போது அநேகமாக முடியாத காரியமாகவே தோன்றியது.

தப்பித் தவறி அப்படி சென்றால் அது முக்கிய நிகழ்ச்சிக்காக இருக்கும். கௌஸ் ஓட்டி வர, டார்ராக் காரில் ஏறி அவள் மற்ற எல்லோருடனும் ராமர் கோவிலுக்குச் சென்றது லக்ஷ்மிக் குட்டியின் காது குத்தல் வைபவத்துக்குத்தான். அம்மா தன் அறைக்குள்ளேயே நீண்ட காலம் இருப்பது கண்டு அடங்கிப் போன குழந்தைகள், அவள் வராந்தாவில் வந்து அமர்ந்திருப்பதைப் பார்த்தால் கூடக் குதூகலம் அடைவார்கள்.

டி. விஜயராகவாச்சார் சிபாரிசு செய்ததன் பேரில் ஸி. ஆர். சென்னையிலிருந்து உதவிக்காகத் தருவித்திருந்த டாக்டர் அண்ணாசாமி முதலியார் சுமார் இரண்டு மாதங்களுக்குச் சூரமங்கலம் வீட்டிலேயே தங்கி யிருந்தார். சில டாக்டர்கள் அவளுக்கு நீர் கோத்துக் கொள்ளும் வியாதி என்றனர். வேறு சிலர் அவள் இருதயத்தில் ஏதோ குறை கண்டனர். அவள் ரத்தத்தில் ஒருவேளை குறை இருந்திருக்கலாம்.


இரவும் பகலும் மங்காவைக் கவனித்துப் பணிவிடை செய்வதற்காக ஸி. ஆர். தமது தொழிலை ஒதுக்கி வைத்து விட்டார் என்றே கூறலாம். தங்களால் இயன்றதையெல்லாம் சேலம் டாக்டர்கள் செய்தாகி விட்டது என்ற நிலையில் பிரபல பெங்களூர் வைத்தியர் டாக்டர் நஞ்சப்பாவை அவர் வரவழைத்தார். அவர், மங்காவின் வயிற்றில் ஆவி ஏற்றப்பட்ட சால்வைகளை வைக்க வேண்டும் என்று யோசனை சொன்னார். வேறு ஒருவர் ஆட்டுப் பால் சிபாரிசு செய்தார். ஓர் ஆடு வீட்டுக்குக் கொண்டு வரப்பட்டது. யோசனைகள் அனைத்தும் பயனற்றுப் போயின.

உறக்கமற்ற இரவுகள்

உறக்கமற்ற இரவுகளை இப்போது ஸி. ஆர். அடிக்கடி சந்தித்தார். இத்தகைய ஓர் இரவுக்குப் பிறகு ஒரு கட்சிக்காரர் அவரை மோட்டார் சைக்கிளில் ஒரு வழக்கு நிமித்தம் நாமக்கலுக்கு அழைத்துப் போனார். ஸி. ஆர். களைத்துப் போய் வீடு திரும்பினார். ஆனால் அவர் தோல் பையில் பணம் நிரம்பியிருந்தது. அதை அவர் மங்காவுக்கு முன் திறந்தார், அதன் உள்ளே இருப்பது அவளை மகிழ்விக்கும் என்ற நம்பிக்கையில். நோட்டுக் கட்டுக்களை அவள் பார்த்தாள். வருத்தம் தோய்ந்த ஒரு புன்னகை உதிர்த்தாள். அது, ''இவை எனக்கு இனி எவ்விதத்திலும் உதவ முடியாது'என்று சொல்வது போலிருந்தது.[3]

ஆகஸ்டு 22-ந் தேதி பிற்பகலில் மங்கா கிருஷ்ணசாமியைப் பார்த்து, ''பருப்புச் சாதம் சாப்பிட்டாயா?'' என்று கேட்டாள். அவனுக்கு அது ரொம்பப் பிடிக்கும். ''சாப்பிட்டேன்'' என்றான் அவன். மங்கா சந்தோஷப்பட்டாள்.[4] மாலை ஆறு மணிக்கு அவள் சாமா என்று அழைக்கப்பட்ட சாமாச்சாரிடம் நகரில் உள்ள லக்ஷ்மி நாராயணன் கோயிலில் அர்ச்சனை பண்ணும்படி சொன்னாள். அவன் போய்த் திரும்புவதற்குள் அவள் மிகவும் பலவீனமடைந்து விட்டிருந்தாள். ''இதோ பார்'' என்றார் ஸி. ஆர். ''சாமா

இந்தக் கோடையில் வேர்க்குரு எங்கு தாக்கும்?



வேர்க்குரு எங்கு தாக்கினாலும், அதை முறியடிக்க உபயோகியுங்கள் ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர். ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடரில் மட்டுமே நிரூபணம் பெற்ற மருந்துக் கலவை அடங்கியுள்ளது. அது மூன்று வழிகளில் செயலாற்றுகிறது.

- வியர்வை உறிஞ்சுகிறது: சருமத் துவாரங்கள் அடைபடுவதைத் தடுக்கிறது.
- பாக்டீரியா கிருமிகள் பெருகுவதைத் தடுக்கிறது.
- சுகமும் குளுமையும் தந்து, உடனடி நிவாரணம் அளிக்கிறது.

ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடரைக் குளித்தவுடனும், படுக்கும் முன்பும் உடம்பின்மீது தாராளமாகத் தூவுங்கள். உடனடியாக வேர்க்குருவைத் தடுக்கும் மருந்து கலந்த வேர்க்குரு பவுடர் இது ஒன்றுதான்!



சந்தன மணத்திலும் கிடைக்கிறது.

ஜான்ஸன்ஸ்® ப்ரிக்லி ஹீட் பவுடர் மட்டுமே உடல் எரிச்சலை நிறுத்துகிறது, அரிப்பிலிருந்து நிவாரணமளிக்கிறது உடனடியாக.

Johnson & Johnson*

OBM-4317/R TM

சொன்னதைச் செய்வேன்



நடிகை சுஜாதாதான் படத்தின் ஜீவ நாடி. உணர்ச்சிக் கொந்தளிப்பான காட்சிகளில் மிகத் திறமையாக நடிக்கிறார். ஆனால் அவர் ஏற்றுள்ள கல்பனாவின் பாத்திரப் படைப்பு மிகவும் செயற்கையானதாகத் தோன்றுகிறது. பப்ளிக் பிராஸிக்யூடர் வேலை பார்க்கும் வாதத் திறமை படைத்த ஒரு பெண் என்னதான் நேர்ந்தாலும், ஓர் ஏழைக் குமாஸ்தாவை, அதுவும் மோசடிக் குற்றம் சாட்டப்பட்டுச் சிறையில் இருந்தவனை மணந்துகொள்ள முன்வருவாளா?

வேலையில்லாமலும், தான் ஒரு குற்றவாளி என்ற மன உறுத்தலுடனும் தாழ்வு மனப்பான்மையோடு தவிக்கும் கணவனைச் சரிப்படுத்துவதற்காக மனைவி தன் பதவியைத் துறப்பதோடு மட்டும் நின்று விடாமல் தன்னைப் பற்றியே அவதூறான செய்தி பத்திரிகையில் வரும்படி செய்கிறாளாம்! எல்லாமே அதீதமான கற்பனைகளாக இருக்கின்றன.

சிவகுமார் ஏழைக் குமாஸ்தா பிரசாத் பாத்திரத்தைப் புரிந்து கொண்டு சிறப்பாக நடிக்கிறார்.

மல்லிகா என்ற ஒரு பாத்திரம். தன் கணவன்தான் பிரசாதை அநியாயமாகச் சிறைத் தண்டனை அனுபவிக்கச் செய்தவன் என்று தெரிய வந்ததும், தன்னையே முதுகில் கத்தியால் குத்திக் கொண்டு கணவனைக் கொலைகாரனாக்க முயல்கிறாளாம்! ஏன் இப்படி. யெல்லாம் கதாசிரியரின் கற்பனை தேறிகெட்டுப் போகிறது?

புகழ் பெற்ற கிருஷ்ணன் பஞ்சு டைரக்ட் பண்ண. பாவம், இப்படி ஒரு கதையில் அகப்பட்டுக் கொண்டிருக்க வேண்டாம்.

'சொன்னதைச் செய்வேன்' என்று சபதம் கூறிப் பெரும் முயற்சியில் இறங்கிய ஒரு பெண்மணி, உருப்படியாக என்னத்தைச் செய்தாள் என்பதை நல்ல முறையில் காட்டினால்தானே பாராட்ட முடியும்? **—கார்த்தன்**

கோயில் பிரசாதத்துடன் திரும்பி வந்திருக்கிறான்.'' அவன் கண்களைத் திறந்து தலையாட்டினான். மறுபடியும் இமைகள் மூடிக் கொண்டன.

சூரமங்கலம் வீட்டில் பயம் புகுந்துகொண்டது. தன் மனத்தைத் திசைதிருப்பக் கிருஷ்ணசாமி கிரேக்க சரித்திரம் படித்துக் கொண்டிருந்தான். பாப்பா சஞ்சிகைகளைப் புரட்டிக் கொண்டிருந்தாள்.


தாங்க முடியாத வலியால் வேதனைப்பட்டுக் கொண்டிருந்த மங்காவுக்கு ஆறுதல் அளிக்க வி. ஆர். அவளைத் தம் மடியில் தாங்கினார். கொஞ்ச நேரத்துக்குப் பிறகு அவர் கால்கள் மரத்துப் போயின. அவளை மெல்லத் திரும்பவும் படுக்கையில் கிடத்தினார். அவள் சொன்னாள்: ''நான் பெரிய சுமைதான்; எத்தனை நேரம்தான் என்னை மடியில் சாய்த்துக்கொண்டிருப்பீர்கள்? அளவிட முடியாத காதலானாலும் அதுவும் எவ்வளவுதான் பொறுத்துக் கொள்ளும்? ஓர் எல்லை வேண்டாமா?'' பத்து நிமிஷங்களுக்குப் பிறகு — இரவு மணி ஒன்பதடித்துச் சற்று நேரம் ஆனதும் அவள் மூச்சு விடுவதை நிறுத்தி விட்டது போல் தோன்றியது. ''மங்கா!'' என்று வி. ஆர். கூவினார். ''மங்கா!'' பதில் இல்லை. அவள் இறந்து விட்டாள்.

(தொடரும்)


தமிழாக்கம்: **வ. ராஜேந்திரன்**

3. நாவலாசிரியரிடம் உரையாடலின்போது வி. ஆர். கூறியது.
4. மங்காவின் கடைசி நாள் பற்றிய இந்த விவரமும் இதைத் தொடர்ந்து வரும் பாராக்களில் உள்ள விவரங்களும் வி. ஆர். கிருஷ்ணசாமி, வி. சாமாச்சார், நாமகிரி அம்மாள் ஆகியோரிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் எழுதியவை. நவம்பர் 5, 1960 தேதியிட்ட சுயராஜ்யாவில் காளா கப்ப ராவ் எழுதிய கட்டுரையும் ஆதாரம்.

அமுல் — உங்கள் பால்காரர்




அமுல் — உங்கள் தேநீர்க்காரர்




½ லிட்டர் டம்ளரில் 2½ டேபிள்ஸ்பூன் அமுல் மில்க் பவுடரை நன்கு குவியச் செய்து போடவும். சிறிதளவு சுடுநீருடன் கலந்து நன்கு கலக்கிப் பசைபோல் ஆக்கிக்கொள்ளவும். பின் அதன் மேல் வரை சுடு நீரை மேலும் சேர்த்து நன்கு கலக்கவும். உங்கள் குழந்தைக்-கான கிளாஸ் அளவு பால் தயார்! (முழுமையான விவரங்களுக்கு டின் மீது பார்க்கவும்.) அமுல் மில்க் பவுடர் தேயிலை பானத்திற்கும் காப்பிக்கும் கூட மிக ஏற்றதாகும்.

அமுல் — உங்கள் தயிர்க்காரர்



கறந்த பாலிற்குச் செய்வது போலவே, மேற்கண்ட முறைப்படி பாலைச்செய்து, சாதாரணமாகச் செய்வது போலத் தயிராகத் தோய்க்கவும்.



அமுல்

மில்க் பவுடர்

வீட்டினுள் இயங்கும் ஒரு பால் பண்ணை

விற்பனைக்கு விடுப்போர்:
குஜராத் கோவாப்பரேட்டிவ் மில்க் மார்க்கெட்டிங் ஃபெடரேஷன் லிமிடெட். ஆனந்த்

RADEUS/AMP-1

மதுர நாயகி

> மதுரை பெரிய கோயிலில் உள்ள மண்டபங்கள்:
>
> அட்ட சக்தி மண்டபம்
> மீனாட்சி நாயக்கர் மண்டபம்
> முதலிப் பிள்ளை மண்டபம்
> கிளிக் கூட்டு மண்டபம்
> கம்பத்தடி மண்டபம்
> வீர வசந்த ராயர் மண்டபம்
> மங்கையர்க்கரசி மண்டபம்
> ஆயிரக்கால் மண்டபம்
> சேர்வைக்காரர் மண்டபம்
> திருக்கல்யாண மண்டபம்

19

லாவண்யா அசையாமல் ஆடாமல் மீண்டும் வைத்த விழியை எடுக்காமல் பூர்ணத்தை ஊடுருவிப் பார்ப்பது போலப் பார்த்தாள். அவனுடைய முகத்தில் பிறிட்டுத் தோன்றிய அகரக் களை இப்போது மறைந்து விட்டது. ஆவேச நிலையில் இருந்தவன் அந்த நிலை அடங்கியதும் காணப்படுவது போல், பூர்ணம் மௌனமாக நின்றான். முகத்தின் பழைய களை திரும்பி வந்தாலும் லாவண்யாவின் கண்களுக்கு அருவருப்பாக இருந்தது.

''என்னை மன்னித்துவிடு, லாவண்யா!''

''பூர்ணம்! முதல்லே வெளியே போ!'' லாவண்யா அவனுடன் இதுவரையில் ஓரிரு வார்த்தைகளைப் பேசியிருக்கிறாள். அப்போதெல்லாம் அவனுடைய பக்தி வேஷத்தை நினைத்து ஒரு மரியாதையை அளித்திருக்கிறாள். இப்போது எந்த மரியாதைக்கும் பூர்ணம் லாயக்கில்லை என்று அவளுக்குத் தோன்றியது.

''என்ன சொன்னே, லாவண்யா?''

''தமிழிலே சொன்னேன், அது உனக்குப் புரியலே போலிருக்கு. இப்போ இங்கிலீஷிலே சொல்றேன். கெட் தி ஹெல் அவுட் ஆஃப் திஸ் ப்ளேஸ்...''

''நான்தான் மன்னிப்புக் கேட்டேனே, லாவண்யா..... நீ என்னை மன்னிக்கக் கூடாதா?''

''க்ளியர் அவுட்!''

''ஓகே, நான் போயிடறேன்... அப்புறமா, உன் அம்மா வந்தப்புறமா திரும்பி வந்துடறேன்.... அதுக்கு முன்னாலே நான் சொல்ல வேண்டியதைச் சொல்லிடறேன் லாவண்யா.. மொட்டையை நம்பாதே...'' மூச்சு விடாமல் —எங்கே லாவண்யா குறுக்கிட்டு மீண்டும் 'வெளியே போ' என்று கத்துவாளோ என்ற பயத்தில் — அவன் வார்த்தைகளைக் கொட்டினான்.

''என்ன சொன்னே?''

''அந்த மொட்டை, யூ மொட்டை.. அவனை நம்பாதே... அவனை இந்த வீட்டுக்குள்ளே விடாதே... அவன்...அவன்...''

''பூர்ணம், உனக்குப் பித்துப் பிடிச்சுடுத்து.... போலி பக்தியிலே ஊரை ஏமாத்தி ஏமாத்தி மூளை சிதறிடுத்து...மொட்டையை நான் நம்பக் கூடாதா?... ஏன்...? அவனுக்கு என்ன?''

இப்போது பூர்ணம் ஒரு சாது போல் நின்றான். எல்லா சக்தியையும் இழந்துவிட்ட நிலையில் அவன் இருப்பதாகத் தோன்றியது. மெதுவாக வார்த்தைகளை அளந்து பேசுவது போலப் பேச ஆரம்பித்தான். லாவண்யா அவன் சொல்லப் போவதைக் கேட்டு முடிக்கும் வரையில் அவனை விரட்ட மாட்டாள் என்ற நம்பிக்கை அவனுள் உதித்தது.

''அவன் ஒரு ரௌடி. ஒரு பாபப் பிண்டம். உங்க குடும்பத்தைக் கெடுக்க நினைக்கிறவன்.''

''அப்படியா? இது உனக்கு எப்படித் தெரிஞ்சுது?''

''இன்னிக்கு நான் சாப்பிடறப்போ அவன் வந்தான். அத்தைதான் பரிமாறினாள். நீலா அப்புறம்தான் வந்தாள்....''


''விஷயத்தைச் சொன்னாத்தானே புரியும்? மொட்டை எப்படி இப்படித் திடீர்னு ரௌடியா மாறினான்!''

''கண்ட கண்டவாளோட ஸ்கூலிலே நிக்கறானே இல்லையோ? அதனாலே ஏற்பட்ட தோஷமாக இருக்கலாம்.''

''இருக்கலாம். ஏன் என் கிட்டே திடீர்னு இதைச் சொல்றே?''

''ஒரு வார்னிங்..எச்சரிக்கைதான்...பாம்பைப் பார்த்ததும் பாம்புன்னு குரல் கொடுக்கிறதில்லையா. அது மாதிரி...''

''மொட்டை ஒரு பசுமாடுன்னு நினைச்சண்டிருந்தேன்'' என்றாள் லாவண்யா.



பி.வி.ஆர்

ஏதோ ஒரு விஷயம் நடந்திருக்கிறது. மொட்டைக்கும் இவனுக்கு மிடையே ஒரு பூசல் தோன்றி அதில் இவன் அவனிடம் நன்ருக வாங்கிக் கட்டிக் கொண்டிருக்கிருன் என்று லாவண்யா கணக்குப் போட்டாள்.

''எனக்கு அந்த ராஸ்கலேச் சின்ன வயசி லேந்து தெரியும். ஆனு இன்னிக்குத்தான்..''

''ஞானம் பிறந்ததாக்கும்?''

''ஞானம் பொறந்ததுன்னு சொல்ல மாட்டேன். தெளிவு உண்டாச்சுன்னு சொல்லுவேன்.''

''என்ன நடந்தது?''

''அத்தை மெட்ராஸுக்கு வந்து அத்திம்பேரோட ட்ரீட்மெண்ட்டைக் கவனிச்சுக்கணும்னு. எனக்கு அயனுவரத்திலே க்வார்ட்டர்ஸ் இருக்கிறதுதான் உனக்குத் தெரியுமே. சுமாரா பெரிய க்வார்ட்டர்ஸ்.''

''க்வார்ட்டர்ஸோட ஸைசைப் பத்தி இப்ப என்ன? மொட்டை ஏன் ரௌடி யானுன்?''

''அத்தை எப்படி என் வீட்டுக்கு வந்து அத்திம்பேருக்கு ட்ரீட்மெண்ட் நடத்தப் போரு பார்த்துக்கிறேன்னு அவன் சவால் விட்டான்.''

''அப்புறம்?''

''நான் இன்னிக்கே ரயிலேறணுமாம்.''

''பாண்டியன் எக்ஸ்பிரஸ் புறப்பட இன்னும் முக்கால் மணி நேரம்தான் இருக்கு!''

''இவன் சொன்னுன்ங்கறதுக்காக நான் ஏன் போகணும்?''

''மொட்டை ரௌடின்னு சொல்றே. அவன் ஏதானும் செஞ்சுட்டா?''

''அவன் மதுரை ரௌடின்னு, நான் மெட்ராஸ் ரௌடி.''

''அதாவது பக்தனுக்குப் பக்தன் ரௌடிக்கு ரௌடி... அப்படித்தானே?''

''என் பக்தியைக் கேலி பண்ணறே...''

''இப்பத்தான் கொஞ்ச நேரம் முன்னே நான் உன் பக்திப் பரவசத்தைப் பார்த்தேனே....அதுக்குத்தானே நீ எங்கிட்டே மன்னிப்புக் கேட்டே .. எனக்கு வேஷம் போடாத ரௌடிகளை ரொம்பப் பிடிக்கும். ஆனு உன்னை மாதிரி வேஷம் போடற ரௌடிகளைப் பிடிக்காது.... சான்ஸ் கிடைச்சா வேஷத்தை மத்தவா முன்னுடி கலேச்சுடுவேன்!''

''பத்து வருஷமா என்னைப் பத்தி எல்லாருக்கும் தெரியும். வருஷா வருஷம் ரெண்டு தடவை சபரி மலை போறது மெட்ராஸ் முழுதும் பிரசித்தம். உன்னை நம்ப மாட்டா...அது கிடக்கட்டும், மொட்டையை இனிமே இந்த வீட்டுக்குள்ளே அனுமதிக்கப்படாது. அத்தை அத்திம்பேர்கிட்டே நானே சொல்லி வைக்கிறேன்... உன்னையும் நீலாவையும் ஏன் சுத்திச் சுத்தி வர்ருன்?''



''அதைப் பத்தி நான் அவன் கிட்டேயே கேட்டுக்கிறேன். நீ இப்போ நடையைக் கட்டு.''

''மொட்டையைப் பத்திச் சொன்னுல் உனக்கு ஏன் எரிச்சல் வரணும்?''

''சொல்றேன்... ஆனுல் உனக்குப் புரிஞ்சுக்கத் தேவையான அறிவு இருக்கோ இல்லியோ!''

''அறிவு கிறிவுன்னு பேசாதே.''

''சரி புத்தி, மூளை, ஞானம் இதெல்லாம் இருக்கோ என்னமோ? மொட்டை அழுக்கு இல்லாத ஒரு ஸ்படிகம். மத்தவாளை ஏமாத்தாமே, மத்தவாளுக்காகக் கால் கடுக்க மணிக்கணக்கா நின்னு அதிலேந்து கிடைக்கிற காசை யெல்லாம் அம்மாகிட்டே கொடுத்து, அவ மனசைக் குளிரச் செய்கிறவன்... எல்லாத்திலேயும் கலந்துண்டு, எதிலேயும் ஒட்டாம வாழறவன் அவன்!''

''அடேயப்பா! பெரிய ராஜரிஷி!''

''அவனோட கால் தூசியைத் தொட்டுப் பார்க்கக் கூட உனக்கு யோக்கியதை இல்லே!''

''வீட்டுக்கு மாப்பிள்ளையா வரப் போறவனைக் குற்றம் சொல்றப்போ, அத்தை பிள்ளை மூணும் மனுஷனுவிடறுன்... உம்... எல்லாம் கால வித்தியாசம்.''

''என்ன சொன்னே?''

பூர்ணம் முதன் முதலாகச் சிரித்தான். சிரிப்பில் ஏகத்தாளம் பொங்கியது.

''நீலாவைத் தன் பிள்ளைக்கு வாங்கிக்கணும்னு மொட்டையோட அம்மா தவம் கிடக்கிறாளாம்!''

''என்ன உளர்றே?''

''க்யூவிலே நிக்கறவனை மனையிலே உட்கார்த்த அவன் அம்மா பார்க்கறு... உனக்குக் கல்யாணம் ஆனதும் நீலா அவன் கூடச் சேர்ந்து மணையிலே உட்காருவா!''

ஒரு கணம் லாவண்யா அயர்ந்து போனாள். மொட்டையும் நீலாவும் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்வதைக் கூட அவள் பார்த்ததில்லை. ஒருவரை யொருவர் விரும்புகிறார்களா? இது எப்படி சாத்தியம்? நீலா ஒரு தடவை கூட அந்தரங்கமாக அவளிடம் மொட்டையைப் பற்றிப் பேசிய இல்லை. பூர்ணம் இப்படி ஒரு குண்டைத் தூக்கிப் போடுகிறானே!

ஆனால் லாவண்யா விட்டுக் கொடுக்கவில்லை.

''ஏன், என்ன தப்பு?''

''உன்னை அட்வகேட் ரமணி கல்யாணம் பண்ணிக்கப் போறதா அந்த ரௌடி சொன்னான். கேட்கறப்பவே மனசு குளிர்ந்தது. நீ ஒரு நல்ல இடம் போய்ச் சேர்றே...ஆனா நீலா....?''

லாவண்யாவுக்கு என்ன சொல்லுவது என்று புரியவில்லை. ரமணியை இப்போதுதான் நினைவிலிருந்து அகற்றி, சாவித்திரி வீட்டு வாசலிலேயே எறிந்து விட்டு வந்திருக்கிறாள். இவன் அவனை மீண்டும் இழுக்கிறான். என்ன சொல்லுவது? திடீரென்று வேதாந்தமாய்ப் பேசினாள்.

''பகவானோட சித்தம் எப்படியோ அப்படித்தான் எல்லாம் நடக்கும். நீ பகவானோட பக்தன்னு ஊரெல்லாம் சங்கு ஊதறே... நீ ஏன் இதைப் பத்தி யெல்லாம் கவலைப்படணும்? பாண்டியன் எக்ஸ்பிரஸ் மதராஸ் போக இன்னும் இருபது நிமிஷம்தான் இருக்கு...''

''நான் இன்னிக்குப் போறதா இல்லே. அத்தை, அத்திம்பேர் மெட்ராஸ் வர்றது பத்தி நிறையப் பேசணும்!''

''அப்போ வெளியிலே ஒரு லாட்ஜிலே போய்த் தங்கு. இந்த வீட்டிலே உனக்கு இனி இடமில்லே.''

''அயனாவரம் க்வார்ட்டர்ஸை அப்படியே உன் அம்மா அப்பாவுக்குக் கொடுக்கப் போறேன். இங்கே எனக்கு இடமில்லையா?''

''அயோக்கியன் வீட்லே நல்லவா தங்கறது பத்தி நான் விமர்சனம் செய்யலே... ஆனா அயோக்கியனை நான் எங்க வீட்டிலே அனுமதிக்க மாட்டேன்.''

''படிச்ச பொண்ணுன்னு என்ன வேணும் னாலும் பேசிடாதே லாவண்யா... உன்னைப் பத்தியும் எனக்குத் தெரியும்!''



வாழ்நாளில் 15 நிமிஷம்

"ஒருவன் புகைக்கின்ற ஒவ்வொரு சிகரெட்டும் அவன் வாழ்நாளில் பதினைந்து நிமிஷங்களைப் பறித்து விடுகிறது" - இது பேராசிரியர் டிரென் டெலன்பர்க் செய்த ஆராய்ச்சியின் முடிவு. இவர் மேற்கு ஜெர்மனியில் ஹேம்பர்க் பல்கலைக் கழகத்தில் பணியாற்றுகிறவர்.

புகையிலைப் புகையில் 600 விதமான உடலுக்குக் கேடுகளை விளைவிக்கும் பொருள்கள் உள்ளன என்று இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக இவர் கூறுகிறார். மற்றுமொரு ஆராய்ச்சி முடிவு: நாளைக்கு இருபது சிகரெட் விதம் இருபது ஆண்டுகளுக்கு ஒருவன் சிகரெட் பிடித்தால் அவன் சுவாச உறுப்புக்களில் மொத்தம் ஆறு கிலோ எடையுள்ள தார் படிகிறது!

"நிகோடின் நீக்கப்பட்ட சிகரெட் என்றும் ஃபில்டர் டிப் சிகரெட் என்றும் பலவிதமாக விளம்பரம் செய்கிறார்கள். இவற்றால் தேகத்துக்கு ஏற்படும் தீமை குறைகிறது என்றும் நம்ப வைக்கப் பார்க்கிறார்கள். இவர்கள் என்னதான் செய்தாலும் புகை புகைதான்; அதனால் ஏற்படும் தீமை தீமைதான்" என்கிறார் பேராசிரியர்.

-ஜெர்மன் ட்ரிப்யூன்



"என்ன தெரியும் உனக்கு?" லாவண்யா திடீரென்று துள்ளிக் கொண்டு எழுந்தாள்.

"நான் எதுக்கு அதையெல்லாம் என் வாயாலே சொல்லணும்?... போன வாட்டி நான் வந்தப்போ நீ ஒரு வெள்ளைக்காரனோடு சிரிச்சுப் பேசிண்டிருந்தே... அப்புறம்தான் தெரிஞ்சுது அவனும் நீயும்...."

"ஆமாம். அவன் பேர் காண்வே.. அமெரிக்கன், மில்லியனர். என்னைக் கல்யாணம் பண்ணிக்கப் போறான்... அவனும் மொட்டையும் இந்த வீட்டு மாப்பிள்ளைகள்...இப்ப நீ என்ன செய்யப் போறே...பைத்தியம் பிடிச்சுத் தெருவெல்லாம் அலையப் போறியா?"

லாவண்யாவின் இடக்கும் நெக்கலும் பூர்ணத்தைத் துவள வைத்தன.

"என்னைப் பத்தி இவ்வளவு மட்டமா நீ பேசறே... என் வீட்டிலே இருந்துண்டு உன் அப்பா தன் சிகிச்சையை நடத்திக்கப் போறார். நினைவிலே வைச்சுக்கோ!"

"ஏன் சும்மா, சும்மா இதையே சொல்லிச் சொல்லிக் காட்டறே?... உன் வீட்டிலே உன் பிச்சையிலே இருக்கிறதை விட என் அப்பா சாகறதே மேல்!"

திடீரென்று பயங்கரமாக ஒலித்த குரல் அவளைத் தாக்கியது.

"என்னடி சொன்னே சங்கரி? இப்ப என்ன சொன்னே? உன் அப்பா சாகணுமா? எதுக்குடி? எதுக்கு? நீ பூதம் காக்கற மாதிரி காத்து வைச்சிருக்கிற பணம் சாகாம இருக்கத்தானேடீ... பூர்ணம், நான் டிக்கட் வாங்கியாச்சுடா! நாளைக்குப் புறப்படறோம்... காண்ட்ராக்டர் ஆடியபாதத்தோட காலிலே விழப் போனேன். ஆனா அதுக்குக் கூட என்னை அவர் விடலே. ஆயிரம் ரூபாயை அள்ளிக் கொடுத்தார்."

"ரொம்ப சந்தோஷம் அத்தே! அத்திம்பேர் கண்டிப்பாப் பொழைச்சுப்பார்... லாவண்யா என்ன சொன்னாங்கறதைச் சரியாப் புரிஞ்சுக்காம அவ மேலே எரிஞ்சு விழுந்திட்டேன்!"

"நீ போடா... என் பெண் சங்கரியைப் பத்தி எனக்குத் தெரியாதா?"

லாவண்யாவுக்குத் தலை சுற்றியது. அவள் வாய் திறவாமல், நைந்து போன டில்லி மோடாவின் மேல் அமர்ந்து ஊமையாகி விட்ட கண்களால் பழைய பத்திரிகையின் பக்கங்களைத் துழாவினாள். வலியில் ஓரிரு முத்துக்கள் பக்கங்களில் சிதறி விழுந்தன.

அதன் பிறகு அங்கு நடந்தது எதுவும், கண்ணில் பட்டாலும் உணர்வை எட்டவில்லை. நீலா வந்து போனாள். தம்பி சுந்து அவசரம் அவசரமாக வந்து பானையிலிருந்து தண்ணீரை மொண்டு மொண்டு குடித்துவிட்டு வெளியேறினான். அப்பா பலராமன் மெள்ள மெள்ள நடந்து வந்து யாரிடமும் எதையும் பேசாமல், ஷர்ட்டைக் கழற்றி விட்டு, துண்டை உதறித் தோளின் மேல் போட்டுக் கொண்டே வந்த வழியில் திரும்பினார். பூர்ணம் பட்டை பட்டையாய் விபூதியைப் பூசிய பின் குங்குமத்தை வட்ட வடிவமாக இட்டுக் கொள்ள ஆரம்பித்தான். அது நெற்றியில் நட்ட நடுவே சரியான அளவுக்குத் துலங்கி யிருக்கிறதா என்பதை அறியக் கண்ணாடியில் ஐக்கியமானான்.

சமையல் அறையில் பாத்திரச் சத்தம் கேட்டது. சீதாமணி ஏதாவது தருவாள் என்ற நம்பிக்கையில் கறுப்புப் பூனை உட்கார்ந்து. விட்டு விட்டுக் குரல் கொடுத்தது.

பக்கத்து வீட்டு ரேடியோ அலறியது.

தெருவில் போகும் சைக்கிள் ரிக்ஷாவின் மணி அடித்தது.

திண்ணையில் யாரோ இரண்டு மூன்று பேர் தாழ்ந்த குரலில் ஏதேதோ பேசின பேச்சு எங்கோ தூரத்திலிருந்து வருவது போல் ஒலித்தது.

லாவண்யா எல்லாவற்றையும் மறந்து, தனக்குள் தானே ஒடுங்கி ஒடுங்கி மாய்ந்து போனாள்.

திடீரென்று "மிஸ் லாவண்யா!" என்ற குரல் அவளுக்கு வெகு அருகே எழுந்தபோது தான் அவள் விழித்துக் கொண்டாள். ஏறிட்டுப் பார்த்தாள். ஆச்சரியத்தையும் திகைப்பையும் அடைய வேண்டிய அவள், இருந்த மனநிலையில் உணர்ச்சியற்ற குரலில், "என்ன வேண்டும், மிஸ்டர் ரமணி?" என்று கேட்டாள்.

ஜீவனற்ற குரலில் ஒலித்த கேள்விக்கு ரமணியால் பதில் சொல்ல முடியவில்லை.

அவனுக்கு லாவண்யாவிடம் என்ன வேண்டும்?

அவனுக்கே புரியவில்லை. அவன் புரியாமல் நிற்கிறான் என்று புரிந்துகொள்ள லாவண்யாவும் சிரமப்படவில்லை. (தொடரும்)

இலங்கைத் தமிழரின் தலைவர்



இலங்கைத் தமிழர்களை ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் மறைந்து விட்டார். இலங்கைத் தமிழர்களின் தன்னிகரற்ற தலைவராக விளங்கியவர். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகத் தலைவர். தமிழர்களிடையே இவருக்கு இருந்த செல்வாக்கு அபரிமிதம் எனில் தமிழரல்லாதார் இவரிடம் வைத்திருந்த மரியாதை அளப்பரியது.

அவரது மறைவால் வாடியிருக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு நமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். திரு செல்வநாயகம் இலங்கைத் தமிழர்களின் பல்வேறு பிரிவினரிடையே ஓர் ஐக்கிய உணர்ச்சியைக் கட்டிக் காப்பதில் பாடுபட்டு வெற்றி கண்டார் என்பதையும் எந்தப் பிரச்னையையும் அஹிம்சா மார்க்கத்தில், தான் அணுக வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார் என்பதையும் மறவாமல் இருப்போம்!

சிதம்பர சுப்ரமணியன்



'சக்ரவாகம்' போன்ற அருமையான சிறுகதைகளும், 'ஊர்வசி' போன்ற உயர்ந்த நாடகங்களும், 'இதய நாதம்', 'மண்ணில் தெரியுது வானம்' போன்ற சிறந்த நவீனங்களும் எழுதிப் புகழ் பெற்ற சிதம்பர சுப்ரமணியன் புகழுடம்பு எய்தி விட்டார்.

இசைப் பெருமை கொண்ட குடும்பத்தில் இசை ஞானத்தோடு பிறந்த அவர் சிறந்த வைணிகர்; சங்கீத ரசிகர். 'இதய நாதம்' என்னும் நவீனத்தில் அவர் அநுபவம் பேசி இசைப் பெருமையோடு இலக்கியப் பெருமையும் பெறுகிறது.

எழுத்துக்கு ஒரு குறிக்கோள் வேண்டும் என்ற கொள்கையை உடைய அவரது எழுத்துக்கள் தற்காலத் தமிழ் இலக்கியத்தில் நிலைத்து நிற்பவை. ஆன்மிகத் துறையிலும் அவரது பேனா நற்பணி புரிந்திருக்கிறது. பழகுவதற்கு எளியவரான அவருக்கு ஏராளமான நண்பர்கள். குடும்பத்தினரையும், எழுத்தாள நண்பர்களையும் துயரத்தில் ஆழ்த்தி விட்டுத் தமது அறுபத்தைந்தாவது வயதில் இறைவனடி சேர்ந்து விட்டார். என்றும் என்றென்றும் அவர் பெயர் இலக்கிய வானில் நிலைத்து நிற்கும்.



''என் மனைவி ரொம்ப ஸீரியஸாக இருக்கிறாள்.''

''அடடா! என்ன உடம்பு?''

''ஸ்டெனோவுடன் நான் சிரித்துப் பேசியதைப் பார்த்து விட்டாள். அதிலிருந்து அவள் ஸீரியஸாக இருக்கிறாள். என்னுடன் சிரித்துப் பேசுவதில்லை!''

''ஆபீஸில் என்னைப் பார்த்து எல்லோரும் கடகடவென்று சிரித்தார்கள்.''

''எதற்கு?''

''மாடிப்படியிலிருந்து தடதடவென்று உருண்டேன்!''






''எனக்கு நேர்ந்த துன்பத்தைக் கேள்! என் மனைவி என்னைப்பிரிந்து போய் விட்டாள்.''

''எங்கே?''

''மாட்னி சினிமா பார்க்க!''

கேர்ஃப்ரீ* பாதுகாப்பு



அதாவது இது முழுமையான பாதுகாப்பு அளிக்கிறது. இதற்காக நீங்கள் கொடுக்கும் பணத்தைவிட மிக அதிக மதிப்பு வாய்ந்தது.

மாதத்தில் அந்த ஐந்து நாட்கள், பெண்களின் உடலுக்கு முழுவதும் நம்பகமான, தனிப்பட்ட பாதுகாப்பு தேவைப்படுகிறது: அதாவது கேர்:ப்ரீ பாதுகாப்பு. சானிடரி பாதுகாப்பு சாதனங்களை உருவாக்கும் உலகின் தலையாய நிறுவனமான ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன் இதைத் தயாரிக்கிறார்கள். ஒரு பெண்மணி பாதுகாப்பையும் காப்புறுதியையும் உணருவதற்குத் தேவையான சிறந்த அம்சங்களைக் கொண்டுள்ளது கேர்:ப்ரீ.

விசேஷ ஒண்டர்ராப் மேலுறை
கேர்:ப்ரீ தன் வடிவத்தை சீராகவைக்க உதவுகிறது...சாதாரண நேப்கின்களைப் போல் இது வளையவோ, கிழியவோ செய்யாது. இது உட்புற அடுக்குகளில் ஈரத்தை உறிஞ்சிக் கொள்கிறது. எனவே உங்கள் சருமம் உலர்ந்து இருக்கும், உங்களுக்கு சௌகரியமாக இருக்கும்.

நீலநிற பிளாஸ்டி-ஷீல்ட் தடுப்பு
கேர்:ப்ரீயின் அடிப்பாகம் மற்றும் பக்கங்களைப் பராமரிக்கிறது பாதுகாப்பான பாவித்தின். ஆகையால், அது இடம் விட்டு நகரும் வாய்ப்பில்லை; கறை படியும் பயம் இல்லை.

அதிக உறிஞ்சும் தன்மையுள்ள விசேஷ பொருள்
மிக நன்றாக உறிஞ்சுகிறது; உறுதியுடன் பாதுகாப்பளிக்கிறது.

கச்சிதமாகப் பொருந்த முனைப்பாகம்
கேர்:ப்ரீ மட்டுமே விரும்பியபடி சரிசெய்து கொள்ளும் நீளத்தில் வருவதால், அது உங்களுடைய உடலில் கச்சிதமாகப் பொருந்துகிறது. ஒவ்வொரு பேக்கிலும், இலவச கேர்:ப்ரீ பெல்ட் ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

எளிதில் ஒதுக்கிவிடலாம்
கேர்:ப்ரீ ஒரு ஆபத்தற்ற, எளிதில் ஒதுக்கித் தள்ளக்கூடிய நேப்கின்; இதை பிளஷ்ஷில் தள்ளிவிடலாம்...வெளியில் செல்லும் போதோ, பயணத்தின்போதோ இது ஒரு வரப்பிரசாதம்—
கேர்:ப்ரீ பாதுகாப்புமுழுமையான பாதுகாப்பின விரும்பும் பெண்மணிக்கு இது மிகவும் முக்கியமானது.
கேர்:ப்ரீ: உங்களுக்கு முழுமையான உறுதி தரும் பாதுகாப்பு.





© J&J 76

கேர்ஃப்ரீ:
உங்களுக்கு முழுமையான உறுதி தரும் பாதுகாப்பு.

சானிடரி நேப்கின்களின் வர்த்தகப் பெயர். கேர்:ப்ரீ மற்றும் ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன், ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன், யு. எஸ். ஏ.-யின் ட்ரேட்மார்க்குகள்.

Johnson & Johnson*

பந்த பாசங்களுக்கு அப்பால்!

'பரந்தாமன்'

சஞ்சய் காந்தி அரசியலில் தமது அன்னையின் செல்வாக்கைப் பயன்படுத்தி அளவுக்கு மேல் ஈடுபட்டது இந்திய அரசியலில் பெரிய மாற்றத்துக்கும் இந்திரா காந்தியின் தோல்விக்கும் காரணமாக அமைந்தது. சஞ்சய் தமது அறிக்கையில் அன்னையின் தோல்விகளுக்குத் தாம் காரணமானது பற்றி வருந்தி மன்னிப்புக் கோரி பொது வாழ்க்கையிலிருந்து விலகிக் கொள்வதாக அறிவித்தார். பொது வாழ்வில் சொந்தங்களின் குறுக்கீடுகளால் பாதகங்கள் ஏற்பட்டிருப்பது இது முதல் தடவை அல்ல.

கலைஞர் கருணாநிதிக்கும், புரட்சி நடிகர் எம். ஜி. ஆருக்கும் பிரிவு மனப்பான்மை ஏற்பட்டதற்கே, கலைஞர் தமது மகனைக் கலைத் துறையில் செலுத்தி முன்னேற்ற விரும்பி அதற்கு அரசியல் செல்வாக்கும் பெறுவதற்கு எடுத்துக் கொண்ட தனி முயற்சிகளைத்தான் முக்கிய காரணமாகச் சொல்வார்கள்.


சமீபத்தில் நடந்த பொதுத் தேர்தலின் போது, நேருஜியின் சகோதரி விஜயலட்சுமி பண்டிட் பிரசாரத்தில் அதி தீவிரமாக இறங்கி, இந்திரா காந்தியை எதிர்த்துப் போராடினார். இது அவரது பந்த பாசங்களுக்கு அப்பாற்பட்ட நிலையைத்தான் காட்டுகிறது.

1962ல் சேலம் மாவட்டத்தில் லோக சபைத் தொகுதியில் ராஜாஜி மகன் சி. ஆர். நரசிம்மன் வேட்பாளராகப் போட்டியிட்டார். அவர் நின்றது காங்கிரஸ் வேட்பாளராக. அவருடைய தந்தை ராஜாஜி தமது சுதந்திரக் கட்சியின் சார்பில் காங்கிரஸுக்கு எதிராக நின்றவருக்கு ஆதரவு காட்டிப் பிரசாரம் செய்தார். அந்தத் தேர்தல் களத்தில் தமது மகன் என்பதற்காக அவர் தாட்சண்யம் காட்டவில்லை. அவர் தோற்றார். இந்த அவரது உறவுக்கு அப்பாற்பட்ட நிலையைப் பல கூட்டங்களில் ம. பொ. சி. போற்றிப் பேசியதுண்டு. இந்த நடுநிலை பெரும் பதவிகளை வகித்த போதிலும் பூரணமாக அவரிடம் இருந்தது.



ஒரு தடவை, பொதுத் தேர்தலில் டாக்டர் சுப்பராயன் அவர்களின் குடும்பம் முழுவதுமே தேர்தலில் நின்றது. டாக்டர் சுப்பராயனும், அவரது மனைவி ராதாபாய் சுப்பராயனும் காங்கிரஸ் சார்பில் வேட்பாளராகத் தனித் தனித் தொகுதியில் நின்றார்கள். அதே போல் அவர்களது புதல்வர் மோகன் குமாரமங்கலமும், மகள் பார்வதி கிருஷ்ணனும், தனித் தனியாக வெவ்வேறு இடங்களில் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் நின்றார்கள். தேர்தல் முடிவு எல்லோருக்கும் தோல்வியைத் தந்தது. பல பொதுக் கூட்டங்களில் டாக்டர் சுப்பராயன் அவர்களும் மகன் மோகன் குமாரமங்கலம் அவர்களும் ஒரே காரில் வந்து கருத்தரங்க மேடைகளில் நேருக்கு நேர் மாறுபட்ட கருத்துக்களைப் பேசிவிட்டு அதே காரில் ஒன்றாகத் திரும்பிச் செல்வதுண்டு.

இன்றைய பிரதமராக இருக்கும் மொரார்ஜி தேசாய் தனது ஒரே மகனைத் தமது அந்தரங்கக் காரியதரிசியாக முன்பு டெல்லியில் பதவியிலிருந்தபோது வைத்துக் கொண்டிருந்தார். மகனைத் தொடர்புபடுத்தி



ஏற்பட்ட ஊழல் புகார்களைச் சோஷலிஸ்ட் குழுவினர் மக்கள் சபையிலும் வெளியிலும் கூறினர். பத்திரிகைகளிலும் அடிபட்டது. மொரார்ஜி இந்திராஜியைப் போலத் தமது மகனுக்காகப் பரிந்து பேசாமல் குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை என்பதைப் போதிய விளக்கங்களுடன் கூறிவிட்டு, மேலும் புகார் வராமல் இருக்கத் தமது மகனைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டார்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் எம். ஜி. ஆரின் அண்ணன் சக்கரபாணியின் மகனைக் கட்சியினர் எம். ஜி. ஆரின் வாரிசு என்று சொல்லிச் சுவரொட்டி விளம்பரங்கள் மூலம் அறிவித்ததைக் கண்டித்து எம். ஜி. ஆர். அறிக்கை விட்டார். ''அவன் சொந்த முறையில் சொந்தத் தகுதியில் பொது வாழ்க்கையில் வளர வேண்டுமே தவிர உறவு முறையில் அல்ல'' என்பதாக அறிவித்து மேற்கொண்டு அப்படி விளம்பரம் செய்வதையும் தடுத்து விட்டார். தமது மகனைத் தமது தம்பியே இப்படி அவமதித்து விட்டார் என்ற கோபம் அண்ணனுக்கு ஏற்பட, கட்சியிலிருந்தே ராஜினாமாச் செய்ய



வும் முன் வந்தார். எனினும் எம். ஜி. ஆர். தமது நிலையிலிருந்து மாறவில்லை.

கேரளாவின் முதலமைச்சராக ஈ. எம். எஸ். நம்பூதிரிபாட் இருந்தபோது அவரது மகள் வைத்தியக் கல்லூரியில் சேருவதற்கான சந்தர்ப்பம் வந்தது. அவள் நியாயமான தகுதிகள் பெற்றிருந்தும், கேரளாவில் இடம் பெறுவதாக இருந்தால் கெட்ட பெயர் ஏற்படும் என்று கருதிய நம்பூதிரிபாட் அவளை வேலூரில் உள்ள கல்லூரிக்குப் போகச் சொல்லி விட்டார்.

காங்கிரஸில் பெருந் தலைவர்களுள் ஒருவராக விளங்கிய பட்டாபி சீதாராமையா அகில இந்தியக் கதர் சங்கத்தின் தலைவராக இருந்தபோது, இந்தியாவில் உள்ள அதன் கிளைகள் பலவற்றுக்கும் தமது உறவினர்களும் வேண்டியவர்களுமான பலரைப் பதவியில் அமர்த்தி விட்டார். இது காங்கிரஸுக்குள் ஒரு பெரும் பூசலைக் கிளப்பி விட்டது. காந்திஜிக்கு மிக வேண்டியவரான பட்டாபி ஜியை இதைப் பற்றி யாரும் குறை கூறத் துணியவில்லை. புகைச்சல் காந்திஜியை எட்டியது. காந்திஜி அவரை அழைத்து 'இப்படி ஏன் செய்தீர்கள்?' என்று கேட்டார். அதற்கு அவர் சற்றும் தயங்காமல், ''நான் ஒரு நிர்வாகத்தைத் திறமையாக முழுப் பொறுப்பெடுத்து வெற்றிகரமாக நடத்த வேண்டும் என்றால், எனக்கு நம்பிக்கையான, பிடித்தமான உறவினர்களையும், வேண்டியவர்களையும் அல்லாமல், வேறு யாரை வைத்து நான் வெற்றி காண முடியும்?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டார். இந்த உண்மையான பச்சைப் பதிலைக் கேட்டுக் காந்திஜியும் சிரித்து விட்டார்.

சரித்திரத்தில் மன்னர்களைச் சார்ந்த நெருங்கிய உறவினர்கள் தான்தோற்றித்தனமாக நடந்து கொண்டதற்குப் பரவலான சான்றுகள் உள்ளன. இதற்கு மாறாகக் கண்டிப்புடன் நடந்து கொண்டவர்களும் உண்டு. ஒருமுறை இப்பு தவறான வழியில் சில காரியங்களைச் செய்து விட்டதால் நாட்டில் சிறு குழப்பம் ஏற்பட்டது. இந்தத் தகவல் ஜஹருக்குத் தெரிந்ததும் இப்புவை அழைத்து வரச் செய்து, சாதாரணமாகத் தம் கீழ் உள்ள உத்தியோகஸ்தர்களுக்கு வழங்கும் தண்டனை முறையான 'கொறடாவால் அடிப்பதை'த் இப்புவுக்கும் நடத்திக் காட்டினார். தமது மகன் என்பதற்காக அவர் கருணை காட்டவில்லை. மனுநீதிச் சோழன் கதையும் நமக்குத் தெரிந்ததுதானே!

கோடையிலே சிரிப்பாற்றிக் கொள்ள...

தரஜா

○ ''போன மாசந்தான் உங்கிட்ட புதுசா புடவை வாங்கினேன்.... நனைச்சு வெயில்லே உலர்த்தினேன் .... பார்டர் அப்படியே கரைஞ்சு போயிடுத்தே!''

''நான்தான் அப்பவே சொன்னேனே அம்மா அது ஐஸ்கிரீம் பார்டர்னு!''

○ ''ஸம்மர் முடியவரைக்கும் ஆபீஸிலே எல்லாரும் பனியனோட வேலை செய்யலாம்னு ஆர்டர் போட்டுட்டேன்....''

''ஐயே! பார்க்கறதுக்கு நல்லாவே இருக்காதே!''

''நீங்க ஒண்ணு! நம்ம மில்லிலே பனியன் தயாரிக்கறதுதானே!.... அதுக்கு இது நல்ல விளம்பரமாச்சே!....''

○ ''ஜில்லுன்னு என்னப்பா இருக்கு?...''

''இட்லி, தோசை, வடை, போண்டா - எல்லாமே ஜில்லுன்னுதான் இருக்கு!...''

○ ''வெயில்காலம் வந்துடுத்து. இனி அடிக்கடி கூலிங் கிளாஸ் வாங்க வேண்டியிருக்கும்....''

''அடிக்கடி எதுக்கு? ஒண்ணு வாங்கினால் போதாதா?''

''நான் இரவல் வாங்கறதைச் சொல்றேன்!''



○ ''நரசிம்! அதோ ஒருத்தன் சுண்டல் வித்துண்டு போறான் பாரு.... அவன் அதிர்ஷ்டசாலி....வருஷம் தவறாமல் ஊட்டிக்குப் போயிடறான்....''

''அப்படியா? ஆச்சர்யமாயிருக்கே!''

''ஆமாம். அங்கே போய் சுண்டல் விக்கிறான்!''

○ ''என்னது! பாதாம்கீர், ஐஸ்கிரீம், லஸ்ஸி, இளநீர், ஐஸ் வாட்டர் எல்லாம் தினமும் சாப்பிட்டதுனாலே வேலை போயிடுத்தா உனக்கு? அக்கிரமமா இருக்கே!.... நீ எங்கே வேலை பார்த்தே?....''

''நியூ கிருஷ்ணா பவன்லே!....''

○ ''ஊட்டியிலே சித்தப்பா.... கொடைக்கானலிலே அத்தை ...... ஏற்காட்டிலே பெரியப்பா இப்படி எல்லாரும் இருந்தும் என்னாலே ஸம்மருக்கு எங்கேயும் போக முடியலே....''

''ஏன்?''


''யாராவது விருந்தாளிங்க வந்துடப் போறாங்களேன்னு பயந்து அவங்க எல்லாருமே இப்போ மெட்ராஸுக்கு வந்துட்டாங்க!....''

○ ''பாதாம் கீருக்கு அசல் பாதாம் பருப்பு; பழ ஜூஸுக்கு புத்தம் புதுப் பழங்கள்; இப்படிப் போட்டு ஹோட்டல் நடத்தினவன் யார் நான்..''

''இப்போ என்ன பண்றீங்க?''

''நிறையத் தண்ணீர் விட்டு நீர் மோர் விக்கிற தண்ணீர்ப் பந்தல் வச்சிருக்கேன்!...''

சாட்சி நம்பர் 3



விமல் மித்ர

தமிழாக்கம் ரா. வீழிநாதன்

10. "இது எந்த ஊர் நியாயம், சார்?"

நிசிகாந்தனின் அந்தக் கேள்விக்காக நான் அயர்ந்து விடவில்லை. நான் கேள்விப் பட்டது பொய்யாக இருக்க முடியாது என்று நம்பிவிட்ட நான், "நீ உன் மனைவியைப் பணம் சம்பாதிக்கும் கருவியாக்குகிறாய். எனக்கு எல்லாம் தெரியும். உனக்கு அதற் குரிய தண்டனை கிடைக்க வேண்டும்!" என்றேன், குரலில் சிறிதும் பிசிறு இல்லாமல்.

"நீங்கள் நாலும் தெரிந்த, நல்லது கெட் டது அறிந்த அறிவாளியாக இருந்து கொண்டு இப்படிப் பேசுகிறீர்களே! உங்களை நான் எந்தக் கணக்கிலே எடுத்துக் கொள்வது, சொல்லுங்கள்? உங்களுக்கு இதெல்லாம் யார் சொன்னது? சொல்லுங்கள்! மல்லிக் கிழவன் இங்கு வந்திருந்தானா?" என்று கேட்டான் நிசிகாந்தன்.

"அதையெல்லாம் தெரிந்து கொண்டு நீ என்ன செய்யப் போகிறாய்?"

"இப்படியெல்லாம் கதை கட்டி விட்டவன் யாராயிருந்தாலும் சரி, அவன் பெயரைச் சொல்லுங்கள்! அவன் கழுத்தைப் பிடித்து உங்கள் காலடியிலே கொண்டு வந்து தள்ளி மன்னிப்புக் கேட்க வைக்கவில்லை என்றால் என் பெயர் நிசிகாந்தன் இல்லை. அவன் பெயரை மட்டும் சொல்லுங்கள்! நிச்சயமாக இது அந்தக் கெட்ட சாதிப் பயல் மல்லிக்கின் வேலையாகத்தான் இருக்கணும். அவன் மட் டும் இப்பொழுது என் முன்னாலே வந்தான் என்றால், அவன் அப்பனுக்கு ஒரு குரல் அழுது கொண்டு உண்மையை ஒப்புக் கொள்ளும்படி செய்து விடுவேன்!" என்றான் நிசிகாந்தன்.

"உன் மனைவி சரயுவேதான் இதெல்லாம் சொன்னாள்!"

"சரயுவா? சரயுவா சொன்னாள்?"

"ஆமாம். சரயுவுக்கெதிரே போய் நிற்க உனக்குத் துணிச்சல் உண்டா? துணிச்சல் உண்டு என்றால் இப்பொழுதே அவளிடம் போ, பார்ப்போம்!" என்றேன்.

"துணிச்சல் இல்லை என்று நீங்கள் நினைக் கிறீர்களா? இதோ இப்பொழுதே அவளிடம் போகிறேன்; போய்க் கேட்கிறேன். பச்சை பச்சையாகவே கேட்கிறேன். எவளுக்காக நான் திருடினேனோ, அவளே என்னைத் திரு டன் என்று சொல்லுகிறதா? என்ன நியாயம் சார் இது? உங்களுக்குத் தெரியுமா? அன் றைக்கு மட்டும் நான் இல்லையென்றால், சரயு பட்டினி கிடந்தே செத்திருப்பாள்! அப்படிச் சாகவில்லை யென்றால் தெருத் தெருவாக, வீடு வீடாகப் பிச்சை வாங்கிக் கொண்டு திரிந்திருப்பாள். இன்று என் பெயரையே கெடுக்கிறாளா? என் முகத்தில் சேற்றை வாரிப் பூசுகிறாளா? போய்ப் பார்த்து விடுகி றேன் ஒரு கை! இப்பொழுதே போகிறேன்! போய்க் கேட்கிற கேள்வியிலே நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாக வைக்கிறேன். என்னை என்னவென்று எண்ணி விட்டாள்?"

நிசிகாந்தன் இப்படிக் குமுறிக் கொண்டு புறப்பட்டானே ஒழிய நின்று விட்டான். "எப்பொழுது இத்தனை தூரம் பேச்சு வந்து விட்டதோ, உங்களிடம் சொல்லி விட்டே போகிறேன். இதே நிசிகாந்தன் சரயுவுக்காக என்னவெல்லாம் செய்யவில்லை என்கிறீர்கள்? அவள் பாகிஸ்தானிலிருந்து அடித்துத் துரத் தப்பட்டு அகதியாக வந்த பொழுது, நிண்டா டித் தெருவிலே நின்று கொண்டிருந்தான் சார்!" என்றான்.

"என்ன சொல்லுகிறாய் நீ?"

"உண்மையைத்தான் சொல்லுகிறேன். நாங்கள் அகதிகள், கூட்டம் கூட்டமாக இந்தியாவுக்கு வந்து கொண்டிருந்தோம். எத்தனையோ பேர் வழியிலே செத்துப்போய் விட்டார்கள். எத்தனையோ பேரைக்கொன்று போட்டு விட்டார்கள். அப்பொழுதுதான் கான்களும் பட்டான்களும் அவளைப் பிடித்து இழுத்துப் போய்க் கொண்டிருந்தார்கள்."

"பட்டாணியர்களா?"

"ஆமாம், சார்! பாகிஸ்தானத்துப் பட்டாணியர்கள்!"

"ஏன்? ஏன் பிடித்து இழுத்துப் போய்க் கொண்டிருந்தார்கள்?"

"ஏன், சார்! அத்தனை அழகான பெண் ணைப் பார்த்தால், ஆசை ஏற்படாமல் இருக்குமா? அவர்களும் மனிதர்கள்தானே? அவர்கள் இழுத்துக் கொண்டு போவதைப் பார்த்ததும் நான் ஓடினேன். என்னை அவர்கள் கொன்றே போட்டிருப்பார்கள். ஆனால் நான் உயிரைப் பொருட்படுத்தவில்லை. ஒரு பெண் சீரழிவதை ஒரு நல்ல மனிதன் எப்படி சார் தன் கண்ணாலே பார்க்க முடியும்? நானும் மனிதன்தானே? எனக்கும் அம்மா, அக்கா, அண்ணி, தங்கை, என்று எத்தனையோ உறவு முறையினர் இருந்தார்கள். அவர்களை யும் வெறிபிடித்த இந்த ஜனங்கள் இப்படித் தான் சீரழித்துக் கொன்று போட்டார்கள். இந்தக் கொடுமையைப் பார்க்கச் சகியாத நான் அவர்கள் மேலே பாய்ந்து விட்டேன். வெறுங் கையோடுதான்! அவர்களுடைய கையிலோ ஆயுதங்கள் இருந்தன. நான்

காலில் விழுந்து கெஞ்சினேன். ''கமாண்டர் சாஹப்! விட்டு விடுங்கள் இவளை! இவளுக்குப் பதிலாக நீங்கள் என்ன கேட்டாலும் தருகிறேன்!'' என்று வேண்டினேன். என் கையிலே கொஞ்சம் பொன் இருந்தது. பணமும் இருந்தது. நான் அதையெல்லாம் அவர்களுடைய காலடியிலே போட்டுக் கால்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு அழாக் குறையாகக் கூறினேன். ''இவள் என் மனைவி, சார்! என்னிடம் உள்ள எல்லாவற்றையும் எடுத்துக் கொள்ளுங்கள், இவளை மட்டும் விட்டு விடுங்கள்!'' என்றேன்.

நிசிகாந்தன் சொல்வதெல்லாம் எனக்கு மர்மக் கதைபோலவே தோன்றியது. நான் மனத்தைப் பறிகொடுத்துச் சுவாரஸ்யமாகக் கேட்டுக் கொண்டிருந்தேன். இருந்தாலும் ஐயம் தலைதூக்கவே, ''இதெல்லாம் உண்மை தானா அல்லது வெறும் கட்டுக் கதையா?'' என்று அவனைக் கேட்டேன்.

நிசிகாந்தன் சட்டென்று என் கால்களைப் பற்றிக் கொண்டான். ''நான் உங்கள் காலைத் தொட்டுச் சொல்லுகிறேன், சார்! நான் சொல்வது எல்லாம் உண்மை. இம்மிகூடப் பொய் இல்லை. சரயுவுக்காக நான் செய்தாற் போல் அவளுடைய அப்பன் – அண்ணன்கூடச் செய்திருக்க மாட்டார்கள்!'' என்றான்.

''அப்புறம்?'' நான் கேட்டேன்.

''அப்புறம் என்ன? இன்னும் சிலர் எங்களோடு சேர்ந்து கொண்டார்கள். எல்லோரும் ஒன்று போல, 'சரயு இவன் மனைவிதான். எங்களுக்கு நன்றாகத் தெரியும். விட்டு விடுங்கள்!' என்று வாதாடினார்கள். எல்லோரையும் அவர்கள் சோதனைப் போட்டார்கள். ஒவ்வொருவரிடமிருந்தும் ஏதாவது பணம் – காசு, நகை நட்டு என்று கிடைத்தது. பணம் – காசு, பொன் – வெள்ளிக்கு மயங்கியோ அல்லது இரக்கப்பட்டோ தானோ, தெரியாது. அவர்கள் சரயுவை விட்டு விட்டார்கள். நான் சரயுவை அழைத்துக் கொண்டு கல்கத்தாவுக்கு வந்தேன். எப்படியாவது கல்கத்தா அடைந்து விட்டால் சொர்க்கத்தை அடைந்து விட்டாற்போல என்று மனக்கோட்டை கட்டிக் கொண்டிருந்தேன். ஆனால் கல்கத்தா இத்தனை பெரிய நரகமாக இருக்கும் என்று நான் அப்போது கனவிலும் கருதவில்லை!'' என்றான் நிசிகாந்தன்.

''ஏன்? இதை நரகம் என்று ஏன் சொல்கிறாய்?''

''நரகம் என்று ஏன் சொல்லக் கூடாது? நரகம்தானே இது? நரகத்தை நரகம் என்று சொல்லாமல் வேறு எப்படிச் சொல்லுவதாம்? ஓர் அழகான பெண்ணைப் பார்த்து விட்டால், மக்களின் கண்கள், மின்னல் வெட்டினாற் போல் எப்படிப் பளிச்சிடுகின்றன, தெரியுமா? எங்களுக்கும் முதலில் ஒரு முகாமில் இடம் கிடைத்தது. அங்கே அகதிகளுக்கு இலவச உணவு வழங்கினார்கள். நான் அந்த முகாமில், என்னைச் சரயுவின் கணவன் என்று எழுதி வைத்தேன். சரயு தன்னை என் மனைவி என்று பதிந்து வைத்தாள்.''

என் விழிகள் வியப்பால் விரிந்தன. ''என்ன சொல்லுகிறாய் நீ? அதற்கு முன் உங்கள் இருவருக்கும் அறிமுகம் கிடையாதா?'' என்று கேட்டேன்.

''அறிமுகமாவது, மண்ணாவது? அதற்கு முன்னாலே நான் சரயுவைப் பார்த்ததுகூட இல்லை. நீங்கள் அறிமுகம் வரைக்கும் போய் விட்டீர்களே! அவளுக்கும் என்னைத் தெரியாது. எனக்கும் அவளைத் தெரியாது. அவள் பரீத்புரிலோ அல்லது அதற்குப் பக்கத்தில் வேறு எங்கேயோ இருந்தாள். என் ஊரோ பாரிஸால். இது ஒரு மூலை, அது ஒரு மூலை. அப்படியிருக்கும் போது அறிமுகப் பேச்சுக்கே இடம் ஏது? ஆனால் இங்கே வரவேண்டிய வலுக்கட்டாயம் ஏற்பட்ட பொழுது இரண்டு பேரும் ஓர் உறவைச் சிருஷ்டித்துக் கொண்டு எங்களை அறிமுகப் படுத்திக் கொள்ளும்படியாயிற்று. இல்லையென்றால் எல்லோரும் சந்தேகப்பட மாட்டார்களா? கணவன் – மனைவி என்று பதிந்து கொண்டு விட்டால், அப்புறம் சள்ளை இல்லை, பாருங்கள்!'' என்றான் நிசிகாந்தன்.

என் வியப்பு தீரவில்லை. எனவே, என் விழிகள் கொட்டவில்லை.

''என்னை இப்படி மனைவி என்று ரிஜிஸ்தரில் பதிந்திருக்கிறீர்களே! அப்புறம் நம் ரகசியம் யாருக்காவது தெரிந்து போய் விட்டால் என்ன ஆகும்?'' என்று என்னைச் சரயு தனிமையில் ரகசியமாகக் கேட்டாள்.

''அதெப்படித் தெரியும்? நாம் இருவரும் யாரிடமும் எதுவும் சொல்லவில்லை என்றால் மூன்றாம் மனிதருக்கு எப்படி நம் ரகசியம் தெரியும்? இரண்டு கைகள் சேர்ந்து கொட்டினால்தானே ஓசை? கவலைப்படாமல், நீயும் ரகசியத்தைக் காப்பாற்று. நானும் காப்பாற்றுகிறேன்'' என்று அவளைச் சமாதானப் படுத்தினேன்.

''நீங்கள் இலேசாகச் சொல்லி விட்டீர்கள். ஆனால் நான் என் பகுத்தறிவுக்கு என்ன பதில் சொல்லுவேன்? அது நமது நொண்டிச் சமாதானத்தை ஏற்குமா?'' என்றாள் சரயு.

அவள் பேச்சு பொடி வைத்தாற் போலத் தோன்றவே, நான் விதிர்விதிர்த்துப் போனேன். எனக்கு அப்பொழுது இந்தப் பெண் இவ்வளவு மட்டரகமானவளாக இருப்பாள் என்று எங்கே தெரிந்திருந்தது? முகத்தைப் பார்த்தால் நல்ல வீட்டுப் பெண்ணாகத்தான் தோன்றினாள். நாட்டுப் பிரிவினை காரணமாக நாதியற்று வந்த பெண் என்ற இரக்க உணர்வே என்னிடம் மேலோங்கி நின்றது.

''பகுத்தறிவா? என்ன சொல்ல விரும்புகிறாய் நீ?'' என்று அவளைக் கேட்டேன்.

''பகுத்தறிவு என்றால் தெரியாதா உங்களுக்கு? நான் வீடு – வாசல், பணம்–காசு, உற்றார்–உறவினர் எல்லாவற்றையும் இழந்து விட்டேன். ஆனால் அறிவை இழக்கவில்லை. அதை இழக்கவும் விரும்பவில்லை!'' என்றாள் சரயு.

''நீ உன் அறிவை இழக்காமல் இருக்க நான் என்ன செய்ய வேண்டும் என்று எண்ணுகிறாய், அதைச் சொல்லு!'' என்று கேட்டேன் நான்.

''அறிவு – விவேகம் என்கிறதெல்லாம் எனக்கு மட்டும் தனிப்பட்ட சொத்து இல்

லையே! அது உங்களுக்கும் சொந்தமானது தானே? இல்லையென்றால், ஊர் பெயர் தெரியாத ஒரு பெண்ணுக்காக நீங்கள் உங்களிடமிருந்ததையெல்லாம் அன்று அப்படிக் கொடுத்திருப்பீர்களா?'' என்று ஒரு கேள்வியைச் சாட்டையாகச் சொடுக்கினாள் சரயு.

அது ஒரு புறம் இருக்கட்டும். அப்பொழுது நான் நான் கல்லூரிப் படிப்பை முடித்துக் கொண்டு வெளியே வந்திருந்தேன். சாராயம் சீராயம் குடிப்பதில்லை. மனத்துள் எத்தனையோ சீரிய கொள்கைகளுக்கு இடம் கொடுத்திருந்தேன். அந்த வெறியிலே, ''என் தாய் — தங்கை விஷயத்தில்கூட இதே காரியத்தைத்தானே செய்திருப்பேன். நான் உனக்காகத் தனிப்பட எதுவும் செய்து விடவில்லையே!'' என்றேன்.

''அது சரி. ஆனாலும் நீங்கள் என்னோடு ஒரே வீட்டில், ஒரே அறையில் தூங்குகிறீர்கள். இது சரியா?'' என்று கேட்டாள் சரயு.


''அவரவர் மனத்தைப் பொறுத்தது. நீ கெடுதல் என்று நினைத்தால் கெடுதல். நல்லது என்று நினைத்தால் நல்லது. நீ உன் படுக்கையிலே தூங்குகிறாய். நான் என் படுக்கையிலே தூங்குகிறேன். என்றாலும் படுப்பது ஒரே அறைதானே என்று நீ கூறலாம். மெய்தான். அறையில் தடுப்பு கிடையாது; சுவர் கிடையாது. குருதி ஓடும் இந்தத் தசைப் பிண்டத்துக்கு ஓர் உணர்ச்சி உண்டு. அதன் வசப்பட்டு நான் உனக்கு ஏதாவது கொடுமை இழைத்து விடுவேனோ என்று நீ அஞ்சலாம். அந்த அச்சத்தைத்தானே நீ சொல்ல வந்தாய்?'' என்று கேட்டேன்.

''உங்களை மட்டும் ஏன் சொல்லிக் கொள்கிறீர்கள்? என் உடலும் கூட ரத்த — மாமிசத்தால் ஆனதுதானே? என்றைக்காவது ஒரு நாள் நானுமே தடுமாறிப் போகலாம் அல்லவா?'' என்று கேட்டாள் சரயு.

''நீ என்ன சொல்ல நினைக்கிறாய்?'' அவள் பேச்சை விளங்கிக் கொள்ள முடியாமல் கேட்டேன்.

''நான் என்ன சொல்ல இருக்கிறது? நீங்கள் சொல்வதை நான் கேட்கிறேன்!'' தன் பொறுப்பைத் தலைப் பொறுப்பாகத் தட்டிக் கழித்து என் மீது சுமத்தினாள்.





நான் . அவள் சொன்னதை அப்படியே திருப்பிப் படித்தேன். ''நீ சொல்வதைக் கேட்பதாக நான் உனக்கு உறுதி மொழி அளிக்கிறேன்!'' என்றேன்.

அதற்குச் சரயு ஒன்றுமே பதில் கூறவில்லை.

''என்னைக் கல்யாணம் செய்து கொள்ள உனக்குத் தடை ஏதும் இல்லையே?'' என்று அவள் மௌனத்தைக் கலைத்துக் கேட்டேன்.

சரயு அதற்கும் மௌனம் சாதித்தாள். ஆனால் இந்தத் தடவை இன்னொரு காரியத்தையும் செய்தாள். தலையைக் குனிந்து கொண்டு நகத்தைக் கடித்தாள். என்னை மணந்து கொள்வதில் சரயுவுக்குத் தடையில்லை என்பதை அதன் வாயிலாகப் புரிந்து கொண்டேன். மறுநாளே நாங்கள் காளியம்மன் கோவிலுக்குச் சென்றோம்.

நான் இரு கைகளையும் குவித்து அன்னை காளியிடம் விண்ணப்பித்துக் கொண்டேன்:

''அம்மா! உன்னைச் சாட்சியாக்கி நான் இந்தத் திருமணம் செய்து கொள்ளுகிறேன். நான் ஏழை. எனக்கு வீடு வாசல் கிடையாது. கையிலும் கால் காசு கிடையாது. இந்த உலகத்தில் சரயுவுக்கும் உற்றார் உறவினர் என்று யாரும் கிடையாது. கஷ்டத்தில் கைகொடுப்பதற்காக 'நான் இவளைக் கரம் பிடிக்கிறேன். நீ எங்கள் மீது கருணை பொழிய வேண்டும், அம்மா!'' என்று வேண்டினேன்.

அன்றைக்கே காளியம்மனின் கோவிலில், அன்னையின் சன்னிதியில் எங்கள் இருவருக்கும் திருமணம் நடந்தது. நான் என் கையால் சரயுவின் நெற்றியில் சிந்தூரத் திலகம் இட்டேன். இப்படியாக மூன்றாம் பேர் அறியாமல் நாங்கள் இருவரும் மணந்து கொண்டோம்.''

இத்தனை கூறிய பின் நிசிகாந்தன் சிறிது நிறுத்தினான். ஒருவேளை களைத்துப் போய் விட்டானோ, என்னவோ? ''அப்புறம்?'' ஆவலை அடக்கமாட்டாமல் நான்தான் அவனை ஊக்கினேன்.

''இத்தனை விஷயங்களையும் உங்களுக்கு நான் சொல்ல விரும்பவில்லை, சார்! ஆனால் என்னைக் குடிகாரன் என்றும் கொடிய மிருகம் என்றும் சரயு கூறியதாக நீங்கள் கூறவே, என்னால் என்னை அடக்கிக் கொள்ள முடியவில்லை. அவளது அந்தக் கூற்றுக்குப் பதில் அளிக்கும் முறையில் இத்தனையும் சொல்லும்படியாகி விட்டது. நான் இப்போது சாராயம் குடிக்கிறேன் என்கிறது பொய் இல்லை. அது குடிக்கக்கூடிய ஒரு பொருள்தான். அரசாங்கக் கடைகளிலிருந்து சாராயம் வாங்குகிறேன். குடிக்கிறேன். ஒளிவு மறைவு இல்லை. இதிலே ஒரு வேடிக்கை என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? சாராயம் குடித்துப் போதை தலைக்கேறினால், கண்டபடி உளற ஆரம்பித்து விடுகிறேன். அப்படி உளறத் தொடங்கி விட்டால், சர்க்காரிலேயே வேலை பார்க்கும் போலீஸ்காரர்கள் என்னைப் பிடித்துக் கொண்டு போகிறார்கள். சார், இது ஆச்சரியமாயில்லை? இது போன்ற ஆச்சரியத்தை வேறு எந்த உலகிலும் பார்க்க முடியாது. அரசாங்கம் விற்கும் சாராயத்தை வாங்கிக் குடிக்கிறேன். அதற்கு அரசாங்கமே தண்டனை விதிக்கிறது. இது எந்த ஊர் நியாயம், சார்? பேசவே மாட்டேன் என்கிறீர்களே! நீங்களும் ஏதாவது சொல்லுங்கள், சார்!'' என்றான் நிசிகாந்தன்.

''நீ சொல்கிறது நியாயம்தான். ஆனால் நீ உன் மனைவியைக் கொண்டு மக்களை மயக்கிப் பணம் சம்பாதிக்கிறாயே; இதை என்ன நியாயம் என்று நான் சொல்வது?'' என்று கேட்டேன் நான்.

இந்த விஷயமும் சரயுதானே சார் உங்களிடம் சொன்னாள்? இதிலிருந்தே நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள், அவள் எத்தனை மட்ட ரகமான பெண்பிள்ளை என்பதை! ஒரு தடவை ஒரு சேட் எனக்கு அறிமுகமானார். ஒருநாள் அவர் என் வீட்டுக்கும் வந்தார். நல்ல பணக்கார சேட். அவரிடம்தான் வகை வகையாக எத்தனைவாகனங்கள் என்கிறீர்கள்! சரி, விடுங்கள் சார் அதை! பிறருக்குத் தெரியாத என் துயரக் கதைகளையெல்லாம் உங்களிடம் கூறி உங்களைக் கஷ்டப்படுத்துகிறேன். சேட்டுக்கும் எனக்கும் ஏற்பட்ட அறிமுகத்தை எண்ணி நான் சொர்க்கமே கிடைத்து விட்டதாக மகிழ்ந்தேன். ஆனால் சார்! வயிற்றுப் பாட்டில் மெய்மறந்து நான் என் வாழ்க்கையையே இழந்து விட்டேன்!''

இதைச் சொன்ன நிசிகாந்தன் 'தம்' மென்று மீண்டும் நாற்காலியில் உட்கார்ந்து விட்டான். ''சார்! தயவு செய்து உங்கள் காளுவிடம் இன்னொரு கோப்பை தேநீர் கொண்டு வருமாறு சொல்லுங்கள்!'' என்று கூறிச் சட்டைப் பையில் கைவிட்டு ஒரு சிகரெட்டை எடுத்தான்.

(தொடரும்)

வேறு எந்த ஆரோக்கிய பானமும் பரிபூரணமானது அல்ல.





துடிப்புடனும்
சகதியுடனும் விளங்க
உங்களுக்குத் தேவையான
இந்த 23 அத்தியாவசிய ஊட்டச்
சத்துக்கள் நிறைந்த பரிபூரண பானம்

காம்ப்ளான்® ஒன்றுதான்.

புரதம்
கார்போஹைடிரேட்
கால்ஷியம்
லிபிடுகள்
பாஸ்பரஸ்
சோடியம்
குளோரைடு
(ஏ வடிவில்)
பொட்டாஷியம்
இரும்புச்சத்து
அயோடின்
வைட்டமின் 'ஏ'
வைட்டமின் பி1
ரிபோஃப்ளேவின்



நிகோடினமைடு
கோலின்
கால்ஷியம் பெண்டோதெனேட்
பைரிடாக்ஸின் (பி6)
வைட்டமின் பி12
ஃபாலிக் அமிலம்
வைட்டமின் டி
வைட்டமின் ஈ
வைட்டமின் சி
வைட்டமின் கே

அதோடு, இதர சிறுசிறு பொருட்கள், உடல் சரியா ஆரோக்கியமாக இயங்க உதவும்.

காம்ப்ளானில் மட்டுமே விஞ்ஞான ரீதியில்
திட்டமிட்டபடி புரதசத்துக்கள், வைட்டமின்கள்,
தாதுப்பொருட்கள், கார்போஹைடிரேட்கள்
மற்றும் அத்தியாவசியமான
ஊட்டச்சத்துக்கள் அடங்கியுள்ளன.

'பரிபூரண' போஷாக்கிற்கு
டாக்டர்களால் பெரிதும் சிபாரிசு செய்யப்படுவது

காம்ப்ளான்®

ஒரே பரிபூரண ஆரோக்கிய பானம்.
உலகெங்கும் உபயோகிக்கப் படுவது.

க்ளாக்ஸோ
ஆராய்ச்சியில்
உருவானது.

சாப்பிட நேரமில்லையா?

உணவுக்கு பதிலாக உடனடியாக உதவுவது காம்ப்ளான் ஒன்றே; உழைக்கும் அதிகாரிகள், பிரயாணிகள், அலுவலகம் செல்வோர் ஆகியோருக்கு ஏற்றது காம்ப்ளான்.

சாதாரண ஆரோக்கிய நிலையில்

ஆரோக்கியமாகவும் துடிப்புடனிருக்கவும் நீங்கள் உணராத போஷாக்குப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யவும் தினசரி காம்ப்ளான் பருகுங்கள்.

சரியாக சாப்பிடுவதில்லையா?

காம்ப்ளான் தரும் 23 அத்தியாவசிய ஊட்டச் சத்துக்களின் 'பரிபூரண' போஷாக்கை வேறு எந்த ஆரோக்கிய பானமும் தருவதில்லை. எனவே அவரது போஷாக்கில் எந்த பற்றாக்குறை இருந்தாலும், அதை ஈடுசெய்து, அவரை ஆரோக்கியமுடன் விளங்கச் செய்கிறது காம்ப்ளான்...

நோயால் சக்தி இழந்துவிட்டீர்களா!

'பரிபூரண' போஷாக்கிற்காக, டாக்டர்களால் பெரும்பாலும் சிபாரிசு செய்யப்படும் காம்ப்ளான் பருகி விரைவில் இழந்த சக்தியைப் பெறுவீர்.



CAGC-25-173 TM



உரிமைக் குரல்கள்

ருக்மிணி பார்த்தசாரதி

மாலை வீடு திரும்பிய விமலா முதல் காரியமாகக் கையிலிருந்த கவரை மாமியார் காமாட்சியிடம் கொடுத்தாள். ''அம்மா! இதோ என் சம்பளம்!'' என்றாள்.

''கவரை அங்கே வைச்சுட்டு, புடவை மாத்திண்டு வா, விமலா. டிபன் காப்பி ஆறிப் போறது!'' என்றாள் காமாட்சி. விமலா அவ்வாறே கவரை வைத்து விட்டு முகம் கழுவச் சென்றபோது, காமாட்சி சட்டென்று கவரைப் பிரித்து உள்ளேயிருந்த பணத்தை எண்ணிப் பார்த்துவிட்டுப் பழைய மாதிரியே கவருக்குள் வைத்தாள்.

உடை மாற்றிக் கொண்டிருந்த விமலா, சென்ற மாத நிகழ்ச்சியை நினைத்து வாடிப் போனாள். சென்ற மாதம் சம்பளம் கிடைத்ததும் அவள் கடைக்குச் சென்று இரண்டு ரவிக்கைத் துண்டுகள் வாங்கிக் கொண்டு மீதிப் பணத்தை மாமியாரிடம் கொடுத்தாள். திருமணமாகு முன் பிறந்த வீட்டிலிருந்து ஆபீஸ் சென்று கொண்டிருந்தவரை இப்படித் தான் அவள் சம்பளம் வந்ததும், தனக்குத் தேவையான சில துணிமணிகள் வாங்கிக் கொண்டு கைச் செலவுக்காகக் கொஞ்சம் தன்னிடம் வைத்துக் கொண்டு மிச்சப் பணத்தை அம்மாவிடம் கொடுப்பது வழக்கம். இங்கோ, கைச் செலவுக்காகக் காமாட்சியே கொடுக்கட்டும் என்று நினைத்து, ரவிக்கைத் துண்டுகள் மட்டும் வாங்கிக் கொண்டு, மிஞ்சியதை அவளிடம் கொடுத்தாள்.

அவ்வளவுதான்; வீட்டில் பிரளயமே கிளம்பி விட்டது. காமாட்சி அவளிடம் முகம் கொடுத்துப் பேசவில்லை. பின்னை வந்ததும், ''எத்தனை திமிர் இருந்தா என்னைக் கேட்காமல் ரவிக்கை வாங்கிப்பாள்? ஆபீஸுக்குப் போய்ச் சம்பாதிக்கிற கர்வம்டா அத்தனையும்! கிழங்காட்டமா நான் ஒருத்தி உயிரோட இருக்கேன், என்னை ஒரு வார்த்தை கேட்கணும்னு தோணித்தா துரைச்சாணிக்கு?'' என்று விதம் விதமாக வார்த்தைகள் வெடித்தன. விமலாவின் கணவனோ, தன் பார்வையாலேயே வெறுப்பை உமிழ்ந்தான்.

விமலாவுக்குத் திருமணமாகி ஆறு மாதங்கள்தான் கழிந்திருந்தன. கணவனுக்குப் புதுதில்லியில் வேலை. மணமாகிப் புதுதில்லி வந்தபோது, சென்னையில் வேலையை ராஜிநாமாச் செய்து விட்டு, தில்லியில் வேலைக்காக மனுப் போட்டாள். இரண்டு மாதங்கள் முன்புதான் வேலை கிடைத்தது.

இன்று அவள் காமாட்சியிடம் கொண்டு வந்து கொடுத்தது தன் இரண்டாவது மாதச் சம்பளம். முழுச் சம்பளம் — ஒரு பைஸா குறையாமல்...

உடை மாற்றிக் கொண்டு வந்தவளுக்குக் காமாட்சி டிபன் காப்பி கொடுத்தாள். இனி, இரவுச் சமையலைக் கவனிப்பது விமலாவின்பொறுப்பு.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை. காலை பதினொரு மணி இருக்கும். குளிருக்கு இதமாகக் காமாட்சியும் விமலாவும் வெயிலில் கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்திருந்தார்கள்.

ஆஷாராணி வந்தாள். வாசலில் செருப்பைக் கழற்றிவிட்டுப் பின்புறமாகச் சென்று, தயாராக வைத்திருந்த துணிகளுக்கு இஸ்திரி போடலானாள்.

ஆஷாராணியைப் பார்த்தால், சலவைத் தொழிலாளியின் மனைவியைப் போன்றோ, இருபத்தைந்து வயதினள் போலோ இருக்காது. பதினெட்டு வயதுப் பெண்ணின் கொடியுடல். பூக்கள் அச்சிட்ட ஷல்வார் கம்மீஸ் மெல்லிய துப்பட்டா... அழகான முழுக்கை ஸ்வெட்டர்.

வாரத்துக்கு ஒரு முறை ஞாயிறன்று ஆஷாராணி வருவது வழக்கம். வாரம் முழுதும் தோய்க்கப்பட்ட புடவை, பாண்ட், ஷர்ட் இவைகளுக்கு இஸ்திரி போட்டுவிட்டு வேலை முடித்ததும் கையில் பணத்தை வாங்கிக் கொண்டு போய்விடுவாள். கூடை நிறையத் துணிகள் இருந்தாலும் இயந்திர கதியில் இயங்கும் அவள் கரங்கள் அநாயாசமாக இஸ்திரி போடும் லாகவமே தனி அழகுதான்!

அன்று அவள் வேலை முடிந்து கையில் பணத்தை வாங்கிக் கொண்டபோது வாசலில் பழக்காரன் கூவிக் கொண்டே சென்றான். அவனை நிறுத்தினாள் ஆஷாராணி. சின்னஞ் சிறு பச்சை மணிகளாய் மின்னிய திராட்சையைக் காண்பித்து, ''என்ன விலை?'' என்றாள்.

''பத்து ரூபாய் கிலோ!''

''ஒரு 'பாவா' கொடு!''

பழக்காரன் கால் கிலோ பழத்தை எடை போட்டுக் கொடுத்தான். ஆஷாராணி பின் குழாயில் பழங்களைக் கழுவிவிட்டு, வெயிலில் சௌகரியமாக உட்கார்ந்து மணி மணியாகப் புசிக்கலானாள்.

அதைப் பார்த்துக் கொண்டிருந்த விமலாவுக்கு ஒரு கணம் தானும் திராட்சை சாப்பிட வேண்டும் என்று தோன்றிற்று. ஆனால் மாமியாரை எப்படிக் கேட்பது? மிகவும் கூச்சமாயிருந்தது.

காமாட்சி ஆஷாராணியைப் பார்த்து, ''ஏண்டி பெண்ணே! இரண்டரை ரூபாய்க்கா திராட்சை வாங்கினாய்?'' என்றாள்.

''ஆமாம் மாதாஜி!''

''எப்போதுமே பணம் வைத்திருப்பாயா கையில்?''

''ஏழெட்டு வீடுகளில் இஸ்திரி போடு கிறேனே! சம்பாதிப்பவளின் கை காலி யாகவா இருக்கும்?''

விமலாவுக்கு நெஞ்சில் ஏதோ தைத்தது.

''நீ சம்பாதிக்கிறது இப்படிச் செலவழிக் கத்தானா? கணவன், மாமியார், நாத்திகள் கணக்குக் கேட்டால்?'' என்றாள் காமாட்சி.



ஆஷாராணியின் முகம் கணப்பொழுது சிவந்தது. ''ஆ! எப்படிக் கேட்பார்கள்? நான் சம்பா திக்கிறேன். என் விருப்பப்படி பழமாகவும் பாலாகவும் சாப்பிடு கிறேன். இல்லை, சினிமாப் பார்க்கி றேன். அவர்களுக்குக் கேட்க என்ன உரிமை? நான் சம்பாதிக்கா விட்டால் என்ன செய் வார்கள்? அபராதம் கட்டவா சொல்வார்கள்? இது நான் உழைத்துச் சம்பாதித்த பணம். என் விருப்பப்படி நான் செலவழிப்பதற்குக் கணக்கா கேட்பார்கள், கணக்கு?''

விமலா தன் மாமியாரின் முகத்தைப் பார்த்தாள். அதிலிருந்த சிடுசிடுப்பைப் பார்த்து விட்டுத் தலையைத் தாழ்த்திக் கொண்டாள். தன் கைவிரல்கள் மீது பார்வை பதிந்தது. ஓயாமல் டைப் அடிக்கும் விரல்கள் இப்போது ஏன் வலிக்கிற மாதிரி தோன்றுகிறது?

பழங்களை உண்டு முடித்து விட்டு ஆஷா ராணி, ''மாதாஜி! போய் வருகிறேன்!'' என்று விடைபெற்றுக் கொண்டாள்.

''இரண்டரை ரூபாய்க்குத் திராட்சை வாங்கித் தின்னுவதற்குப் பதில் பச்சைக் காய் கறி வாங்கியிருந்தால் அவள் குடும்பத்தில் நாலு பேர் வயிறு நிறையச் சாப்பிட்டிருக் கலாம்!'' என்றாள் காமாட்சி. விமலா பதில் சொல்லவில்லை.

நேரம் நழுவிற்று. விமலா ஏதேதோ எண்ணியபடி வெயிலின் இதத்தில் உட் கார்ந்திருந்தாள். காமாட்சி நடையிலேயே படுத்துக் கண்களை மூடிக்கொண்டாள். அப்படி உடலைச் சுருட்டிக் கொண்டு அந்த முதியவள் படுத்திருந்த நிலையில், அவள் முதுமை, நரை மயிர், பாழ் நெற்றி எல் லாமே பரிதாபமாக இருந்தது விமலாவுக்கு, ஒரு கணம்.

நேரம் நழுவிக் கொண்டே இருந்தது. சட்டென்று விமலாவின் கண்கள் நிட்சண யம் அடைந்தன. 'அதோ வருவது யார்? அவளுடைய ஆபீஸில் அவளோடு வேலை செய்யும் பெண் சந்தோஷ் அல்லவா?

சந்தோஷ் அவர்களை நெருங்கி வருவதற்கும் காமாட்சி தூக்கம் கலைந்து எழுந்து உட் காருவதற்கும் சரியாக இருந்தது.

விமலா தன் மாமியாரை சந்தோஷுக்கு அறிமுகம் செய்து வைத்தாள். சந்தோஷ் முறுவலோடு கரம் குவித்து, ''நமஸ்தே ஜி!'' என்றாள்.

''பைட்டோ!'' என்றாள் காமாட்சி, ஹிந்தியில்.

சந்தோஷ் விமலாவுக்கருகே அமர்ந்தாள். கையிலிருந்த பெரிய கவரைப் பிரித்தாள். உள்ளே இரண்டு நைலான் புடவைகள்.

''எப்படி இருக்கிறது?'' என்றாள் சந் தோஷ்.



வெளிர் நீலத்திலும் வெளிர் பச்சையிலும் சின்னஞ் சிறு பூக்கள் அச்சிடப்பட்ட அழகான புடவைகள். அந்த அழகில் விமலாவின் மனம் பறி போயிற்று.

''மிக மிக அழகு!'' என்றாள் விமலா.

''நீ ஒன்றை வாங்கிக் கொள்கிறாயா?'' என்றாள் சந்தோஷ்.

''நானா?''

''ஆமாம். நேற்றுச் சம்பளம் வந்ததே, அதில் வாங்கிக் கொள்ளேன்! நூறு ரூபாய் தான்.''

''என்னிடம் புடவைகள் நிறைய இருக்கின்றன'' என்றாள் விமலா பரிதாபமாக.

''இருந்தால்? இதுவும் இருந்து விட்டுப் போகிறது. என்ன? உனக்காக ஒன்றை எடுத்து வைக்கட்டுமா?''

விமலா மாமியாரின் முகத்தைப் பார்த்தாள். அதில் மாறாத சிடுசிடுப்பு.

''வேண்டாம், சந்தோஷ்!''

''சரி, யோசித்து நாளைக்குச் சொல்!'' சந்தோஷ் புடவைகளைக் கவருக்குள் வைத்தாள். பின் எழுந்து நின்றாள். ''அது போகட்டும், நான் உடுத்தி யிருக்கும் புடவை எப்படி இருக்கிறது?''

கறுப்பு வில்க்கில் பல வண்ணப் புஷ்பங்கள் அச்சிடப்பட்ட புடவை. சந்தோஷின் சிவந்த நிறத்துக்கு எடுப்பாக இருந்தது.

''பஸ்ட் கிளாஸ்!'' என்றாள் விமலா.

''விலையும் பஸ்ட் கிளாஸ்தான். நானூறு ரூபாய்!''

''என்ன?''

''நேற்றுத்தான் சம்பளம் வந்ததே! இன்று காலைதான் வாங்கினேன். என் கணவரின் ஸெலக்ஷன்!''

விமலா பதில் சொல்லவில்லை. காமாட்சி, ''புதிதாகக் கல்யாணமானவளா நீ?'' என்றாள்.

சந்தோஷ் சிரித்தாள். ''நானா! கல்யாண மாகி ஐந்து வருஷங்களாகிறது. நாலு வயதில் ஒரு பெண் குழந்தை இருக்கிறாள்!''

''நீ ஆபீஸுக்குப் போகும்போது குழந்தை?''

''என் மாமியாரிடம் விட்டு விடுவேன்!''

''இப்படி நானூறு ரூபாய்க்கு நீ புடவை வாங்கினால் உன் மாமியார்....'' என்று ஆரம்பித்த காமாட்சி மேலே தொடராமல் நிறுத்தினாள்.

''என் மாமியார் என்ன சொல்ல முடியும்? நாளெல்லாம் விரல் ஒடிய டைப் செய்கிறேன். வீட்டுக்கு வந்ததும் இரவுச் சமையல் என் பொறுப்புத்தான். காலையில் ஆபீஸ் போகு முன் குழந்தையைக் குளிப்பாட்டித் தயார் செய்து விட்டுத்தான் போகிறேன். என் பங்கு வேலைகளை நான் செய்யவில்லையா? மாமியாருக்கு என்னைக் கேள்வி கேட்க உரிமை கிடையாது. நான் என்ன கிழவியா? நல்ல துணியாக உடுத்தி நாலு பெண்கள் மத்தியில் கௌரவமாக இருக்க வேண்டும் என்று ஆசைப்படமாட்டேனா? அந்த ஆசையில் தவறு என்ன?''

விமலா மறுபடியும் தன் மாமியாரின் முகத்தைப் பார்த்தாள். ''இந்த மாதிரி உரிமைக் குரல்கள்'' காமாட்சியின் செவிகளுக்கு எத்தனை அந்நியமாகப் படும் என்று உணர முடிந்தது. பாவம், காமாட்சி! பெண்களை அடிமைகளாக நினைக்கும் சமூகத்தில் பிறந்து விட்டுத் தன் இளமையை அந்த மனோபாவத்தோடு கழித்து விட்டு, முதுமையில் மகனின் நிழலில் ஒதுங்கி யிருக்கிறாள். இள வயதில் எப்படி யெல்லாம் தன் ஆசைகளை அடக்கி, நாவைக் கட்டி வாழ்ந்தாளோ! அதன் பலன், மாட்டுப் பெண் தன்னைக் கேட்காமல் இரண்டு ரவிக்கைத் துண்டுகள் வாங்கி விட்டால், அதையே அவமானமாக நினைக்கிறாள். இன்றோ, ஆஷாராணி, சந்தோஷ் இருவரிடமும் வாயைக் கொடுத்து விட்டு, அவர்கள் உரிமைக் குரல்களை எழுப்புவதைக் கேட்க வேண்டியதாகி விட்டது.

மறுநாள் காலை கண் விழித்த விமலா, 'மாமியார் என் கைச் செலவுக்குப் பணம் தர மறுத்து விட்டால் என்ன செய்வது? எப்படிக் கேட்பது?' என்று நினைத்தாள். ஆனால் உடனேயே அந்த நினைப்பை ஒதுக்கினாள். மத்தியானம் காண்டீன் செலவுக்கும், போக வர பஸ் செலவுக்குமாகக் காமாட்சி போன மாதம் ஐம்பது ரூபாய் மொத்தமாகத் தர வில்லையா? இந்த மாதமும் அவள் மறக்க மாட்டாள்.

விமலா ஆபீஸ் செல்லத் தயாரானபோது காமாட்சி அவளிடம் பணத்தை நீட்டினாள். ஐம்பது ரூபாய்... கூட, இதென்ன! தனியே ஒரு நூறு ரூபாய் நோட்டு?...

''எனக்காகத் தெரியவில்லையே தவிர, நியாயத்தைக் கேட்கச்சே, இது நியாயம்னு புரிஞ்சுக்க முடியறது விமலா! நானும் உன் வயசைத் தாண்டித்தானே இந்த வயசை அடைஞ்சிருக்கேன்! அந்த நைலான் புடவை உனக்கு அழகாக இருக்கும்!'' என்றாள். பின், தன் ''மாமியார் உரிமையை'' நிலைநாட்டிக் கொள்ளும் பழைய குணத்தைத் தவிர்க்க மாட்டாமல், ''அந்த வெளிர் நீலம் வேண்டாம், அழுது வழியறது. வெளிர் பச்சைதான் உனக்கு எடுப்பாக இருக்கும்!'' என்றாள்.

நமக்குள் நம்மோடு நாம்

நடந்திடுவோம் ஒதுக்கிடம் நாடி
நகரத்துச் சந்தடியை விட்டகன்று
விடுபடுவோம் கடற்கரை தேடி...
வெண் மணற் பரப்பு இழையுது ஓகோ;
இயற்கையோடு இழையுது மேனிமீது
எழில் வண்ண மென்மை உடுப்பு.



MAFATLAL GROUP

எதுவோ அவர்கள் ஆடைகள்?
இயற்கையாக மபத்லால்.

மபத்லால் துணிவகைகள்:
சூட்டிங் • ஷர்ட்டிங் • சேலைகள்
• டிரெஸ் மெட்டீரியல்ஸ் • ஷர்ட்

everest/465/MS-tm



மனசு

ஆபீஸிலிருந்து வந்ததும் வராததுமாக ராகவன் கேட்டான்: ''அப்பாவிடமிருந்து ஏதாவது கடிதாக வந்ததா?''

''இல்லையே''. ஏற்கெனவே தீர்மானித்து வைத்திருந்தபடியேதான் பதில் கூறினுள் என்ருலும் பொய் சொல்கிரேம் என்ற குறு குறுப்பு வனஜாவின் மனத்தை நெருடத் தான் செய்தது.

''ஏன் எழுதாமல் இருக்கிருர்? முகூர்த்தத் தேதி நெருங்கி விட்டதே'' என்று கேட்டுக் கொண்டே சுரம் சொட்டும் முகத்தைத் துண்டால் துடைத்தபடி ஈஸிசேரில் உட் கார்ந்தான் ராகவன்.

அவன் முகத்தைப் பார்க்கத் தைரியமின்றிக் காப்பி கலக்கும் சாக்கில் சமையல் அறைக் குள் நுழைந்து கொண்டாள் வனஜா.

''ஹூம். சுகந்தா கல்யாணம் முடிஞ்சுட்டா எங்களுக்குப் பொறுப்பு விட்ட மாதிரிதான்'' என்று அவன் தனக்குள் பேசிக் கொண்டதைச் செவிமடுத்த வனஜா உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

ராகவனின் தந்தை ரிடையராகும் வரை சாதாரணக் கிளார்க்காகத்தான் இருந்தார். குடும்பம் பெரியது. ராகவனைச் சேர்த்து மூன்று பிள்ளைகள், நான்கு பெண்கள். தம் சம்பாத்தியத்தைக் கொண்டு முதல் பெண் ணுக்கு மட்டும்தான் அவரால் திருமணம் செய்ய முடிந்தது. நல்லவேளையாகப் பிள்ளைகள் மூவருமே கைநிறையச் சம்பா திப்பவர்களாக இருந்து விட்டதால் அடுத்த இரு தங்கைகளுக்கும் தங்களுக்குள்ளாகவே ஆளுக்கு இவ்வளவு என்று போட்டுக் கல் யாணம் செய்து விட்டார்கள்.

கடைசித் தங்கை சுகந்தாவின் முறை வந்த போது, ராகவனின் சகோதரர்களின் குடும்பங் களும் பெருகிவிட்டன. அவரவர்களுக்குப் பிள்ளை கல்லூரி போக வேண்டும், பெண் திருமணத்துக்குத் தயாராகிருள் என்று செலவு அயிட்டங்கள் அதிகமாகவே சுகந்தா கல்யாணச் செலவுக்குப் பிடி கொடுக்காமல் பேசி விட்டனர்.

''ராகவனுக்கென்ன, குழந்தையா குட் டியா? புருஷன் பெண்டாட்டி இரண்டே பேர்தானே? என்ன செலவு இருக்கப் போகி றது? அவன்தான் நிறையச் செய்யட்டுமே'' என்பது மற்ற இருவர்களின் வாதம். அப்பா அதை அப்படியே ராகவனிடம் கூறி அழுதார். இயற்கையிலேயே இளகிய மனம் கொண்ட ராகவன் பெரும் பகுதிச் செலவைத் தானே ஏற்றுக் கொண்டான். அவன் சகோதரர்கள் ஏதோ பேருக்குச் சிறிய தொகைதான் கொடுத்தார்கள்.

வனஜாவுக்கு இதைப் பார்க்க ஆத்திரம் வந்தது. குழந்தை பிறக்கவில்லை என்பதற் காக இப்படியா பணத்தை வாரி இறைப்பது? என்று கணவனிடமும் சண்டை பிடித்தாள். ராகவன் அவள் பேச்சைக் காதில் போட்டுக் கொள்ளவே இல்லை. அப்பா பணம் கேட்கும் போதெல்லாம் தவருமல் அனுப்பிக் கொண்டே யிருந்தான்.

உண்மையில் அன்றைக்கு ராகவனுக்கு அவன் அப்பா கடிதம் எழுதி யிருந்தார்:

''கல்யாணச் சாமான்கள் எல்லாம் தயாராகி விட்டன. நெக்லெஸ் மூன்று பவுனுக்குப் போதாது. நான்கு பவுனில் வேண்டும் என்று பின்ளை வீட்டில் சொல்லி அனுப்பிவிட்டார்கள். ஆகவே திருமாங்கல்யம் செய்ய வைத்திருந்த ஒரு பவுனையும் சேர்த்து நெக்லெஸ் செய்யச் சொல்லி விட்டேன். ஆகவே உடனடியாக ஐந்நூறு ரூபாய் அனுப்பினுல் திருமாங்கல்யம் செய்து விடலாம்...''

இதைப் பார்த்ததும் பற்றிக் கொண்டு வந்தது வனஜாவுக்கு. 'இளிச்சவாயன் அகப்பட்டான் என்று நன்ருகக் கறக்கிருரே இந்த மாமனுர்!' என்று ஆத்திரப்பட்டாள். 'கடிதத்தைப் பார்த்தால் ராகவன் நிச்சயமாகப் பணம் அனுப்பி விடுவான். வனஜா கரடியாகக் கத்தினுலும் எந்தவிதப் பயனும் இருக்கப் போவதில்லை. கடிதம் வந்ததே தெரியாமல் மறைத்து விடலாம். மாமனுர் பணத்துக்கு எப்படியாவது தவிக்கட்டும்' என்று தீர்மானித்து ராகவனிடம் துணிந்து பொய் சொன்னுள்.

இரவு சாப்பாடானதும் சமையலறையைக் கழுவிவிட்டுச் சோர்வுடன் படுத்த வனஜா ''ஸ்....அம்மா...'' என்று முகத்தைச் சுளித்தாள். பேப்பர் படித்துக் கொண்டிருந்த ராகவன், ''என்ன?'' என்று திரும்பினுன்.

''ஒண்ணுமில்லே. மாங்கல்யத்தைக் கயிற்றிலே கோக்கிற குழாய் விரிந்திருக்கிறது. கழுத்திலே படும்போதெல்லாம் உரசி உரசிப் புண்ணுகிறது'' என்ருள்.

''கழற்றித் தலைமாட்டில் வைத்துக் கொண்டு படு. காலையில் போட்டுக்கொள்ளலாம்'' என்ருன் அலட்சியமாக.

அவசரமாக மறுத்தாள் வனஜா. ''இது என்ன சங்கிலியா நெக்லெஸா? நம் விருப்பத்துக்குக் கழற்றவும் போடவும்? அதெல்லாம் கூடாது'' என்ருள்.

''பெரிய சாஸ்திரத்தைக் கண்டு விட்டாள். இல்லாவிட்டால் கழுத்து முழுதும் புண்ணுக்கிக்கிறதுதான் புத்திசாலித்தனமா? கழற்றப் போகிருயா இல்லையா?''

வனஜாவுக்குச் சங்கடமாகப் போய்விட்டது. ராகவன் கோபக்காரன். மேலும் மறுத்தால் தானே கழற்றினுலும் கழற்றி விடுவான். ஏன் சொன்னேமென்று தன்னைத் தானே நொந்து கொண்டே மனமில்லாமல் கழற்றித் தலையணைக்கடியில் வைத்தாள்.



சகுனம்

வி. பானுமதி

மறுநாள் எழுந்திருக்கவே நேரமாகி விட்டது. அவசரம் அவசரமாகச் சமைத்துப் போட்டு ராகவனை ஆபீஸுக்கு அனுப்பினுள். வாசற் கதவைத் தாளிட்டு விட்டு முகத்தில் அரும்பிய வியர்வையைத் துடைக்கும்போது தான் நினைவுக்கு வந்தது, இன்னும் நெற்றிக்கு இட்டுக் கொள்ளவில்லை என்று.

'என்ன இன்றைக்கு அதிசயம்! குளித்து விட்டு வந்ததும் கை நேராகக் குங்குமச் சிமிழைத்தானே தேடும்?' என்று தனக்குத் தானே வியந்தபடி சிமிழைத் திறந்தாள். சுத்தமாகக் காலியாக இருந்தது. நாக்கைக் கடித்துக் கொண்டாள் வனஜா. முதல் நாள் மாலைதானே எதிர் வீட்டுச் சிறுவன் வந்து சிமிழைத் தலைகீழாகக் கவிழ்த்துக் குங்குமம் அத்தனையையும் சிந்தி விட்டான்? பெருக்கித் தள்ளியாகி விட்டது.

எப்போதோ அர்ச்சனை செய்து வந்த குங்குமப் பொட்டலத்தை எங்கேயோ தேடிப் பிடித்து எடுத்துக் கண்ணுடி முன் நின்று நெற்றியில் பதித்துக் கொண்டு நிமிர்ந்தாள். வெறும் கழுத்து கண்ணில் பட்டது. 'இதற்குத்தான் கழற்றக் கூடாது என்பது. போட்டுக் கொள்ளவே மறந்து போய் விட்டதே! அவராவது நினைவூட்டக் கூடாது?'

பரபரப்புடன் படுக்கை அறைக்கு ஓடி மெத்தைத் தலையணைகளை உதறினுள். எங்கே போய் விட்டது? மனத்தில் கவலை படர அறை முழுவதும் தேடினுள். ஊஹூம்... வீடு முழுதும் புரட்டிப் புரட்டிப் பார்த்தாள். கிடைக்கவேயில்லை. கடவுளே! மற்ற நகை கெட்டுப் போனுலும் பரவாயில்லை. 'அது' கெட்டுப் போகலாமா?

''என்னம்மா தேடறீங்க?'' என்று வேலைக்காரி கேட்டாள்.

ராகவனுக்குச் சாதம் பரிமாறும்போது இவள் முன் அறையைப் பெருக்கினுளே, எடுத்திருப்பாளோ?

''ஏதாச்சும் காணுமா அம்மா?''

'ஆமாம்' என்று சொல்ல வாயெடுத்தவள் சட்டென்று அடக்கிக் கொண்டாள். எதைக் காணும் என்று சொல்வது? சொன்னால் சிரிக்க மாட்டாளா? அதோடு திருமாங்கல்யத்தைத் திருடும் அளவுக்கு இவளுக்குத் துணிச்சல் போதாது.

''ஒண்ணும் தேடலே. உன் வேலையைப் பார்'' என்று கூறிவிட்டுப் பூஜை அறைக்குச் சென்று முதல் வேலையாக ஒரு நூலில் மஞ்சள் கட்டி அதில் மஞ்சள் கிழங்கை முடிந்து கழுத்தில் அணிந்து கொண்டாள். கண்கள் கலகலவெனப் பொழிந்தன. அம்பிகே! இது என்ன சோதனை? ராகவன் வேறு சாயங்காலம் வந்து கத்தப் போகிறான்: 'அப்படி என்ன உனக்கு ஓர் அலட்சியம்?' என்று.

நாள் முழுதும் பைத்தியம் பிடித்தது போல் இருந்தது. சாப்பிடவும் பிடிக்காமல் மனத்தில் ஏதோ ஒரு வேதனை குடைந்து கொண்டேயிருந்தது. கண் மூடிச் சௌந்தரிய லஹரி சுலோகங்களை முணுமுணுக்கத் தொடங்கினாள்.

''மாமி! மாமி!'' கதவைப் படபட வென்று தட்டும் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டு விழித்தாள் வனஜா. இருள் சூழ்ந்திருந்தது. 'அடடா... இருட்டி விட்டதே... இன்னுமா அவர் வரவில்லை? தவறாமல் ஐந்து மணிக்கெல்லாம் வந்து விடுவாரே?' காலை முதல் தோன்றிய அபசகுனங்கள் வேறு வனஜாவின் மனத்தில் விசுவரூபம் எடுத்தன. அழுகை முட்டிக் கொண்டு வந்தது. 'தாயே! பரமேச்வரி! எனக்கு மாங்கல்யப் பிச்சை கொடு தாயே!' என வேண்டிக் கொண்டாள்.

மீண்டும் கதவைத் தட்டும் ஒலி தொடரவே அவசரமாகக் கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்து கதவைத் திறந்தாள். பக்கத்து வீட்டுப் பத்மா.

''என்ன மாமி? சாயங்கால வேளையில் கதவைச் சாத்தி வைத்திருக்கிறீர்களே? இன்னும் விளக்கேற்றவில்லையா? முகம் கழுவி நெற்றிக்குக் கூட இட்டுக் கொள்ளாமல் இருக்கிறீர்களே! என்ன ஆச்சு உங்களுக்கு?''

வனஜா பதறிப் போனாள். 'கடவுளே! எனக்கு ஒன்றும் ஆகிவிடக் கூடாது!' அவசரமாக நெற்றியில் குங்குமத்தைப் பதித்துக் கொண்டு வந்தாள். வலியப் புன்னகையை வரவழைத்துக் கொண்டு, ''ஒண்ணுமில்லே, பத்மா! தலையை ரொம்ப வலிச்சது. பேசாமல் படுத்து விட்டேன். வேறே ஒண்ணுமில்லே. என்ன விஷயம்?'' என்றாள்.

''இல்லே, மாமி! உட்கார நேரமில்லே. இன்னிக்கு இரவு பஸ்ஸிலே காரைக்கால் போறேன். அங்கே உங்க மாமனார் வீடு எங்க வீட்டுக்கு அடுத்த வீடுதானே? நாத்தனார் கல்யாணம் வரதுன்னு சொன்னேனே? ஏதாவது சேதி இருந்தால் சொல்லுங்கோ. போய்ச் சொல்றேன். அதான் கேட்டுட்டுப் போகலாம்னு வந்தேன். நாழியாயிடுத்து. இன்னும் துணிமணி கூட எடுத்து வைக்கவில்லை'' என்று பறந்தாள் பத்மா.

''சேதி ஏதுவுமில்லே'' என்று கூறிய வனஜாவின் மனத்தில் மின்னலாக ஓர் எண்ணம் பளிச்சிட்டது. சுகந்தாவுக்கு மாங்கல்யம் செய்ய மாமனார் பணம் கேட்டு எழுதினாரே. அந்தக் கடிதத்தைக் கணவனிடம் காட்டாமல் மறைத்ததால்தான் இப்படி ஒரு மனக் கலக்கத்தைக் கொடுக்கிறாரோ கடவுள்?

''கொஞ்சம் இரு, பத்மா!'' என்ற வனஜா பீரோவைத் திறந்து ரூபாய் நோட்டு கற்றையை எடுத்து வந்தாள். ''இதிலே ஐந்நூறு ரூபாய் இருக்கு. மாமனார் கேட்டிருந்தார். பத்திரமாகக் கொண்டு போய்க் கொடுத்துடறியா?''

''ஆகட்டும் மாமி!'' பத்மா பணத்தைப் பெற்றுக் கொண்டு சென்றதும் தான் வனஜாவின் மனத்தில் சுமை இறங்கியது.

வாசலில் செருப்புச் சத்தம் கேட்டது. ஓடி வந்து பார்த்தாள். ராகவன்தான். அவன் காலடியில் விழுந்து 'ஓ'வெனக் கதறி அழ வேண்டும் போல் இருந்தது அவளுக்கு. உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு, ''ஏன் இத்தனை நாழி?'' என்று கேட்டாள். அவன் ஓர் ஆபத்தும் இல்லாமல் வந்து சேர்ந்தது நிம்மதியாக இருந்தாலும் தாலி கெட்டுப் போன விஷயத்தை எப்படி பிரஸ்தாபிப்பது என பயமும் அடிமனத்தில் எழத்தான் செய்தது.

''இதனாலேதான் தாமதம். ஆபீஸ் விட்டதும் இந்த விஷயத்திலே மெனக்கெட வேண்டியதாகி விட்டது.'' சிறு பொட்டலத்தை நீட்டினான் ராகவன்.

திகைப்புடன் வாங்கிப் பிரித்தாள் வனஜா. அவள் முகம் பளிச்சென்று மலர்ந்தது. அவளுடைய மாங்கல்யமேதான். ''இது....இது...'' என்றாள் மேலே பேசத் தோன்றாமல்.

''நேற்று ராத்திரி சொன்னாயே கழுத்தைக் குத்துகிறது என்று; அதற்காக ரிப்பேர் செய்ய எடுத்துப் போனேன்'' என்றான் ராகவன் சாவகாசமாகச் சட்டையைக் கழற்றியபடி.

''நன்றாகத்தான் எடுத்துப் போனீர்கள். என்னிடம் ஒரு வார்த்தை சொல்லக் கூடாதா? காலையிலிருந்து தவித்துப் போய் விட்டேன். காணாமல்தான் போய் விட்டதோ என்று''. பேசி முடிப்பதற்குள் கண்கள் பொலபொலவெனப் பொழியத் தொடங்கி விட்டன.

''வேண்டுமென்றுதான் சொல்லவில்லை. காலையில் நீ எழுந்து போனதும் பார்த்தேன். அதுபாட்டுக்குத் தலையணை அடியில் கிடக்கிறது. திரும்பப் போட்டுக் கொள்ளக்கூட நினைவில்லாமல் அப்படியொரு மறதியா?'' என்று கோபமாகக் கேட்டான்.

''எப்படியோ, திரும்பக் கிடைத்து விட்டதே அதுவே போதும். சொல்ல மறந்து விட்டேன். உங்கப்பா கடிதாசு போட்டிருக்கார். சுகந்தாவுக்கு மாங்கல்யம் செய்யப்




மாருதி – 21

1970ல் ஆரம்பிக்கப்பட்ட மாருதி கார் தொழிற்சாலை ஆண்டுக்கு ஐம்பதாயிரம் கார்கள் தயாரிக்கும் அளவில் கட்டப்பட்டது. இதுவரை தயாரிக்கப்பட்ட கார்கள்: 21!

-பாபு -இந்தியா டுடே

இரண்டே
இரண்டு
ஆண்டுகளில்
ராலி:பேன்
டிலைட்
எட்டிப்
பிடித்துள்ள
மனநிறைவான
வாடிக்கை-
யாளர்கள்
1,75,000!



ஒரு சிறந்த :பேனை வாங்க, கொஞ்சம் கூடுதல் பணம் கொடுக்க யாருமே தயங்கு-வதில்லை என்பதற்கு இதுவே சான்று.

தரமறிந்து வாங்கும் விவேகமுள்ள வாடிக்கை-யாளர்கள், தரச் சிறப்பையும் நீண்டகால சிக்கனத்-தையும் கருதி, கொஞ்சம் கூடுதல் விலை கொடுத்து வாங்கத் தயாராக உள்ளனர். உங்கள் கருத்தும் இதுவே என்றால், உங்களுக்கு உகந்தது ராலி:பேன் டிலைட்.


ஏனெனில் வேறெந்த :பேனும் கொண்டிராத, ராலியின் தனித்த தரச் சிறப்போடு கூடியது டிலைட். அதாவது பரந்த சுற்றளவிற்கு வலுவான காற்றோட்டமளிக்க நூதன பிளேட் காண்ட்டூர். குறைந்தபட்ச மின்சாரச் செலவில், அதிகபட்சக் குளுமைக் காற்றோட்டத்திற்கு வழி செய்து நீடித்துழைக்கும் மோட்டார். துருப்பிடிக்காத க்ரோம் வலையமைப்பு, ஸ்டோவ் எனாமல் முறை பூச்சிட்ட, கவர்ச்சியான ஐந்து வண்ணங்கள். அத்துடன், வேகத்தைக் கூட்டிக் குறைக்க, எளிதான பியானோ கீ ஸ்விட்ச்கள்.

இந்தச் சிறப்புகளால், ராலி:பேன் டிலைட், இரண்டே ஆண்டுகளில், நாட்டில் மிக வேகமாக விற்பனை-யாகும் விசிறிகளில் ஒன்று என்ற புகழை எட்டிப் பிடித்துள்ளது.

ராலி:பேன் டிலைட்

கவர்ச்சி குன்றாமல் காலத்தை
வென்று சுழல்வது!

U-RTF-27 tam



பணம் குறைகிறதாம். உடனடியாக ஐந்நூறு ரூபாய் அனுப்பச் சொல்லி எழுதியிருக்கிறார்'' என்று முதல் நாள் வந்த கடிதத்தை எடுத்துக் காட்டினாள் வனஜா.

படித்துப் பார்த்த ராகவன், ''அடடே... இப்ப போய் போட்டிருக்காரே. தொடர்ந்து ரெண்டு நாள் பாங்க் விடுமுறை. அக்கவுண்டிலே எடுக்க முடியாது. ஆபீஸிலே கடன் போட்டாலும் உடனே கிடைக்காது. திடீர்னு யார் கிட்டே போய் ஐந்நூறு ரூபாய் கடன் கேட்கிறது?'' என்று வருத்தப்பட்டான்.

''ஒண்ணும் கவலைப்பட வேண்டாம். ராத்திரி பஸ்ஸுக்குப் பத்மா காரைக்கால் போகிறதா சொன்னாள். அவள் மூலமா பணத்தைக் கொடுத்தனுப்பி விட்டேன்.''

''எப்படி அனுப்பினே? உன்கிட்டே ஏது பணம்? ஓஹோ! வைர மூக்குத்தி வாங்கச் சேர்த்து வைச்சிருந்தியே. அந்த ஐந்நூறு ரூபாயா?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டான் ராகவன்.

''அதுவேதான். நான் வைரமூக்குத்தி அப்புறமா வாங்கிக்கிறேன். இப்போதைக்குச் சுகந்தா கல்யாணம் நல்லவிதமா நடந்து முடியணும். அதுதான் முக்கியம்'' என்றாள் வனஜா அமைதியுடன்.

ராகவன் நன்றியுடன் மனைவியைப் பார்த்தான். காலை முதல் அவள் மனத்தில் நடந்த போராட்டங்களையும், அதனால் அவள் பெற்ற மனத் தெளிவையும் அவன் அறிய நியாயமில்லையே.

தாலியா? சலங்கையா?

விலைமகளா, குலமகளா? என்பதுதான் இப் படத்தின் கதாநாயகி சந்திராவுக்கு வாழ்க்கை விடுத்த சவால். அந்தச் சவாலை ஏற்ற சந்திரா, தன் விருப்பப்படி குலமகளாகத்தான் விரும்பியவனையே மணந்து வாழ முடிந்ததா என்பதுதான் திரைக் கதையின் கேள்வி. குலமகளாக வாழ முடியாமல் அவளுக்கு ஏற்பட்ட எதிர்ப்புக்கள் திரைக் கதையின் வலிவான பகுதி.

வாணிஸ்ரீயைப் பொறுத்த வரையில் இது ஒரு வெற்றிப் படம் என்பதில் ஐயமில்லை. மனத்தின் குதூகலத்திலும், இதயக் குமுறலிலும் அவரால் எவ்வளவு திறமையாக நடிக்க முடிகிறது!

சந்திரா, அப்பா வந்ததைப் பற்றி யாரிடமும் வெளியிடுவதில்லை என்று அம்மாவிடம் சத்தியம் செய்து கொடுத்தது படத்தை நீட்டோ நீட்டென்று நீட்டுவதற்கு ரொம்ப உதவியிருக்கிறது.

வி. கே. ராமசாமி, குமாரி சச்சு தோன்றும் நகைச்சுவைக் காட்சிகளில், அவர் மூன்றாம் தாரம் மணந்தவராக வருகிறார். ரசிகர்களிடம் கலகலப்பை ஏற்படுத்துகிறார். சச்சு, மூன்றாந் தாரத்துக்கேற்ற நொடிப்புக்களோடு நன்றாய் நடித்திருக்கிறார்.

மேஜர் சுந்தரராஜனும், பண்டரிபாயும் ராமுவின் பெற்றோர்களாக வந்து, ஆதர்ச தம்பதியராகப் படத்துக்குக் களை கட்டச் செய்கின்றனர்.

சந்திராவின் காதலன் ராமுவுக்குக் காத்திருக்க நேரம் இருக்கிறது; கொஞ்சம் பொறுமையோடு காத்திருக்க நேரமில்லை. அவசரப்பட்டு விட்டான். முத்துராமன் ராமுவாக வருகிறார்.

''கெஜ்ஜெ பூஜா'' என்ற கன்னட வெற்றிப் படம்தான் தமிழில் ''தாலியா, சலங்கையா?'' என்று மாறியிருக்கிறது.

அனுபவம் மிக்க டைரக்டர் டி. ஆர். ராமண்ணா படத்தை நன்றாக இயக்கியிருக்கிறார்.

—காந்தன்







சேரமான் காதலி

அத்தியாயம் 24

அராபிக் கடலுக்கு அப்பால்

கண்ணதாசன்

திருவஞ்சைக் களத்தில் துயர மேகம் கவிந்த நிலையில் அன்றையப் பொழுது விடிந்தது.

இரவில் நகரத்து மக்கள் யார் தூங்கினார்கள்?

சேர மன்னர் தலைமுறை காணாத நிகழ்ச்சியல்லவா நடைபெறப் போகிறது?

பாவம், யோகோவா!

அரண்மனை ரதம் அதிகாலையில் வந்த போது புறப்படுவதற்கு ஆயத்தமாக மூட்டை முடிச்சுக்களோடு அரண்மனைக்கு வந்து சேர்ந்தார்.

அழகிய மகளின் ஆனந்த வாழ்வைப் பார்க்க வந்த அவர், அடங்கிய நிலையில் அவளது சடலத்தைத்தான் காண முடிந்தது.

'தான் போவதற்கு முன்னே தங்க மகள் போய் விட்டாளே!' என்று அலறினார்.

சேரமான் அவரைத் தேற்றினார்.

அரசாங்கச் சூழ்நிலையில் உள்ள ஒருவனைக் காதலிக்கும் ஒரு பெண் மரணத்துக்கும் தயாராக இருக்க வேண்டியவள் தானே!

மரணம் அழுகையை உற்பத்தி செய்கிறது.

'நாமும் ஒருநாள் இப்படித்தானே' என்ற எண்ணம் ஆறுதலைக் கொண்டு வருகிறது.

சடலத்தை யோகோவா பார்த்த பிறகு, அந்தப் பெட்டி மூடப்பட்டு, ஆணி அடிக்கப்பட்டது.

காலையில் இருந்தே திருவஞ்சைக் களத்தில் சேரநாட்டின் படைகளின் நடமாட்டம் தொடங்கி விட்டது.

சீர்வல்லபனோ நாராயண நம்பூதிரியோ சும்மா இருப்பார்களா?

மன்னவர் அரண்மனையில் இருந்து தானே மகமதியர்களின் தொழுகை மண்டபத்துக்குப் போக வேண்டும்! எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் எதுவும் நடக்கலாம் என்ற பரபரப்பு எங்கும் காணப்பட்டது.

ஆனால் சேரமானின் மனமாற்றத்தையும், மத மாற்றத்தையும் ஒப்புக் கொண்டவர்களும் நாட்டில் இருந்தார்கள்.

'மன்னவர் தனக்கெனச் செய்து கொள்ளும் ஏற்பாட்டில் தலையிட நம்பூதிரி யார்? சீர்வல்லபன் யார்?' என்பதே அவர்கள் கேள்வி.

அவர்களிலே படைவீரர்களும் இருந்தார்கள். அவர்கள் அனைவரும் வாளும் கையுமாகக் கோட்டை வெளியில் கூடி விட்டார்கள்.

ஏறக்குறைய உள்நாட்டு யுத்தத்துக்கு ஆயத்தமான நிலை.

மகமதியர்கள் இந்தப் பரபரப்பில் மௌனம் சாதித்தார்கள். வந்தேறிய குடியினரான அவர்கள் ஒரு மதக் கலவரத்துக்கு வித்திடத் தயாராக இல்லை. ஆனால் அவர்களிடையே ஓர் ஆவலும் பரபரப்பும் காணப்பட்டது.

தங்கள் மதத்துக்கு வேறொருவர் வருகிறார் என்றால் தாங்கி அரவணைக்கும் போக்குத்தானே மற்றவர்களையும் கொண்டு வரும்?

சேர மன்னர் இன்று முஸ்லீம்களுக்கு மாப்பிள்ளையாகப் போகிறார்!

அதன் மூலம் நிரந்தரமாகச் சேரநாட்டு முஸ்லீம்கள் 'மாப்பிள்ளைகள்' என்ற பட்டத்தைப் பெறப் போகிறார்கள்.

நகரில் இருந்த பதற்ற நிலையில் வீட்டை விட்டு வெளியில் வரவே பலர் அஞ்சினார்கள்.

ஆனால் ஒவ்வொரு வீட்டிலும் மாடத்துச் சாளரங்கள் நிரம்பி வழிந்தன.

பாண்டிய நாட்டுப் படை மானிச்சன் தலைமையில் திருவஞ்சைக் களத்துக்கு இருபதாவது கல்லில் வந்து கொண்டிருக்கிறது.

மன்னவர் மதம் மாறிய உடனேயே அராபியாவுக்குப் புறப்படப் போகிறார் என்கிற செய்தி, சீர்வல்லபனுக்கோ, நாராயண நம்பூதிரிக்கோ தெரியாது.





தாவளி சகோதரிகளும் மெல்லிளங் கோதையும், வழியனுப்பத் தயாரானார்கள்.

கோட்டை வெளியில் நின்ற கூட்டம் பாதுகாப்போடு சேரமானை அழைத்துச் செல்லத் தயாராயிற்று.

சிர்வல்லபனும், நம்பூதிரியும் நம்பூதிரிகள் சபை மண்டபத்தில் அடுத்த நடவடிக்கை பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார்கள்.

தெரிந்திருந்தால் பாண்டியர் படைகள் முன்கூட்டியே வந்து அரண்மனையை வளைத்திருக்கக் கூடும்.

அந்த இரகசியத்தை அவர் சலீமாவுக்குக் கூடச் சொன்னதில்லை. 'ரகசியம் ஒருவருக்கு மட்டுமே' என்பது அவருக்குத் தெரியாதா என்ன?

யூஜியானு இஸ்ரவேல் சென்று திரும்பிய அதே கப்பலைத்தான் அவர் அராபியா செல்வதற்கு ஏற்பாடு செய்திருந்தார்.

அராபிக் கரையில் உள்ள 'சகர்முக்கல்' என்னும் துறைமுகப்பட்டினத்துக்குச் சென்று விடுவதென்று அவர் திட்டமிட்டிருந்தார்.

அப்போது ஆண்டு கி.பி. 834.

பரபரப்புக்கிடையே சேரமான் மகமதியரின் தொழுகை மண்டபத்துக்குப் புறப்பட வேண்டிய நேரம் வந்தது.

சலீமா அழகாக அலங்காரம் செய்து கொண்டிருந்தாள்.

பத்மாவதி கடைசியாக முத்தமிட்டு வழியனுப்பத் தயாரானாள்.

தொழுகை மண்டபத்தின் முன்னால் ஏராளமான கரிப் படைகளையும், பரிப் படைகளையும், காலாட் படைகளையும் நிறுத்தி வைத்திருந்தார் நாராயண நம்பூதிரி.

'என்ன நடக்கப் போகிறதோ?' என்ற பயத்தில் மௌனம் சாதித்தார்கள் மகமதியர்கள்.

'கோட்டை வெளிக் கூட்டத்தோடு மன்னவர் வருவார்; ஒரு பெரிய மோதுதல் நடைபெறப் போகிறது' என்றே அனைவரும் எதிர்பார்த்தார்கள்.

தொழுகை மண்டபத்தின் முன் படைகள் நிற்பதை ஒரு தூதுவன் சேரமானுக்குத் தெரிவித்தான்.

சேரமான் யோசனையில் ஆழ்ந்தார்.

கடைசியாக ஒரு ரத்தக் களறியையும் மதப் பூசலையும் அவர் விரும்பவில்லை.

செய்தி கொண்டு வந்த அதே தூதுவனிடம் அவர் ஏதோ ஒரு செய்தி சொல்லி அனுப்பினார்.

தாம் புறப்படுவதை இரண்டு நாழிகை தாமதிக்க வைத்தார்.

அந்தத் தூதுவன் நேரே தொழுகை மண்டபத்துக்குச் சென்று அங்கே மதம் மாற்றுவதற்காகக் காத்திருந்த மகமதியத் தலைவரிடம் ஏதோ சொன்னான்.

அவர்கள் அங்கிருந்து அமைதியாக வெளியேறினார்கள். இரண்டுநாழிகைகளுக்குப் பிறகு அழகாக அலங்கரிக்கப் பட்டசலீமாவும் சேரமானும் கோட்டை வெளியில் நின்றிருந்த ரதத்தில் ஏறினார்கள். அதே ரதத்தில் யூஜியானாவின் சவப் பெட்டியும் ஏற்றப்பட்டது.

பின்னால் நின்ற ரதங்களில் பத்மாவதியைத் தவிர மற்ற அனைவரும் சேரமான் கொண்டு செல்ல வேண்டிய பொருள்களோடு ஏறி அமர்ந்தார்கள்.

திடீரென்று, ''அப்பா!'' என்று ஒரு குழந்தையின் சத்தம் கேட்டது.

சேரமான் இறங்கி அரண்மனைக்குள் ஓடினார். தம் குழந்தையை வாங்கி மாறி மாறி முத்தமிட்டார். பத்மாவதியையும், அந்தக் குழந்தையையும் சேர்த்து ஒருமுறை முத்தமிட்டார்.

கண்ணீரோடு தம் கழுத்தில் கிடந்த பதக்கத்தை எடுத்துக் குழந்தைக்கு அணிவித்தார். மீண்டும் வெளியில் வந்து ரதத்தில் ஏறி அமர்ந்தார்.

ரதங்களையும், சுற்றி வந்த கூட்டத்தையும் நேரே துறைமுகத்துக்குப் போகும்படி ஆணையிட்டார்.

வெளியே வரும் தைரியமுள்ளவர்களெல்லாம் தொழுகை மண்டபத்தின் அருகே நின்றதால் சேரமான் சென்ற வழியில் ஆளரவமே இல்லை.

அவர் துறைமுகத்துக்கு வந்து சேர்ந்த போது சலீமாவின் தந்தை ஏற்கனவே கப்பலில் ஏறி அமர்ந்திருந்தார்.

மதம் மாற்றும் சடங்கு செய்ய வேண்டிய மகமதியத் தலைவர்களும் அங்கே இருந்தார்கள்.

சேரமான் கப்பலில் சலீமாவைத் தூக்கிக் கப்பலில் ஏற்றித் தாமும் ஏறினார்.

பின்னாலேயே யூஜியானா அடக்கம் செய்யப்பட்டிருந்த சவப்பெட்டியும் ஏற்றப்பட்டது. அனைத்தும் ஏற்றப்பட்ட பிறகு மதச் சடங்குகள் தொடங்கின.

இங்கே மத மாற்றம் நடந்துகொண்டிருக்கும் போதுதான், கப்பலில் சடங்கு நடக்கும் செய்தி நகருக்குள் பரவிற்று. அப்போதுதான் அது நாராயண நம்பூதிரிக்கும், சீர்வல்லபனுக்கும் எட்டிற்று.

அந்த நேரத்தில் பாண்டிய நாட்டுப் படைகளும் நகருக்குள் வந்து விட்டன.

அந்தப் படைகளோடு மார்த்தாண்டவர்மனும் வந்து கொண்டிருந்தான்.

எல்லோரும் துறைமுகத்தை நெருங்கிய போது கப்பல் நகரத் தொடங்கிற்று. ''சேரமான்....!'' என்று கத்தினார் நாராயண நம்பூதிரி.

சீர்வல்லபன் கண்களில் கண்ணீர் வெள்ளமாக வடிந்தது. இப்போது மார்த்தாண்டவர்மன் சீர்வல்லபனுக்கு ஆறுதல் சொல்ல வேண்டியிருந்தது.

எல்லோரது கண்ணீர் வெள்ளமும் கடலோடு கலந்த போது, சேரமான் **அப்துல் ரகிமான் சாமொரின்** பயணம் செய்த கப்பல் போய்க் கொண்டே இருந்தது.

பத்துக் கல் தூரம் போன பிறகு சலீமாவும் சேரமானும் யூஜியானாவின் சவப்பெட்டியைக் கண்ணீரோடு கடலில் இறக்கினார்கள். யூஜியானாவின் ஆன்மாவும் அவர்களுக்கு விடை கொடுத்தது.

சேரநாட்டுத் தென்னை மரங்கள் கண்ணுக்கு மறைந்தபோது தம்மையறியாமல் இரண்டு சொட்டுக் கண்ணீர் வடித்தார் சேரமான் அப்துல் ரகிமான் சாமொரின். அவரது வரலாற்றை, இப்படி முடிக்கிறார் 'சேரர் வரலாறு' எழுதிய துடிசைக் கிழார் :

''மூன்றும் சேரமான் பெருமாள் தமது முஸ்லீம் மனைவியுடன் அராபிக் கரையில் உள்ள 'சகர் முக்கல்' என்னும் துறைமுகப்பட்டினத்துக்குச் சென்று இறங்கினார். அங்கிருந்து புறப்பட்டு மெக்காவை அடைந்து அங்கே மகமதிய மதத்தைத் தழுவி அப்துல் ரகிமான் சாமொரின் என்று பெயர் மாற்றிக் கொண்டு, சிலநாள் அங்கிருந்து, பிறகு அவ்விடம் விட்டுக் கடற்கரை வழியாகவே சென்று ஜபார் என்னும் ஊரையடைந்து வாழ்ந்தார். அப்பால் உடல் தளர்ந்தது. மகமதியப் பெண்ணின் கண்காணிப்பில் இருந்து வந்தார். அவர் சேரநாட்டைப் பன்னிரண்டு பாகங்களாக வகுத்த செய்தியை 'கேமியான்ஸ்' என்பவர், அவர் எழுதிய 'உலூசியாட்' என்ற புத்தகத்தில் கூறுகிறார். இவர் ஜபார் என்னும் அந்த ஊரிலேயே கி. பி. 838-ல் இறந்து விட்டார். அவருக்கு அந்த ஊரில் சமாதி ஒன்று கட்டி அவர் உடலை அடக்கம் செய்தார்கள்.

அந்தச் சமாதியில், ''சேர அரசன் அப்துல் ரகிமான் சாமொரின் அடக்கம். இவர். ஏ. எச். 212-ல் வந்து ஏ.எச். 216-ல் இறந்தார்'' என்று அராபி மொழியில் எழுதப்பட்டிருக்கிறது என்று மிஸ்டர் 'உலோகன்' கூறுகிறார்.''

(Mr. LOGAN'S ARTICLE IN 11th Vol. INDIAN ANTIQUARY – Page 116)

ஆதாரம்:


(1) 'துடிசைக் கிழார்' எழுதிய, 'சேரர் வரலாறு' (சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு.)

(2) VIDE HISTORY OF KERALA.

(3) CHERAN VANCHI – Dr. S. KRISHNASWAMY IYYANGAR

(முற்றிற்று)

கல்கி நினைவுப் பேருரை



சென்னை பல்கலைக் கழகத்தில் கல்கி நினைவு அறக் கட்டளையின் சார்பில் டாக்டர் தா. வே. வீராசாமி அவர்கள் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து இன்று வரை நாவல் இலக்கியத்தில் காணப் பெறும் இலக்கியப் போக்கினைப் பற்றி மூன்று நாட்கள் பேசினார். பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவர் டாக்டர் பாலசுப்பிர மணியம் அவர்கள் தலைமை வகித்தார்.

முதல் நாள் உரையில் 1900ம் ஆண்டு தொடங்கி 1922ம் ஆண்டு பாரதியார் வரையுள்ள காலத்தில் தமிழ் நாவல்களில் பால்ய விவாகம், இளமையில் கைம்மை அடையும் பெண்கள் படும் அல்லல், விதவா விவாகம்— முதலிய சமூகப் பிரச்னைகள் ஆராயப்படுவதைக் குறிப்பிட்டார். அதற்குப் பின் பாரதி காலம் தொடங்கி 1947ல் நாடு சுதந்திரம் அடையும் வரையில் பிறந்த நாவல்களில் தேசிய உணர்ச்சி, விடுதலைப் போராட்ட உணர்ச்சி மேலெழுந்து நின்றதைக் குறிப்பிட்டார். 1947க்குப் பிறகு பல்வேறு சமூகப் பிரச்னைகளை—பால் உணர்ச்சி வேகத்தில் எழும் பிரச்னைகள் உள்பட - அடிப்படையாகக் கொண்டு நாவல்கள் எழுதப் பட்டமையைக் குறிப்பிட்டார்.

மொத்தத்தில் இந்த மூன்று நாட்களில் சுமார் ஐந்நூறு நாவல்களின் கதைச் சுருக்கங்களை டாக்டர் வீராசாமி வழங்கியபோது, சபையோர் ஜீரணிக்க முடியாமல் திணறிப் போய் விட்டார்கள். இவ்வளவு நாவல்களைப் படித்து எப்படித்தான் டாக்டர் வீராசாமி குழம்பிப் போகாமல் இருக்கிறாரோ என்ற வியப்பு ஏற்பட்டது.

பல்கலைக் கழகத்தின் ஆதரவில் ஒரு சொற்பொழிவு நடைபெறுகிறது என்றால், அதனில் ஆராய்ச்சிபரமான விஷயங்கள் ஏதாகிலும் இருக்கும் என்று அவையோர் எதிர்பார்ப்பது இயல்பு.

இலக்கிய விமர்சனமாக அமையாமல் எழுபத்தைந்தாண்டுகளில் வெளியான நாவல்களின் கதைச் சுருக்கத்தோடு கூடிய அட்டவணையாகத்தான் இருந்தது இந்த மூன்று நாட்கள் உரையும். ஆனால் ஒன்று. டாக்டர் வீராசாமி சற்று இலக்கிய விமர்சனத்தில் இறங்கி யிருப்பாரேயாகில் ஏதோ ஒரு சில நாவல்களைப் பழித்தும், ஒரு சில நாவல்களைப் போற்றியும் பேச வேண்டி யிருந்திருக்கும். இது ஒரு சிலருடைய மனத்தைப் புண்படுத்தும்; வேறு சிலரை மகிழ்விக்கும். டாக்டர் வீராசாமி தம் பேச்சின் மூலம் யாருடைய ஏச்சுக்கும் இலக்காகவில்லை!

அது ஒருபுறமிருப்பினும் கடந்த சுமார் எழுபத்தைந்து ஆண்டுகளில் வெளியாகியுள்ள ஏராளமான நாவல்களைத் தேடிப் பிடித்துப் படித்து, அவற்றைப் பாகுபாடு செய்து விவரங்கள் கொடுப்ப தென்பதே மலைக்க வைக்கும் ஒரு காரியம்தான். அதனைச் செவ்வனே செய்திருக்கிறார் திரு வீராசாமி. —எஸ்.வி.எஸ்.

"பத்திரிகை உலகின் தந்தை!"


ஆங்கில அரசாட்சியின் கெடுபிடி மிகுந்த காலம். ஸர் டி. முத்துசாமி ஐயர் சென்னையில் நீதிபதியாக நியமனம் ஆனது பற்றி ஆங்கிலேயர்கள் கண்டனம் தெரிவித்தனர். ஸர் டி. முத்துசாமி ஐயரின் திறமைகளைச் சுட்டிக் காட்டித் துணிவுடன் ஆங்கிலேயர்களுக்கு மறுப்புத் தெரிவிக்கத் தொடங்கியது தான் 'ஹிந்து' பத்திரிகை. இந்தத் துணிச்சலான காரியத்தைச் செய்தவர் ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயர். 'ஹிந்து', 'சுதேசமித்திரன்' ஆகிய பழம்பெரும் பத்திரிகைகள் இரண்டையும் தொடங்கி வைத்த பெருமை இவருக்கு உண்டு. அந்தக் காலத்தில் தைரியமாகத் தம் மகள் ஒருத்திக்கு விதவா விவாகம் செய்து வைத்தார். 'தேசிய நிதிக் கழகம்' ஒன்று தொடங்கி, தீபாவளி அன்று உண்டியல் குலுக்கிச் சேர்த்த பொருளைக் கொண்டு புத்திசாலி ஏழை மாணவர்களை அயல்நாடுகளுக்குக் கல்வி கற்க அனுப்பி வைத்தார்.

இன்னும் இரு வருஷங்களில் ஸ்ரீ. சுப்பிரமணிய ஐயரின் நூற்றாண்டு விழா வரவிருக்கிறது. அவரது வரலாற்று நூலும் அவரைக் கௌரவிக்கும் விதமாகத் தபால் தலையும் வெளியிட வேண்டும் என்று "திறனாய்வு வட்டம்" நடத்திய நினைவு நாள் விழாவில் அறிஞர்கள் கோரினர். -பி.எஸ்.எம்.





'ஒளிரும்' வெண் சலவைக்கே
Supreme
det
detergent washing cake
for whiteness that 'Glows'
சுப்ரீம் டெட் டிடர்ஜெண்ட் சலவைக் கட்டி
பெற்ற புதிய டெட்
ார்க்கெட்டில் விற்பனையாகும்
ர்ஜெண்ட் கட்டி.
ருக்கும் ஆற்றலுக்கு, நுரை
கு, நறுமணத்திற்கு, வேறு எந்த
கட்டியும் இதற்கு ஈடாகாது!
த்துப் பாருங்கள். அதன் வேறுபாட்டைக்
காணுங்கள். ஆம் அதுதான் சுப்ரீம்
'ஒளிரும்' வெண்மைக்கே!
பளிச்சிடும் வெண்மை,
டெட் தரும் வெண்மை





○ கலெக்டர் வருகிறார்....!

ஒரு கலெக்டர் கடமையாற்றுகிறார்!

ஒரு வெள்ளிக் கிழமை அதிகாலை நேரம். கடற்கரையை ஒட்டியுள்ள கிராமம் ஒன்றில் திடீர்க் கூடாரம் தோன்றி யிருக்கிறது.

சுற்றுப் புறக் கிராமங்களிலிருந்து மக்கள் கூடாரத்தை நோக்கி வரிசை வரிசையாக, கூட்டம் கூட்டமாகப் போய்க் கொண்டிருக்கிறார்கள். மக்கள் கூட்டத்தோடு நூற்றுக் கணக்கான ஆடுகளும் செல்கின்றன. திருவிழாக் காலங்களில் வழக்கமாக வரும் புதிய மிட்டாய்க் கடைகள், காப்பி ஹோட்டல்கள், குடை ராட்டினங்களும் காணப்படுகின்றன!

இதைப் பார்த்த ஒருவர் "காரியம்மன் கோவில் திருவிழா மாதம் இல்லையே இது?" என்று வியப்புடன் கேட்க இன்னொருவர் சொல்கிறார்:

"நெல்லை மாவட்டக் கலெக்டர் சுந்தரம் காரிகோயில் கிராமத்தில் கூடாரம் போட்டுத் தங்கி யிருக்கிறார்." கேட்டவர் கண்களில் ஆனந்தக் கண்ணீர் துளிர்க்கிறது. "அன்று காந்தி கண்ட கனவு இதுதாங்க... மகாராசன் இந்தக் கலெக்டராவது அதை நிறைவேற்ற இந்தக் குக்கிராமத்துக்கு வந்திருக்கிறாரே" என்று சொல்லி அவரும் கூடாரத்தை நோக்கி விரைகிறார்.

'திமுதிமு' என வந்திருக்கும் மக்கள் கூட்டத்தில் கலெக்டர் மலர்ந்த முகமாகக் குறைகளைக் கேட்டு அறிகிறார். அந்த இடத்திலேயே உடன் வந்திருக்கும் அதிகாரிகளைக் கலந்து உடனடியாக உத்தரவுகள் போட்டு ஏழைகள் பிரச்னைகளைத் தீர்த்து வைக்கிறார்.

ஒருவர், "எங்கள் கிராமத்துக்கு பஸ் ஓட உத்தரவாக வேண்டும்" என்று ஒரு பக்தனைப்போலக் கரம் குவித்து 'வரம்' கேட்கிறார். கலெக்டர் சிரித்த முகமாக மண்டலப் போக்குவரத்து அதிகாரியைப் பார்க்க — அவரும் முறுவலித்தபடி அந்த இடத்தை விட்டு வேகமாகப் போய் விடுகிறார். கூட்டத்தினர் ஒன்றும் புரியாமல் திகைத்து நிற்கச் சில நிமிடங்களில் விழாப் பந்தலை நோக்கி "பூம், பூம்" என்ற ஓசையோடு கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக பஸ் ஒன்று வந்து சேர்கிறது.

கூட்டத்தினருக்கு ஒரே ஆச்சரியம். குறையைச் சொன்ன மறு நிமிடமே கட்டபொம்மன் பஸ் எப்படி வந்தது? என்று திகைக்கும் போதே கலெக்டர் சுந்தரம் கணீரென்ற குரலில், "நிச்சயம் என்னிடம் உங்கள் ஊருக்குப் பஸ் விட வேண்டும் என்று கேட்பீர்கள் என்று எனக்குத் தெரியும். எனவே அதற்கான ஏற்பாடுகளைச் செய்து விட்டே வந்தேன்" என்றாரே பார்க்கலாம். ஒரே மகிழ்ச்சி, ஆரவாரம்.

அடுத்து மந்தை மந்தையாக நிற்கும் ஆடுகளை வறட்சியால் பாதிக்கப்பட்ட பனைமரத் தொழிலாளர்களுக்கு வழங்கினார். உடல் ஊனமுற்ற சில பேர்களுக்கு உதவித் தொகைகளும், வயதான பலபேர்களுக்கு முதியோர் பென்ஷன் பணமும் வழங்க அந்த இடத்திலேயே உத்தரவும் கையெழுத்தும் போட்டார்.

ஆசிரியர் பயிற்சி பெற்றுப் பல வருஷங்களாக வேலையில்லாமல்



○ அன்பைப் பொழிகிறார்...!

திண்டாடிய ஏழை ஆசிரியைக்கு வேலையும், குடி தண்ணீர் வசதியில்லாத பல ஊர்களுக்குக் குடிநீர்த் திட்டங்களுக்கு அனுமதியும் உடனே வழங்கினார்.


தமிழ் நாட்டிலேயே முதன் முதலாகக் குக்கிராமத்துக்குப் போய்க் கூடாரம் போட்டு இரவில் தங்கி மக்கள் குறைகளைக் கேட்டவர் நெல்லை கலெக்டர் வி. சுந்தரம்.

வீரவநல்லூர் வட்டாரத்தில் ஓர் ஹரிஜனக் காலனியில் நடைபெற்ற சமபந்திப் போஜனத்தில் கலெக்டர் சுந்தரம் தம் மனைவி பத்மா சுந்தரத்தோடு கலந்து கொண்டார்.

கிராம மக்களின் குறைகளைக் கேட்டறிந்ததோடு அவர்கள் சுகாதாரத்துடன் எப்படி வாழ வேண்டும் என்பதைக் கலெக்டர் சுந்தரம் விளக்கிக் கூறினார்.

ஒரு குழந்தையைக் கலெக்டரிடம் கொடுத்துப் பெயர் வைக்கச் சொன்னார் ஹரிஜன விவசாயி ஒருவர். உடனே கலெக்டர் சுந்தரம் அந்தக் குழந்தைக்கு ''அம்பேத்கார்' என்று பெயர் சூட்டியதோடு குழந்தையைத் தம் மனைவி பத்மா சுந்தரத்திடம் கொடுத்து வாழ்த்தச் சொன்னார். அம்மையார் மகிழ்ச்சியோடு குழந்தை முகத்தில் முத்தமிட்டு வாழ்த்திய காட்சி கூடியிருந்த மக்களுக்கு உற்சாகத்தையும் பூரிப்பையும் கொடுக்க, 'கலெக்டர் சுந்தரம் வாழ்க!' என்று கோஷம் போட்டார்கள். விழா இறுதியில் தமக்கு அளித்த கைத்தறி ஆடைகளை ஹரிஜன விவசாயிகளுக்கே அன்பளிப்பாகக் கொடுத்தும் பல ஹரிஜன விவசாயிகளுக்குத் தம் கையாலேயே கைத்தறி ஆடைகளைத் தலைப்பாகையாகக் கட்டி விட்டும் அவர்களை உற்சாகப்படுத்திவிட்டு விடைபெற்றுக் கிளம்பினார் அதிசய மனிதர் சுந்தரம்.

— தி. சுவாமிநாதன்




VOLTAS

இப்போது

உண்மையிலேயே ஆட்டோமாடிக் டி:ப்ராஸ்டிங் வசதி உள்ள வோல்டாஸ் ஓபல் 160 ஆடோ-D ஆப்ஷன் கொண்டது.


முதல் தரத்தில் முதலீடு செய்க

ஆட்டோ-D அளிக்கும் பல்வேறு பயன்கள்:




பட்டன் அமுக்க வேண்டிய அவசியமில்லை!

இந்த ரெ:ப்ரிஜிரேடரில் உள்ள ஸ்விட்ச் இரவு தோறும் தானாகவே அணைந்து திரும்பவும் இயங்குகிறது. அதன் விளைவு, தானாகவே டீ:ப்ராஸ்ட் செய்து கொள்கிறது.




ட்ரேயை காலி செய்யத் தேவையில்லை!

இதில் தண்ணீரை ஆவியாக மாற்றும் ஒரு இணையற்ற ஆட்டோமாடிக் வசதி உள்ளிணைக்கப்பட்டுள்ளது. அது உங்கள் வேலையை எளிதாக்கி, நீங்கள் ஆச்சரியிக்கும் வண்ணம் தண்ணீரை வெளியேற்றி விடுகிறது!



குறைந்த மின்சார கட்டணம்!

தண்ணீரை வெளியேற்றும் ஆட்டோமாடிக் வசதி உங்கள் வேலையை எளிதாக்குவதோடல்லாமல் அதிகபட்சமான குளிர்ச்சியையும் பெற வழி செய்கிறது. அதன் பயனாக மின்சார கட்டணம் மாதந்தோறும் குறைகிறது.



வோல்டாஸ் ஓபல் 160—ஆட்டோ-D ஆப்ஷன் இணைந்த ஒரே மீடியம் சைஸ் ரெ:ப்ரிஜரேடர். இன்றே உங்கள் விற்பனையாளரிடம் சென்று பார்வையிடுங்கள்.

வழங்குவோர்:
வோல்டாஸ்
குளுமை தருவதையே குறிக்கோளாகக் கொண்டவர்கள்.

அங்கீகாரம் பெற்ற வோல்டாஸ் விற்பனையாளர்களிடம் கிடைக்கிறது—அவர்களோடு தொடர்பு கொள்ளுங்கள்.

வோல்டாஸ் லிமிடெட்

பம்பாய் • கல்கத்தா • புது தில்லி • சென்னை • பெங்களூர் • லக்னோ • ஜம்ஷெட்பூர் • அஹமதாபாத் • செகந்தராபாத் • கொச்சி • கான்பூர்

CHY-314-203 TAM

சிலம்புச் செல்வம்

ம.பொ.சி



கண்ணகி நினைத்தாள், தன் கையில் உள்ள ஒற்றைச் சிலம்பைக் கண்டதுமே அதன் இணைச் சிலம்பு கோவலனிடமிருந்து தான் கவர்ந்தது—என்ற உண்மை மன்னனுக்குப் புலனாகியிருக்கும் என்று. "கணவனை இழந்தாள் கடையகத்தாள்" என்று வாயிற் காவலன் மூலம் தான் அனுப்பிய செய்தியை மன்னன் கேட்டு விட்டானாகலால், தன்னால் கொல்லப்பட்ட கோவலனின் மனைவி தான் தன் எதிரே வந்து நிற்கிறாள் என்பதை அவன் உணர்ந்திருப்பான் என்று நம்பினாள். இதற்கு மாறாக,

"யாரையோ, நீ
மடக் கொடியோய்!"

என்று மன்னன் கேட்டதால், "தேரா மன்னா! உண்மையை அறிந்து கொள்ள முடியாத மன்னனே!" என்று அழைத்து, "சொல்கிறேன், கேள்" என்றாள் கண்ணகி.

"செங்கோல் பிறழாத மன்னர்களால் வழி வழி ஆளப்பட்டு வரும் சோழ நாட்டின் குடிமகள்" என்று பெருமிதத்துடன் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளுகிறாள். ஒரு புறாவின் உயிரைக் காக்கத் தன் உடம்பிலிருந்து சதையை அறுத்துக் கொடுத்த சிபிச் சக்கரவர்த்தி, கன்றை இழந்த பசுவுக்கு நீதி வழங்கும் பொருட்டுத் தன் ஒரே மைந்தன் மீது தேரேற்றிய மனுநீதிச் சோழன்—ஆகிய சோழ மன்னர்களின் பெருமையைப் பேசுகிறாள். ஒரு சொற்பொழிவே நிகழ்த்துகிறாள். அதைக் கேட்போம்:

"எள்ளறு சிறப்பின்
இமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண்
தீர்த்தோன்; அன்றியும்
வாயிற் கடைமணி
நடுநா நடுங்க
ஆவின் கடைமணி
உகுநீர் நெஞ்சுசுட, தான்தன்
அரும்பெறல் புதல்வனை
ஆழியின் மடித்தோன்;
பெரும் பெயர்ப்
புகார் என்பதியே."

கண்ணகி 'தேரா மன்னா!' என்று தன்னைப் பழித்துரைத்ததைக் கேட்டும் மன்னன் சினம் கொள்ளவில்லை. அமைதி காத்து அவளுடைய வழக்கைக் கேட்டு அறிந்தான். அதற்கு மேல் அவள் தொடுத்த அப்பீல் வழக்கு பற்றித் தனது நிலையைத் தெளிவுபடுத்துபவனாகி,

"பெண் அணங்கே!
கள்வனைக் கோறல் கடுங்கோலன்று
வெள்வேற் கொற்றம் காண்"

என்று கூறினான். கண்ணகி, எதைப் பாண்டியன் செய்த குற்றமாகக் கூறினாளோ, அதுவே தனது செங்கோலுக்குரிய கொற்றம் என்கிறான் பாண்டியன்.

சிலப்பதிகார காலத்தில் களவானது, கொலையினும் கொடிய குற்றமாகக் கருதப்பட்டது. வள்ளுவரும், "கொலையிற் கொடியாரை வேந்து ஒறுத்தல் பைங்கூழ் களைகட்டதனொடு நேர்" என்று கூறினாரல்லவா?

"கொலையிற் கொடியார்" என்று வள்ளுவர் குறிப்பிடுவது கள்வர்களையே யாகும். இந்தக் குறட்பாவை நினைவில் வைத்தே கள்வனான கோவலனைத் தான் கொல்லுவித்தது குற்றமல்ல; கொற்றம் — என்கிறான் பாண்டியன். மன்னனது விளக்கத்தைக் கேட்டுக் கண்ணகியின் சீற்றம் அதிகரித்து விட்டது.

"நற்றிறம் படராக் கொற்கை வேந்தே!"
என்று அழைத்து,

"என் காற் பொற்சிலம்பு மணியுடை
அரியே"

என்றாள். மன்னனும் சற்றும் தயங்காமல்,

"தேமொழி உரைத்தது செவ்வை நன்மொழி
யாமுடைச் சிலம்பு முத்துடை அரியே!"

என்று கூறினான். அத்துடன் நிற்காமல், கோவலனிடமிருந்து முன்னர் பொற்கொல்லன் கைப்பற்றிக் கொண்டு வந்த சிலம்பினை அவைக்குக் கொண்டு வரச் செய்தான்.

அந்தச் சிலம்பைக் கண்டதும் கண்ணகி தேவி சீற்றத்தின் சிகரத்துக்கே சென்றுவிட்டாள். தன் காலிலிருந்தே ஒலியெழுப்பித் தன்னை மகிழ்வித்தது எந்தப் பொற்சிலம்போ, அந்தச் சிலம்பே, தான் தன் கணவனைப் பறிகொடுக்கக் காரணமானதை நினைத்து, அந்தச் சிலம்பைத் தன் கண்ணால் கண்டதுமே கடுங்கோபம் கொண்டாள். அரசவையில் வைக்கப்பட்ட அந்தப் பொற்சிலம்பைத் தன் கையால் எடுத்து, ஆவேசம் கொண்டவளாகி, அவையோர் கண் முன் தரையில் அடித்து நொறுக்கினாள். சிலம்பிலிருந்து மாணிக்கக் கற்கள் சிதறி ஓடின. அவற்றில் ஒன்று மன்னவன் உதட்டில் பட்டு, கிழித்தது.

இந்த இடத்தில் ஓர் ஆராய்ச்சி தேவைப்படுகிறது. கண்ணகி, "என் காற் சிலம்பு மணியுடை அரியே!" என்று கூறியபோது, மன்னனும், "யாமுடைச் சிலம்பும் மணியுடை அரியே!" என்று சொல்லியிருப்பானாகில், கண்ணகி தொடுத்த அப்பீல் வழக்கு என்ன ஆகியிருக்கும்? (தொடரும்)

(மயிலை இலக்கிய வட்டத்தில் நிகழ்த்திய சொற்பொழிவிலிருந்து)

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600 031.
Managing Editor: T. Sadasivam. Associate Editor: K. Rajendran.


வாரீர்
புதுமை
தவழ்ந்திட.
Liril
THE FRESHNESS SOAP
Liril
பார்த்தறியாப் புதுமை. பரவசக் கிளுகிளுப்பு.
லிரில். அலைவெறியும் தளதள பச்சை. அதன்
நயமோ குளுகுளு எலுமிச்சை...புதுக்
குமரியாய் உங்களைப் பூரித்தெழ வைக்கும்.
லிரில்
புத்துணர்வு சோப்
மணம்குளிரும் எலுமிச்சைப் புத்துணர்ச்சி வெள்ளம்.
லின்டாஸ்.LR.28-203 TM
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

ADDISON

CARBIDE TIPPED TOOLS for faster production

The high hardness and wear resistance of Carbide Tipped Tools contribute to faster speeds and feeds, better finish, longer edge life, greater dimensional control and closer tolerances.


Our current manufacturing range includes **Drills** (including masonry drills) **Reamers, End Mills, Slot Drills, Side and Face Cutters, Shell End Mills and Face Cutters.**

ADDISON & CO.,LTD MADRAS-2

(A Member of the Gauge and Tool Makers' Association, U.K.)

BRANCHES AT :

1. 53, St. Mark's Road,
Bangalore - 560 001
2. 97, Gowalia Tank Road,
Cumbulla Hill, Bombay - 400 036
3. 7-B, Mandavalle Garden, Gariahat,
Calcutta - 700 019
4. 1-E/16, Jhandewalan Extension,
New Delhi - 110 055



ATW-44